விலை : 20.00
பக்கங்கள்:இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 மாசி 05 வெள்ளிக்கிழமை (17.02.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 060

SPEED
PURIFIED DRINKING WATER
சுத்தமான குடி தண்ணீர்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள
மங்கல நிகழ்வுகள், விடுதிகள்,
ஹோல்கள் (Hall)
விசேட விலைக்கழிவு
வழங்கப்படும்.
ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5392

## கேப்பாப்பிலவு, வலி.வடக்கு மீள்குடியேற்றம்; வலியுறுத்தி யாழில் 22ஆம் திகதி போராட்டம்

(யாழ்ப்பாணம்)

கேப்பாப்பிலவு, வலி.வடக்கு மக்களின்மீள்குடியேற்றத்தை வலியுறுத்தியும் அதற்கு ஆதரவு தெரிவித்தும் தெற்கு சகோதரர்களும் இணையும் மாபெரும் மக்கள் போராட்டம் எதிர்வரும் 22ஆம் திகதி யாழ்.நகரில் நடைபெறவுள்ளது. தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கமும், கிராமிய உழைப்பாளர் சங்கமும் இணைந்து யாழ்.நகரில் இந்த போராட்டத்தை நடத்தவுள்ளதாக கூட்டாக அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

அந்த அறிக்கையில், கேப்பாப்பிலவு மக்களின் வாழ்விடங்கள் எந்த நிபந்தனையுமின்றியும், தாமதமின்றியும் வழங்கப்பட வேண்டும். வலி.வடக்கு மக்களின் மீள்குடியேற்றம் எப்போது? காணாமல் ஆக்கப்பட்டோரின் முடிவு என்ன? அரசே பதில் சொல்! அரசியல் கைதிகளின் விடுதலை எப்போது? நல்லாட்சியின் போலி முகமே பதில் சொல். மக்களின நிலம் மக்களுக்கே சொந்தம். இராணுவமே மக்களின் நிலங்களை விட்டு வெளியேறு போன்ற கோரிக்கைகள் மற்றும் கோஷங்களை முன்வைத்து எதிர்வரும 22ஆம் திகதி தெற்கு மக்களையும் ஒன்றிணைத்து மாபெரும் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

யுத்தம் நிறைவடைந்து 8 வருடங்கள் கடந்து விட்டன. ஆனால் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் இன்னும் சொந்த இடங்களில் மீள்குடியேற்றம் செய்யப்படாமல் எந்தவித அடிப்படை வசதிகளும் இல்லாமல் நடுத்தெருவில் விடப்பட்

23ஆம் பக்கம் பார்க்க....

## நல்லாட்சியை விமர்சிக்க மகிந்த அருகதையற்றவர்

### நிதியமைச்சர் ரவி சாடல்

(கொழும்பு)



தான்தோன்றித்தனமாக கடன்களைப் பெற்று வீண் விரயம் செய்து இறுதியில் ஒன்றுமே செய்யாமல் தோல்வியடைந்துள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நல்லாட்சி அரசாங்கத்தின் நடவடிக்கைகளை விமர்சிக்க அருகதையற்றவர்

23ஆம் பக்கம் பார்க்க....

## தாய் நிலத்துக்கான மக்களின் குரலோடு நாம் இணைவோம்

### தமிழ் மக்கள் பேரவை வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

பனியிலும் வெயிலும் கடும் அச்சுறுத்தல்களின் மத்தியிலும் தமது நிலம் தமக்கே வேண்டும் என்ற ஓர்மத்துடன் போராடி வருகின்ற கேப்பாப்பிலவுக் குடியிருப்பு மக்களின் போராட்டத்துடன் தமிழ் மக்கள் பேரவையும் கைகோர்ப்பதாக அறிவித்துள்ளதுடன், அனைத்து மக்களையும் இன, மத பிரதேச பேறுபாடின்றி நீதிக்காக போராட்ட மக்களின் குரலுக்கு ஆதரவு வழங்குமாறும் அவ் அமைப்பு கேட்டுக்கொண்டுள்ளது.

கோப்பாப்பிலவு பிலவுக்குடியிருப்பு மக்களின் போராட்டம் தொடர்பாக தமிழ் மக்கள் பேரவை நேற்று விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,

இலங்கை இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமது சொந்த நிலங்களை தமக்கு மீளக்கையளிக்க கோரி முல்லைத்தீவு மாவட்டத்தை

04ஆம் பக்கம் பார்க்க...

## கேப்பாப்பிலவு மக்களின் உறுதியான

# போராட்டத்தை குழப்ப விமானப்படையினர் சதி

### புகைப்படம் எடுத்து அச்சுறுத்தல்



(பனிக்கன்குளம்)

காணிவிடுவிப்பை கோரி தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் கேப்பாப்பிலவு மக்களையும் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கி வருபவர்களையும் அங்கு நிலைகொண்டுள்ள விமானப் படையினர் புகைப்படம் எடுத்து மறைமுக அச்சுறுத்தலை விடுத்து வருவதாக கேப்பாப்பிலவு மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

23ஆம் பக்கம் பார்க்க...





## தமிழக முதல்வரானார் பழனிச்சாமி



(சென்னை)

தமிழகத்தின் புதிய முதலமைச்சராக எடப்பாடி பழனிச்சாமி நேற்று மாலை பதவியேற்றுக் கொண்டார். ஆளுநர் வித்யாசாகர் ராவ் அவருக்கு தமிழக முதல்வராக பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். இதன்படி தமிழகத்தின் 12-வது முதல்வராக தற்போது பழனிச்சாமி பதவியேற்றுள்ளார்.

முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான 30 பேருக்கு

24ஆம் பக்கம் பார்க்க....

## தரம் - 5



புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் இன்றைய வலம்புரியில்...

## காணாமல்போன ஆசிரியை காட்டிற்குள் சடலமாக மீட்பு!

(வவுனியா)



வவுனியாவில் உள்ள பாடசாலை ஒன்றில் கடமையாற்றி வந்த தொண்டர் ஆசிரியை ஒருவர் காணாமல் போயிருந்த நிலையில் சுமார் ஒன்றரை மாதங்களின்

23ஆம் பக்கம் பார்க்க...

## ஐரோப்பிய ஒன்றியத்தின் வீட்டுத்திட்டம் கிளிநொச்சியில் நேற்று அங்குரார்ப்பணம்

(பரந்தன்)



ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி அனுசரணையில் நடைமுறைப்படுத்தப்படும் வீட்டுத்திட்டத்திற்கான அங்குரார்ப்பண நிகழ்வு கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்றது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான தூதுக்குழுவின் தூதுவர் ஹிடுங்லாய் மர்கியு சிறப்பு விருந்தினராக

23ஆம் பக்கம் பார்க்க...

## கொழும்பு நகரில் சட்டவிரோதமாக 1800 கட்டிடங்கள்

(கொழும்பு)

கொழும்பு நகரில் மாத்திரம் சுமார் 1800 சட்டவிரோத கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக நகர மேல் மாகாண மற்றும் பெரு நகர அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அவர், கட்டடங்களை அமைப்பதற்கான அனுமதியை வழங்கும் அதிகாரம் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கே காணப்படு

23ஆம் பக்கம் பார்க்க...

## த.தே.கூட்டமைப்பிலுள்ள அங்கத்துவ கட்சிகள் கட்சித் தலைமையை நிராகரிக்க வேண்டும்

### அநீதிக்கு முற்றுப்புள்ளி இடுங்கள் என்கிறார் கஜேந்திரகுமார்

(யாழ்ப்பாணம்)



தமிழ் மக்கள் பேரவையில் அங்கம் வகிக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் உள்ள கட்சிகள் தமது மோசடி மிக்க தலைமையை நிராகரித்து எமது மக்களுக்காக நேர்மையான அரசியலை கொண்டு செல்ல முன்வர வேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ்ப்பாண கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

தமிழ் மக்களின் எதிர்காலம்

23ஆம் பக்கம் பார்க்க...

## அ.தி.மு.க தொண்டர் நேற்று தீக்குளிப்பு

(சென்னை)

தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் பன்னீர்ச்செல்வம் மீளவும் முதலமைச்சராக பதவியேற்க வேண்டுமென தெரிவித்து அதிமுக தொண்டர் ஒருவர் தீக்குளித்ததால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

தமிழகத்தின் முதல்வராக ஓ.பன்னீர்ச்செல்வம் வர வேண்டும் என பொதுமக்களும், அதிமுக அடிமட்ட தொண்டர்களும் பெருவாரியாக

04ஆம் பக்கம் பார்க்க...

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## பகிரங்க ஏல விற்பனை

உடையார்கட்டு தெற்கு கமக்கார அமைப்பினால் பிடிக்கப்பட்ட உரிமை கோரப்படாத, குறிகள் அற்ற, கறுப்பு நிறம் உடைய எருமை மாடு (நாகு) ஒன்று 2017.02.21 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு உடையார்கட்டு கமநல சேவை நிலையத்தில் ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது. இம்மாட்டினை ஏலத்தில் வாங்குபவர் அன்றைய தினமே அதற்குரிய பணத்தினை முழுமையாக காசாக கமநல சேவைகள் குழுவிற்கு செலுத்தி, பற்றுச்சீட்டை பெற்று எடுத்துச் செல்லுதல் வேண்டும்.

**தொடர்புகளுக்கு :** **021 206 1907**

**நிறைவேற்று செயலாளர், கமநல சேவைக்குழு, கமநல சேவை நிலையம், உடையார்கட்டு.**

(7979)

## முதிரைக் குற்றிகள் மீட்பு

(கரணவாய்)

இரகசியமான முறையில் வேறு பகுதிகளுக்கு கடத்தப்படவிருந்த பன்னிரண்டு முதிரை மரக்குற்றிகளை தாம் மீட்டுள்ளதாக முழங்காவில் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று பிற்பகல் 5.30 மணியளவில் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றின் அடிப்படையில் முழங்காவில் அடர்ந்த காட்டுப் பகுதியினைச் சோதனையிட்ட போது பன்னிரண்டு முதிரை மரக் குற்றிகளும் மீட்கப்பட்டதாக அவர்கள் தெரிவித்தனர். (செ-60)



## பாராட்டி வாழ்த்துகிறோம்




இலங்கை நூலகச் சங்கத்தின் யாழ் நிலையத்தின் ஒருங்கிணைப்பாளராக 2017 ஜனவரியிலிருந்து நியமிக்கப்பட்டுள்ளார். யாழ்.மாநகரசபையின் நூலகராக 34 வருடங்கள் சேவையாற்றி வரும் பட்டைய நூலகர் நிலையையும் இலங்கை நூலக சங்கத்தின் ஒருங்கிணைப்பாளராகவும் உள்ளூராட்சி மன்ற சபையிலிருந்து முதல் முதலாக தெரிவு செய்யப்பட்டவருமான திருமதி பொற்செல்வி ஸ்ரீரஞ்சன் அவர்களை பாராட்டுவதில் மகிழ்வடைகின்றோம்.

*வாழ்த்துவோர்:* **நூலக சமூகம், யாழ்ப்பாணம்.** (7977)

## Immediate Vacancies for the post of receptionist in a class hotel

Male / Female

First priority will be given to,

- Experience persons in similar capacity
- Preferred with knowledge of speaking three languages
- Must be fluent in Sinhala and English
- Must be a self decision maker

" Time is gold for all "

**For more details please contact : 0759396600**

## தேவை

**யாழ்.நகரின் பிரபல்ய ஆடம்பர விடுதி ஒன்றிற்கு வரவேற்பாளர் தேவை. (ஆண், பெண் - இருபாலாரும்)**

01. அனுபவம் பெற்றவருக்கு முதல் இடம்.
02. மும்பாசை தெரிந்தவருக்கும் முதல் இடம்.
03. அல்லது முழுமை தமிழ், ஆங்கிலம், பேச, எழுத படிக்க தெரிந்தவர்கள்.
04. அல்லது முழுமை சிங்களம், தமிழ், ஆங்கில பேச்சு அறிவு உள்ளவர்கள்.

குறிப்பு : மேற்கூறிய கட்டுக்கோப்புக்குள் அடங்கியவர்களும், தானாவே முடிவு எடுக்கக்கூடியவரும் மட்டுமே, நேர்முகப் பரீட்சைக்கு வரலாம்

*(நேரம் எல்லோருக்குமே பொன்னானது)* (சி-7575)

## போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்

**புதிய பிரிவுகள்**

**சட்டமாணி நுழைவுக்கு**
சனி, 9.00 - 4.00 மணிவரை
ஞாயிறு 1.00-5.00 மணி வரை

**ஆசிரியர் தெரிவுக்கு**
பிரதி சனி 10.30 - 2.00

**SLAS, SLEAS உயர் பரீட்சைகளுக்கு**
சனி 11.00 - 4.00

**பல்கலைக்கழக விசேட கற்கை தெரிவுக்குரிய உளச்சார்பு**
பிரதி சனி 2.00 - 5.00

**NSB பதவியுயர்வு**
சனி, ஞாயிறு பி.ப 5.00 - 7.00 மணிவரை

**சகல பரீட்சைகளுக்குமான வகுப்புக்கள் நடைபெறுகின்றன**

**076 688 3394, 021 222 3382**

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப் படிப்புக்கள் பிரிவு (யாழ்.ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கி அருகில்)

## இலவசக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

பங்குச்சந்தைமுதலீட்டு ஆர்வலர்களுக்கு முதலீடுகள் தொடர்பான அடிப்படை விடயங்களை எடுத்துரைக்கும் கருத்தரங்கு நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு தொடக்கம் 11 மணிவரை கொழும்பு பங்குப் பரிவர்த்தனை கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

கருத்தரங்குநிறைவில் முதலீட்டு ஆலோசகர்கள் சந்திப்பும் நடைபெறவுள்ளதால் ஆர்வலர்கள் கலந்த பயன் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான மேலதிக தகவல்களுக்கு 021 222 1455 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்பை ஏற்படுத்துமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (செ)

## K-AIMS ENGLISH SCHOOL

Knowledge with aims

**ஆங்கிலத்தை சரளமாக பேச ஓர் அரிய சந்தர்ப்பம்**

**Join spoken English with personality development @ K-AIMS ENGLISH SCHOOL**

**முற்றிலும் மாறுபட்ட முறையில் ஓர் ஆங்கிலச்சூழலில் ஆங்கிலத்தை இலகுவாக கற்றுக்கொள்ள எம்மோடு இணையுங்கள்**

**வார மற்றும் வாரஇறுதி நாள் வகுப்புக்கள் ஆரம்பம்**

K-AIMS ENGLISH SCHOOL

T.P - 076 826 8211 / 076 826 8206

No 59, Point Pedro Road, Ariyakulam, Jaffna

(சி-7572)

## மரண அறிவித்தல்



## மயில்வாகனம் பாலசுந்தரம்

டச்சு றோட் சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் பாலசுந்தரம் நேற்று (16.02.2017) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற புஸ்பவதியின் அன்புக் கணவரும், யோகேஸ்வரன் (லண்டன்), நவணேஸ்வரன் (சுவிஸ்), சர்வேஸ்வரன் (சுவிஸ்), காலஞ்சென்ற தயாபரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், உதயராணி (லண்டன்), வதனி (சுவிஸ்), விக்னேஸ்வரி (சுவிஸ்) ஆகியோரின் அன்புமாமனாரும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம், தெய்வநாயகி ஆகியோரின் சகோதரனும், மேரி தாசன், சாரதாதேவி ஆகியோரின் பாசமிகு பெரிய தந்தையும், கிரிசா, பானு, லக்சா, வர்ஷன், நயினா, கீர்த்திகா, நாகா, பிமலி, அச்சன், வர்மா, மீரா, ஆரணி, சௌந்தரி ஆகியோரின் அன்புப் பேரனும், றிக்சன், சரணா, சாஞ்விகா ஆகியோரின் பாசமிகு பூட்டனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இன்று (17.02.2017) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

**டச்சு வீதி, சித்தன்கேணி**

**தகவல் :குடும்பத்தினர். 077 346 8460**

(சி-7580)

# நீதிமன்ற விவகாரத்தில் தலையீடு செய்வதில்லை

## ஜனாதிபதி மைத்திரி உறுதி

(கொழும்பு) [redacted]

**நீதிமன்ற விவகாரங்களில் தான் ஒருபோதும் தலையீடு செய்வதில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

நீதிமன்ற துறையில் நியமனங்களை மேற்கொள்ளும் போது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எனது தனிப்பட்ட தேவைக்கு நியமனங்கள் மேற்கொண்டதில்லை.


அண்மையில் ஊடகங்களில் மேல் நீதிமன்ற நீதிபதி ராமநாதன் கண்ணன் நியமனம் குறித்து குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இந்த நியமனம் சட்டத்தரணிகள் சங்கத்தின் கோரிக்கைக்கு அமையவே மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நீதிமன்ற துறைசார் நிறுவனங்களின் அனுமதியும் இந்த நியமனத்திற்கு பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

நீதிமன்ற விவகாரங்கள் மிகுந்த வெளிப்படைத்தன்மையுடன் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதே அன்றும் இன்றும் என்றும் எனது நோக்கமாகும்.

19 ஆம் திருத்தச் சட்டத்தின் ஊடாக எனது அதிகாரங்களின் ஒரு தொகுதியை பாராளுமன்றம் மற்றும் ஏனைய சுயாதீன நிறுவனங்களிடம் ஒப்படைத்துள்ளேன் என ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)



# தர்ம யுத்தம் தொடரும்

## ஓ.பி.எஸ். தெரிவிப்பு

எடப்பாடி பழனிச்சாமி தமிழக முதல்வராக பெரும்பான்மை அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவு உள்ளதாக அளிக்கப்பட்ட கடிதத்தை ஆளுநர் ஏற்றதையடுத்து, தமிழக முதல்வராக எடப்பாடி பழனிச்சாமி தெரிவு செய்யப்பட்டுள்ளார். இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய ஓ.பன்னீர்செல்வம், ஒரு குடும்பத்தின் பிடியில் கட்சியும் ஆட்சியும் செல்வதை தடுப்போம் என்றார். சசியின் குடும்ப ஆட்சியை அகற்றி மக்கள் விரும்பும் ஆட்சி தமிழகத்தில் வரும் வரை இந்த தர்ம யுத்தம் தொடரும் என்றார். சென்னை கிரீன் வேஸ் சாலையில் உள்ள இல்லத்தில் பேசிய முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், தமக்கு ஆதரவளித்த அனைவருக்கும் நன்றி தெரிவித்தார். ஆட்சி அதிகாரமும், கட்சியும் அவர்கள் கைக்கு சென்று விடாத அளவிற்கு போராட தயாராக உள்ளதாக ஓ.பி.எஸ் மேலும் தெரிவித்தார். (இ-12)

# 21 இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறிய மீன்பிடியில் ஈடுபட்ட 21 இந்திய மீனவர்களுக்கு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றம் விளக்கமறியல் விதித்துள்ளது.

இவ்வாறு விளக்கமறியல் விதிக்கப்பட்டவர்களில் பதினாறு வயதுக்குட்பட்ட ஒரு சிறுவனும் உள்ளான். ஊர்காவற்றுறை நீதிமன்றத்தின் ஆளுகைக்கு உட்பட்ட இடங்களான நெடுந்தீவு, காரைநகர் ஆகிய கடற்பரப்பிற்குள் அத்துமீறிய மீன்பிடியில் ஈடுபட்ட மேற்படி மீனவர்கள் நேற்றைய தினம் மன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போதே விளக்கமறியல் விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த 21 மீனவர்களும் நான்கு குழுக்களாக வெவ்வேறு தினங்களில் இலங்கை கடற்பரப்பிற்குள் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட போது கடற்படையினரால் கைது செய்யப்பட்டு யாழ். மாவட்ட நீரியல்வளத் திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில், நீரியல் வள திணைக்களம் ஊர்காவற்றுறை நீதிமன்றில் குறித்த இந்திய மீனவர்களுக்கு எதிராகவும் ஏற்கனவே வழக்கு தொடர்ந்திருந்தனர்.

ஊர்காவற்றுறை நீதிமன்றம் ஏற்கனவே இவர்களுக்கு விளக்கமறியல் விதித்திருந்த நிலையில், ஐந்து பேராக மூன்று குழுக்களாகவும், ஆறு பேராக ஒரு குழுவாகவும் நேற்றைய தினம் மீண்டும் ஊர்காவற்றுறை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன்போது வழக்கை விசாரணை செய்த நீதவான் எம்.எம்.றியால் அனைவரையும் எதிர்வரும் மார்ச் மாதம் இரண்டாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

மேலும் நேற்றைய வழக்கு விசாரணையின் போது இந்திய மீனவர்களில் சிலர் தமது உறவினர்களோடு தொலைபேசியூடாக உரையாட நீதவானால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இது தவிர மருத்துவ உதவிகள் ஏதும் தேவைப்பட்டிருந்தாலும் அதற்கான அனுமதியும் நீதவானால் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை மீனவர்களின் வள்ளங்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-4)

# இலங்கைக்கு ஆஸி பாராட்டு

(கொழும்பு)

தேசிய நல்லிணக்கம் மற்றும் ஒற்றுமையைக் கட்டியெழுப்ப இலங்கை அரசாங்கம் முன்னெடுக்கும் செயற்பாடுகளை அவுஸ்திரேலிய எதிர்க்கட்சித் தலைவர் பில் சோர்டென் பாராட்டியுள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்கு விஜயம் செய்துள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் நேற்று முன்தினம் கான்பெராவில் இடம்பெற்ற முக்கிய பேச்சுவார்த்தையின் போதே அவர் இலங்கைக்கு பாராட்டு தெரிவித்துள்ளார்.

ஆசிய பிராந்தியம் தொடர்பான அனைத்து அரசுகளினதும் அரசியல் கட்சிகளினதும் கருத்துகள் மற்றும் பரிந்துரைகள் தொடர்பான புதிய மாதிரி ஒன்றின் தேவைப்பாட்டை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இதன்போது எடுத்துக்கூறியுள்ளார்.

அதனை வரவேற்றுள்ள அவுஸ்திரேலிய எதிர்க்கட்சித் தலைவர் பில் சோர்டென், அவ்வாறானதொரு மாதிரியை உருவாக்க ஆதரவு வழங்குவதாகவும் தெரிவித்துள்ளார். (இ-7)

# மாணவி வித்தியா கொலை வழக்கு; சந்தேகநபர்களின் மறியல் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு பாடசாலை மாணவியான சிவலோகநாதன் வித்தியா பாலியல் வன்புணர்வின்பின் படுகொலை செய்யப்பட்ட வழக்கு விசாரணையில் சந்தேகநபர்கள் பன்னிரெண்டு பேரினது விளக்கமறியலையும் மேலும் நீடித்து ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.எம்.றியால் உத்தரவிட்டுள்ளார். குறித்த மாணவி கடந்த 2015ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் திகதி பாடசாலை செல்லும் போது கடத்தி செல்லப்பட்டு கூட்டு பாலியல் வன்புணர்வின் பின்னர் படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

இவ்வாறு மாணவி படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் பொலிஸாரும் குற்றப் புலனாய்வுப் பிரிவினரும் மேற்கொண்ட விசாரணைகளினூடாக பன்னிரெண்டு சந்தேகநபர்களை கைது செய்திருந்தனர். இதன்படி இம் மாணவி படுகொலை செய்யப்பட்டு இரண்டு வருடங்களாகும் நிலையில் இன்னமும் குறித்த மாணவியின் கொலைச் சந்தேக நபர்கள் மீதான குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டவில்லை.

இவ்வாறான நிலையில் குறித்த பன்னிரெண்டு சந்தேக நபர்களில் முதல் பத்து பேரினது நீதவான் நீதிமன்ற விளக்கமறியல் காலமும் ஒருவருடத்தை கடந்து விட்ட நிலையில் அதனை தாண்டியும் மேலும் ஒரு வருடம் நீதவான் நீதிமன்றில் வைத்து விசாரணை செய்வதற்கு யாழ்.மேல் நீதிமன்றம் பகுதி பகுதியாக அனுமதியும் வழங்கியிருந்தது. இந்நிலையிலேயே நேற்றைய தினம் குறித்த வழக்கானது,

ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது குறித்த பன்னிரெண்டு சந்தேக நபர்களையும் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதவான் எம்.எம்.றியால் உத்தரவிட்டுள்ளார். (இ-4)

# வியாபார நிறுவனங்களுக்கு யாழ்ப்பாணத்தில் ஆட்சேர்ப்பு



யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் பொது மக்கள் தொழில் சேவை மத்திய நிலையத்தினால் தொழிலுக்காக காத்திருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொடுக்கும் செயற்பாட்டின் தொடர்ச்சியாக முன்னணி தனியார் கம்பனிகள், ஆடை தொழிற்சாலைகள், ஹோட்டல்கள், உள்ளூர் உற்பத்தி வியாபார நிறுவனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள் பெப்ரவரி, மார்ச் மாதங்களில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

க.பொ.த உயர்தரம் மற்றும் க.பொ.த சாதாரண தரம் வரை கல்வி கற்றவர்கள் மற்றும் தொழில் ஆர்வம் உடைய அனைவரும் இவ் அரிய வாய்ப்பினை தவறவிடாது பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்வதுடன் மேலதிக விபரங்களும் மற்றும் அறிவுறுத்தல்களை மாவட்ட பொது மக்கள் தொழில் சேவை மத்திய நிலையத்தில் நேரடியாகவும் 021 221 9359 இலக்க அலுவலக தொலைபேசி ஊடாகவும் பெற்றுக் கொள்ளலாம் என்பதையும் அறியத்தருகின்றேன் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார். (இ

# சஷி வெல்கமவின் மறியல் நீடிப்பு



இலங்கை போக்குவரத்து சபையின் முன்னாள் தலைவர் சஷி வெல்கமவின் விளக்கமறியல் இந்த மாதம் 23 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மேலதிக நீதவான் இந்த உத்தரவை நேற்று பிறப்பித்துள்ளார்.

சஷி வெல்கம கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 20ஆம் திகதி குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

மகிந்த ஆட்சிக் காலத்தின் போது இலங்கை போக்குவரத்து சபையின் நிதிகளை முறைகேடாக பயன்படுத்திய குற்றச்சாட்டு தொடர்பில் சஷி கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அத்துரலிய ரத்னதேரர் எம்.பி. ராஜினாமா செய்ய வேண்டும்



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராண ஜாதிக ஹெல உறுமய கட்சியைச் சேர்ந்த அத்துரலிய ரத்ன தேரர், பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படப் போவதாக அண்மையில் அறிவித்தார்.

சுயாதீன பாராளுமன்ற உறுப்பினராக செயற்பட அத்துரலிய ரத்னதேரருக்கு உரிமையில்லை எனவும் பதிலாக அவர் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்யலாம் என வெளிவிவகார அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

நேற்று கொழும்பில் நடந்த நிகழ்வொன்றில் சம்பிக்க ரணவக்க மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார். (இ-7)

## தாய் நிலத்துக்கான ...

சேர்ந்த கேப்பாப்பிலவு பிலவுக் குடியிருப்பு மற்றும் புதுக்குடியிருப்பு மக்கள் தொடர்ச்சியாக போராட்டத்தை நடத்திவருகின்றனர்.

2012 ஆம் ஆண்டு, இடைத்தங்கல் முகாம்களை மூடி, மக்களை சொந்த இடங்களுக்கு மீள அனுப்புவதாக முன்னைய அரசாங்கம் ஐ.நா. மன்றத்துக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றுவதாக பாவனை செய்தே, சர்வதேசத்தையும் மக்களையும் ஏமாற்றி இடைத்தங்கல் முகாம்களில் இருந்த இந்த மக்களை, அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பாது, கேப்பாப் பிலவு காடுகளில் ஒரு மாதிரிக்கிராமத்தை அமைத்து (அந்த காட்டுப்பகுதிக்கு போலியாக கேப்பாப்பிலவு என பெயர் சூட்டி) குடியமர்த்தியிருந்தது.

சர்வதேசத்தையும் மக்களையும் போலியான நடவடிக்கைகள் மூலம் ஏமாற்றும் முன்னைய ஆட்சியாளர்களின் அணுகுமுறையின் தொடர்ச்சியாகவே, இந்த அரசும் மக்களைஅவர்களது சொந்த இடத்துக்கு மீள அனுப்பாது, அவர்களின் நிலங்களை இராணுவம் மூலம் செய்யப்பட்ட ஆக்கிரமிப்பை தொடர்ந்து கொண்டிருக்கிறது.

தம் தாய் நிலத்துக்காக இந்த மக்கள் எந்தவித விட்டுக்கொடுப்புமின்றி 2012 இலிருந்து எத்தனையோ அச்சுறுத்தல்களுக்கும் போலி வாக்குறுதிகளுக்கும் மத்தியிலும் போராடி வருகின்றார்கள். இம்மக்களின் அறப்போராட்டம் தற்போது ஒரு முக்கியகட்டத்தை அடைந்துள்ளது.

பனியிலும் வெயிலிலும் கடும் அச்சுறுத்தல்களின் மத்தியிலும் தமதுநிலம் தமக்கே வேண்டும் என்ற ஓர்மத்துடன் போராடிவருகின்ற இந்தமக்கள் போராட்டத்துடன் தமிழ் மக்கள் பேரவையும் கைகோர்ப்பதோடு, நீதியிலும் மனித உரிமையிலும் நம்பிக்கை கொண்டுள்ள அனைத்து மக்களையும் இன, மத, பிரதேச வேறுபாடின்றி நீதிக்காக போராடும் மக்களின் குரலுக்கு ஆதரவு வழங்குமாறும் கேட்டுக்கொள்கிறது.

ஒரு தனிப்பட்ட பிரதேசத்தின் நிலத்துக்கான பிரச்சினை என்கிற பரிணாமத்தை தாண்டி ஒட்டுமொத்த நில ஆக்கிரமிப்புகளுக்கெதிரான தமிழ் மக்களின் போராட்டத்தின் ஒரு குறியீட்டு வடிவமாக இன்று இது உருக் கொண்டுள்ளது.

எவரிலும் தங்கியிராது, தமது நியாயமான இலக்கில் எந்த விதவிட்டுக் கொடுப்பின்றி தமது பிரச்சினைக்கு மக்கள் தாமாகவே அணி திரண்டு குரலெழுப்ப முன் வந்திருப்பது எமது இனம் கடந்துவந்த பயணத்தில் மிகமுக்கியமானதொரு அம்சமாகும்.

மக்கள் மயப்படுத்தப்பட்ட அறப்போராட்டங்களின் நம்பிக்கை தருகின்ற ஒரு முன்னோடிச் செயற்பாடாகவே தமிழ் மக்கள் பேரவை இதனைப் பார்க்கின்றது.

மக்கள் விழிப்புணர்வுடன் தமக்கான குரலை தாமே எழுப்ப முன்வரவேண்டும் என்பதிலும் விழிப்புணர்வு கொண்ட மக்கள் அணிதிரள்வுகளே எமக்கான நீதிக்கான பாதையைதிறக்கும் என்பதிலும் தமிழ் மக்கள் பேரவை திடமான நம்பிக்கை கொண்டுள்ளதோடு ஆரம்பம் தொட்டு அதனை வலியுறுத்தியும் வருகின்றது.

இனமொன்றின் இருப்பை தீர்மானிக்கின்ற முக்கிய அம்சமாகிய நில அடையாளத்தை சிதைப்பதற்கு எதிரான இப்படியான உரிமைக் குரல்களையும் காணாமல் போகச் செய்யப்பட்டோர் மற்றும் அரசியல் கைதிகளுககான நீதிக்கான குரல்களையும் எமது அரசியல் அபிலாசைகளுக்கான குரல்களையும் தனித்தனியான பிரச்சினைகளுக்கான குரல்களாக அல்லாது எம்மீதான தொடர்ச்சியான இன அழிப்புக்கெதிரான ஒரு கூட்டுக் குரலாகவே சர்வதேச நாடுகள் கருத வேண்டும் என தமிழ் மக்கள் பேரவை வேண்டுகிறது.

வடமாகாணத்தில் மட்டும் ஏறத்தாழ 66 ஆயிரம் ஏக்கர் நிலம் இலங்கை இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டு இருக்கையில், ஊடக வெளிச்சத்துக்குள்ளும் சர்வதேச கவனத்திற்குள்ளும் வந்துள்ள குடாநாட்டின் சில நிலப்பகுதிகளை மட்டும் தெட்டம் தெட்டமாக விடுவித்து அதனை தமது பெரும் அடைவாக காட்ட நினைக்கும் தொடர்ச்சியான இலங்கை அரசுகளின் போலியான நடவடிக்கைகளை சர்வதேசம் புரிந்துகொள்ள வேண்டும் எனதமிழ் மக்கள் பேரவை கோருகிறது.

சர்வதேச நாடுகளின் அழுத்தம் இன்றி எமது மக்களுக்கான நீதியான தீர்வு கிடைக்கப்போவதில்லை என்பது மீண்டும் மீண்டும் நிரூபிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இந்நிலையில் எமது மக்கள் தமது சொந்த நிலத்துக்கு திரும்புவதற்கான அழுத்தங்களையும் வழிமுறைகளையும் சர்வதேச நாடுகளும் ஐ.நா. மனித உரிமைப் பேர வையும் துரிதப்படுத்த வேண்டும் எனவும் தமிழ் மக்கள் பேரவை கேட்டுக்கொள்கிறது.

அத்தோடு, எம்மீதான ஆக்கிரமிப்பிற்கெதிரான ஒரு குறியீடாகவும் சுயமுனைப்பில் மக்களால் முன்னெடுக்கப்படும் முக்கியமானதொரு போராட்டமாகவும் பரிணமித்துள்ள புதுக்குடியிருப்பு மற்றும் கேப்பாப்பிலவு பிலவுக்குடியிருப்பு மக்கள் போராட்டத்திற்கு எமது மக்கள் அனைவரும் தாயகபகுதியெங்கும் ஒன்று திரண்டு ஒருசேர ஆதரவளித்து மக்களின் குரலுக்கு உரம் சேர்க்க வேண்டும் எனவும் தமிழ் மக்கள் பேரவை வேண்டுகிறது என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ)

## மரண அறிவித்தல்



### தம்பு சோமலிங்கம்

ஆறுகால்மடம், ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகவும் அராலி மத்தி, உடுப்பிட்டி கே.வி.கே அரிசி ஆலை ஒழுங்கையை வதிவிடமாகவும் கொண்ட தம்பு சோமலிங்கம் நேற்று 16.02.2017 வியாழக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற பவளம்மாவின் அன்பு கணவரும், திரிபுரசுந்தரி (டென்மார்க்), ஞானகுமார் (லண்டன்), சாந்தகுமார் ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று உடுப்பிட்டி, கே.வி.கே அரிசி ஆலை ஒழுங்கையில் உள்ள அவரது இல்லத்தில் பகல் 11 மணியளவில் நடைபெற்று அன்னாரின் பூதவுடல் வல்லை முள்ளி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கே.வி.கே அரிசி ஆலை,
உடுப்பிட்டி.

தகவல் :
குடும்பத்தினர்

(C-7582)

## அ.தி.மு.க தொண்டர் ...

விரும்பியிருந்தனர்.

ஆனால் ஓ.பி.எஸ்க்கு எதிர் அணியான சசிகலா அணியை சேர்ந்த எடப்பாடி பழனிச் சாமியை ஆளுநர் வித்தியாசாகர ராவ் முதல்வராக பதவியேற்க நேற்று அழைப்பு விடுத்திருந்தார்.

இதையடுத்து நேற்று மாலை 4 மணிக்கு அவர் முதல்வராக பதவியேற்றுள்ளார்.

இந்நிலையில் ஓ.பன்னீர்செல்வம் தான் தமிழக முதல்வராக வேண்டும் என கூறி அதிமுகவின் தீவிர தொண்டர் ஒருவர் தீக்குளித்துள்ளார்.

தீக்காயங்களுடன் போராடி கொண்டிருந்த அவரை சென்னை கீழ்ப்பாக்கத்தில் உள்ள மருத்துவமனையில் தற்போது சிகிச்சைக்காக சேர்த்துள்ளனர்.

மேற்படி சம்பவத்தை அறிந்த ஓ.பன்னீர் செல்வம் மருத்துவமனைக்கு விரைந்து சென்று அந்த தொண்டரின் உடல் நலம் குறித்து விசாரித்துள்ளார். (செ-11)

## மரண அறிவித்தல்



### திருமதி
### சிவசோதி காசிநாதன்

சுதுமலை தெற்கு மானிப்பாயை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவசோதி காசிநாதன் நேற்று (16.02.2017) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு - நாகேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை காசிநாதன் (ஓய்வுபெற்ற பிரதிப் பதிவாளர் - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) அவர்களின் பாசமிகு மனைவியும், சிவதாசன், சிவநேசன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், சுசிலன், கிருசாந்தி ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெயக்குமார் (ஆசிரியர்), தர்மினி ஆகியோரின் அன்பு மாமியாரும், சங்கமேந்தி, சிவசங்கர், சகாரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.02.2017) வெள்ளிக்கிழமை பிற்பகல் 01.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
தேவசகாயம் ஜெயக்குமார் - மருமகன்
(ஆசிரியர் - யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி)

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

(சி-7581)

# ரவிராஜ் படுகொலை; சந்தேக நபர்கள் பயங்கரவாத தடைச் சட்டத்தில் கைது?

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான நடராஜா ரவிராஜ் படுகொலைச் சம்பவம் தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழேயே கைது செய்யப்பட்ட வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ரவிராஜின் படுகொலை தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த பிரதிவாதிகள் கொழும்பு மேல் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டமைக்கு எதிராக ரவிராஜின் மனைவியால் மேன்முறையீடு மீளாய்வு மனுத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது. குறித்த மேன்முறையீட்டு மீளாய்வு



மனுவில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழேயே கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்ட நிலையில், தீர்ப்பை ஜூரிகள் தீர்மானிக்க முடியாது என்று கூறப்பட்டுள்ளது.

மேலும் குறித்த வழக்கினை ஜூரிகள் சபை இன்றி விசாரிக்குமாறு, மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட வேண்டும் எனவும் இந்த மனுவின் மூலம் கோரிக்கையினை முன்வைத்துள்ளார்.

ஜூரிகள் சபையின் முடிவுக்கு அமைய, ரவிராஜ் படுகொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட அனைவரையும் விடுவித்து, கொழும்பு மேல்நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது. கடந்த 2006 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10 ஆம்திகதிகொழும்பில்வைத்து நடராஜா ரவிராஜ் படுகொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சான்றிதழ் கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

முகாமைத்துவ அபி விருத்தி பயிற்சி அலகினால் வடக்கு மாகாணத்தில் கடமையாற்றும் அரச சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கான கொள்வனவு நடைமுறைகள் மற்றும் ஒப்பந்த முகாமைத்துவம் தொடர்பான சான்றிதழ் கற்கை நெறியானது கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றது.

இதன் தொடர்ச்சியாக மேற்படி கற்கை நெறிக்கு பொருத்தமான உத்தியோகத்தர்களிட மிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்ப முடிவுத்திகதி 15 மார்ச் 2017. விண்ணப்பப்படிவங்களை இல.68, குறொசெற் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி அலுவலகத்தில் அல்லது www.np.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம் என வடமாகாண பிரதிப் பிரதம செயலாளர் ஏ.சிவபாலசுந்தரம் அறிவித்துள்ளார். (இ)

# பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் புண்ணிய நாச்சியம்மையார் தினமும் பரிசளிப்பு விழாவும் நாளை மறுதினம் 19 ஆம் திகதிஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சைவபரிபாலன சபைத் தலைவர் இ. வசந்த சேனன் தலைமையில் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் நடராஜா தெய்வேந்திரராஜா, சிறப்பு விருந்தினராக சிவநெறித் தேசிகர் பண்டிதர் வ. பேரின்பநாதன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-12)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்-இலங்கை
## முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடம்

### நுண்நிதியியல் டிப்ளோமா கற்கைநெறி-2017

முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தினால் நடத்தப்படும் நுண்நிதியியல் டிப்ளோமா கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து கோரப்படுகின்றன.

- கற்கைநெறிக்கான காலம் -ஒரு வருடம் (வார இறுதி நாட்கள்)
- கற்பிக்கப்படும் மொழி -தமிழ்
- விண்ணப்பிப்பதற்கான தகுதி -க.பொ.த உயர்தரப் பரீட்சையில் 03 பாடங்களிலும் சித்திகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.
- கற்கைநெறிக்கான கட்டணம் -ரூபா. 29,000/-

கட்டண விபரம் :

| | | |
|---|---|---|
| பதிவுக்கட்டணம் | - | 1,500.00 |
| கல்விக் கட்டணம் | - | 22,500.00 |
| பரீட்சைக் கட்டணம் | - | 5,000.00 |
| மொத்தம் | - | 29,000.00 |

- விண்ணப்ப முடிவுத் திகதி - 15.03.2017
- விண்ணப்பிப்பதற்கான முறை :

விண்ணப்பப்படிவத்திற்கான கட்டணமாக ரூபா 250 ஐ செலுத்தி, முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீட பீடாதிபதி அலுவலகத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்திசெய்த விண்ணப்பப்படிவங்களைத் தபால்மூலம் அனுப்புவதாயின் இணைப்பாளர், நுண்நிதியியல் டிப்ளோமா கற்கைநெறி, முகாமைத்துவக்கற்கைகள் வணிகபீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் முகவரிக்கு, கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் நுண்நிதியியல் டிப்ளோமா கற்கைநெறிக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிட்டு அனுப்பிவைக்கவும்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

(சி-7569)


# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். அல்வாய் வடக்கு றோ.க.த.க. பாடசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு புனித சவேரியார் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறும்.

பாடசாலை அதிபர் சோமசுந்தரம் ஜெயதேவா தலைமையில் இடம்பெறும் இப் போட்டியில் பிரதம விருந்தினராக வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும்இளைஞர் விவகார அமைச்சர் தம்பிராசா குருகுலராஜா, சிறப்பு விருந்தினராக பங்குத் தந்தை வணபிதா.ம.கான்ஸ்போவர் ஆகியோர் கலந்து சிறப்பிப்பர். (இ-12)

# தேசிய விருது வழங்கும் விழா

(கொழும்பு)

சிறைச்சாலைகள் மறு சீரமைப்பு, மீள் குடியேற்றம், புனர் நிர்மாணம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சு மற்றும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் என்பன ஒன்றிணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்து சமய அறநெறி மாணவர்களைப் பாராட்டி கௌரவிக்கும் தேசிய விருது வழங்கும் விழா நாளை 18 ஆம் திகதி சனிக் கிழமை பிற்பகல் 2.30 மணி க்கு பம்பலப்பிட்டி புதிய கதி ரேசன் மண்டபத்தில் சிறைச் சாலைகள் மறுசீரமைப்பு, மீள் குடியேற்றம், புனர்நிர்மாணம் மற்றும் இந்துமத அலு வல்கள் அமைச்சர் டி. எம். சுவாமிநாதன் தலைமையில் நடைபெறும். (இ-12)


## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்:- 18.04.1943
மறைவு:-14.01.2017

அமரர் செல்வராணி சிவகுரு



கடந்த 17.01.2017 அன்று சிவபதம் அடைந்த எங்கள் குடும்பத்தலைவி அமரர் செல்வராணி சிவகுரு அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் 14.02.2017 செவ்வாய்க்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், 16.02.2017 வீட்டிலும் கிரியைகள் நடைபெற்றன.நாளை 18.02.2017 சனிக்கிழமை சுன்னாகம் கதிரமலை சிவன்கோவில் தேவஸ்தானத்தில்அன்னாரின்ஆத்ம சாந்திக்காக விசேட பூசை வழிபாடும் அதனைத் தொடர்ந்து மதிய போசனமும் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அத்துடன் அன்னார் சிவபதம் அடைந்த செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசிவாயிலாகவும்எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் சகல வழிகளிலும் எமக்கு உதவியும் ஒத்தாசையும் புரிந்தவர்களுக்கும் இத்தருணம்எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

இல. 54 , பண்டிதர் மாணிக்கதியாகராஜர் வீதி,
சுன்னாகம். 077 598 0079/ 071 882 5127 (7968) குடும்பத்தினர்.


# இராசி பலன்

17.02.2017
(மாசி 05, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.34 மணிக்கு
சஷ்டி முற்பகல்10.34 மணிவரை
சுவாதி மாலை 5.20 மணிவரை
சுபநேரம் 6.33-8.03 மணிவரை
இராகுகாலம் 11.03-12.33 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| செவ் சுக் | | | |
| சூரி புத கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் உத்தரட்டாதி, ரேவதி | | |
| | | | ராகு |
| | சனி | குரு சந் | |

**மீனம்:** ஆதாயமில்லாத அலைச்சல்களால் மனச்சோர்வு ஏற்படலாம், உடல் நலனில் கவனம் தேவை , அருகில் இருப்பவரை அனுசரித்துச் செல்வது நல்லது.

**மேடம்:** குடும்பத்தினருடன் குதூகலம் தரும் பயணமொன்று இடம்பெறலாம், உடல்நலம் சீராகும், விருப்பங்கள் நிறைவேறும் நாள், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**இடபம்:** நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், கரைந்த சேமிப்பை ஈடுகட்டும் எண்ணம் உருவாகும், எளிதில் உணர்ச்சி வசப்படுவதை தவிர்ப்பது நல்லது.

**மிதுனம்:** அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், புதிய திட்டங்கள் கைகூடும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கும்பம்:** உஷ்ண சம்பந்தமான ரோகபயமுண்டு, திடீர் பயணங்கள் ஏற்படலாம் ,பக்க பலமாக நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், வீண் பழிகள் அகலும்.

**கடகம்:** மனதில் நீண்டகாலமாக இருந்த பாரம் குறையும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**மகரம்:** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் தேடி வரலாம், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள்,மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**சிம்மம்:** குடும்பத்தில் சுபகாரியங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, நண்பர்கள் சொல்லும் ஆலோசனை உங்களுக்கு நல்லதாகத் தெரியும்.

**தனுசு:** பெரிய மனிதர்களின் சந்திப்பு கிடைத்து மகிழ்வீர்கள், பிரச்சினைகளில் இருந்து விடுபடுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**விருச்சிகம்:** தொழில் வளர்ச்சி கூடும், ஆடம்பரப் பொருட்களில் ஆர்வம் காட்டுவீர்கள், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும்.

**துலாம்:** குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும், காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், போசன சுகமுண்டு.

**கன்னி:** வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், விவாதங்களைத் தவிர்ப்பதன் மூலம் வளர்ச்சி காணும் நாள்.




வடமாகாண கிராம அபவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தீவகம் தெற்கு வேலணை பிரதேச செயலகத்தால் நடத்தப்பட்ட மண்டைதீவிலுள்ள மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஆடை வடிவமைத்தல் அழகுக்கலை மனைப்பொருளியல் கண்காட்சி கடந்த 09ஆம் திகதி வியாழக்கிழமை மண்டைதீவு மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது. வேலணை பிரதேச செயலர் திருமதி.சுகுணரதி தெய்வேந்திரத்தின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன், வடமாகாணசபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் ஆகியோர் கலந்துகொண்டனர். சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்கள பணிப்பாளர் ஜே.ஜே.சி.பெலிசியனும் கிராம அபிவிருத்தித் திணைக்கள யாழ்.மாவட்ட உத்தியோகத்தர் நா.பஞ்சலிங்கமும் கலந்துகொண்டனர். கௌரவ விருந்தினர்களாக மண்டைதீவு மகா வித்தியாலய அதிபர் கே.எஸ்.இளங்கோவும் மண்டைதீவில் கடமையாற்றும் கிராம உத்தியோகத்தர்கள் எம்.சசிகாந்த் மற்றும் என்.உதயராஜ் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர். (இ)

# முதலமைச்சர் வரவேற்பு

ஐரோப்பிய ஒன்றியத்தால் இலங்கைக்கு வழங்கப்பட விருந்த ஜி.எஸ்.பி பிளஸ் (GSP⁺) வரிச்சலுகை ஒத்தி வைக்கப்பட்டுள்ளமையை தாம் வரவேற்பதாக வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசு 2016 ஆம் ஆண்டு ஜுன் மாதம் ஐரோப்பிய ஒன்றியத்திடம் முன்வைத்த மீள் விண்ணப்பத்தின் பயனாக ஜி.எஸ்.பி பிளஸ் வரி சலுகையை மீண்டும் இலங்கைக்கு வழங்குவதற்கான பரிந்துரையை 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 11 ஆம் திகதி ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்திருந்தது.

இருப்பினும் குறித்த விடயம் தொடர்பான தீர்மானத்தை அறிவிக்க எதிர்வரும் மே மாதம் 15 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளனர். இது தொடர்பாக வடமாகாண முதலமைச்சரிடம் வினவிய போதே இவ்வாறு தெரிவித்தார்.

அதாவது சுங்க வரி இன்றி குறிப்பிடப்பட்ட உற்பத்திகள் பலவற்றை ஐரோப்பிய சந்தைக்கு ஏற்றுமதி செய்யும் வசதியை மேற்படி சலுகை இலங்கைக்கு வழங்கும். அதே வேளை மனித உரிமைகள் மற்றும் தொழிலாளர் உரிமைகள் நல்லாட்சி மற்றும் சூழல் பாதுகாப்பு தொடர்பான நன்னடத்தைகளை இலங்கை பேணுவதையும் இது வலியுறுத்தும். ஜி.எஸ்.பி. சலுகை செயற்பாட்டுக்கு வந்தவுடன் இலங்கையில் ஏற்றுமதி துறைக்கு பாரிய பொருளாதார நன்மைகள் ஏற்படும்.

இருப்பினும் இச் சலுகை பற்றி பொதுமக்களிடையே பல்வேறு பட்ட கருத்துக்கள் நிலவி வருகின்றன. அதாவது குறிப்பாக சலுகையை வழங்குவதற்காக முன் வைக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் பற்றி குழப்ப நிலையே மக்கள் மத்தியில் காணப்படுகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(திருநெல்வேலி)

யாழ். பரமேஸ்வரா வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் வித்தியாலய மைதானத்தில் இடம்பெறும்.

வித்தியாலய முதல்வர் யோ.தயாளன் தலைமையில் இடம்பெறும் இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன், சிறப்பு விருந்தினராக நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் எப்.எக்ஸ். அன்ரன், செலான் வங்கியின் யாழ்ப்பாணக் கிளை சிரேஷ்ட முகாமையாளர் ந. நிர்மலன், கௌரவ விருந்தினராக அற்புதாஸ் ஸ்ரோர்ஸ் உரிமையாளர் எஸ்.பரமேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ

+++++++++++

யாழ். வேலணை மேற்கு நடராஜ வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை அதிபர் வாசுகி செல்வரெட்ணம் தலைமையில் பாடசாலை மைதானத்தில் இடம் பெறும். இதில் பிரதம விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம், சிறப்பு விருந்தினர்களாக ஸ்ரீதுர்க்கா என்ரபிறைஸ் உரிமையாளர் சமாதான நீதவான் முருகேசபிள்ளை குமரசேகரன், வேலணை கோட்டக்கல்விப் பணிப்பாளர் பொ. சிவானந்தராஜா, கௌரவ விருந்தினர்களாக ஓய்வு நிலை அதிபர்கள் திரு. திருமதி ஞானசோதியன், ஜே/19 கிராம அலுவலர் எஸ். இரத்தினேஸ்வரன் மற்றும் ஜே/60 கிராம அலுவலர் ஏ.சாள்ஸ் பஸ்ரியான் ஆகியோர் கலந்து கொள்வர். (இ

# நல்லூர் அறநெறிப்பாடசாலை வகுப்புக்கள் இன்று ஆரம்பம்

தைப்பூசத்தன்று ஆரம்பிக்கப்பட்ட நல்லூர் அறநெறிப் பாடசாலையின் வகுப்புக்கள் இன்று பி.ப.4மணிக்கு மகேஸ்வரன் மணி மண்டபத்தில் ஆரம்பமாகும். திருமுறை நாமசங்கீர்த்தனம் மற்றும் தெய்வீக இசைப்பாடல்களுக்கான வகுப்புக்களை சங்கீதம் மற்றும் பண்ணிசை ஆசிரியை சந்திரிகா கணேஸ்வரன் உள்ளிட்ட ஆசிரியர் குழுவும் அறநெறிக் கல்விக்கான வகுப்புக்களை திருமதி கமலாசனதேவி தனக்குமார் உள்ளிட்ட ஆசிரியர் குழுவும் நடத்துவர்.

தொடர்ந்து வரும் வாரங்களில் விண்ணப்பப்படிவங்கள் மூலம் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு ஏனைய செயற்பாடுகளுக்கான வகுப்புக்களும் ஆரம்பிக்கப்பட்டு வெள்ளி மாலை ஞாயிறு காலை ஆகிய இரு நாட்களிலும் நடத்தப்படும்.

வகுப்புக்கள் அனைத்தும் மாணவர்களின் வழமையான கற்றல் செயற்பாடுகளைப் பாதிக்காதவாறு ஒழுங்கு செய்யப்படும். மாணவர்களின் கற்றல் திறன் மற்றும் உளப்பாங்கை மேம்படுத்தக்கூடிய செயற்பாடுகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படும் எனவும் தேவைப்படின் மாணவர்கள் வசதி கருதி வேறு நாட்களிலும் வகுப்புக்கள் நடத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ

# வெகுமதிகள்

தேசிய கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையினால் 2016ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய அங்கத்தவர்களுடைய பிள்ளைகள் 500 பேருக்கு மேலதிக கல்வி நடவடிக்கைக்காக ஒவ்வொருவருக்கும் தா 12,000 ரூபா பெறுமதியான வெகுமதிகள் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையினால் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை www.etfb.lk எனும் இணையத்தளத்தினூடாக பெற்றுக் கொள்ள முடியும். அல்லது இல.70, மார்டின் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபைக் காரியாலயத்தில் நேரில் விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ள முடியும். விண்ணப்பப்படிவங்கள் 2017.03.31ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும். பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்களும் விண்ணப்ப முடிவு திகதிக்குப்பின் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்களும் எதுவித காரணங்களுமின்றி நிராகரிக்கப்படும்.

விண்ணப்பங்களை புலமைப்பரிசில் அலுவலர், புலமைப் பரிசில்கள் பிரிவு, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை, இல.92, கிருள வீதி, நாரஹென்பிட்டி, கொழும்பு-5 எனும் முகவரிக்கு பதிவுத்தபால் அல்லது நேரில் கையளித்தல் வேண்டும். மேலதிக தகவல்களுக்கு 021 222 0010, 112 369 685, 11-2 368 162 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும். (இ-3)

# தமிழ் மக்கள் பேரவை மக்கள் இயக்கமாகவே எப்போதும் செயற்படும்

## வடக்கு முதல்வர் உறுதி



அரசியல் கட்சிகளுக்கு அரசியல் ரீதியான முன்னோக்கு தேவைகள் இருக்கக்கூடும். ஆனால் தமிழ் மக்கள் பேரவை எப்பொழுதும் மக்கள் இயக்கமாகவே செயற்படும் என வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் பேரவை எதிர்காலத்தில் ஒரு கட்சியாக உருவெடுக்கும் என்ற கருத்துக்களை தமிழ் மக்கள் பேரவையில் உள்ள சில அரசியல் கட்சிகளின் தலைவர்கள், தெரிவித்து வருகிறார்கள். அது தொடர்பில் தங்களது நிலைப்பாடு என்ன என ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்ட கேள்விக்கு பதில் அளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்.

தமிழ் மக்கள் பேரவையில் சில அரசியல் கட்சிகள் சேர்ந்துள்ளன. அரசியல் கட்சிக்கு அரசியல் ரீதியான முன்னோக்கு தேவைகள் இருக்கக்கூடும். ஆனால் தமிழ் மக்கள் பேரவை இப்போதும் எப்போதும் மக்களுடைய இயக்கமாக தான் செயற்படும்.

பெண்கள் பிரதிநிதித்துவம் இல்லை என்பது குறையாக உள்ளது. அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும். தமிழ் மக்கள் பேரவையில் சேர்வதற்கு பெண்கள் பின்னடித்தார்கள். அடுத்துவரும் காலங்களில் துணிந்த பெண்களை உள்வாங்குவோம்.

ஒருநிகழ்வில் அனைவரையும்முன்னிறுத்த வேண்டும் என்றால் அது முடியாது. மேடை விழுந்து விடும். அத்துடன் பேரவையின் தீர்மானத்தின்படி தான் எந்த செயற்பாடுகளும் நடைபெற்று வருகிறது. எனவே அதன்படி நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# முதல்வராக எடப்பாடி பழனிச்சாமி நியமனம்

## பெரும்பான்மையை நிரூபிக்க 15 நாட்களில் வாக்கெடுப்பு

அ.தி.மு.க. சட்டப்பேரவை கட்சித் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட எடப்பாடி பழனிச்சாமியை தமிழக முதல்வராக நியமித்து ஆளுநர் வித்யாசாகர் ராவ் உத்தரவிட்டார். அதேவேளையில் சட்டப்பேரவையில் 15 நாட்களுக்குள் பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும் என அவகாசம் வழங்கியுள்ளார். இதன்மூலம் தமிழக அரசியல் களத்தில் கடந்த 9 நாட்களாக நீடித்துவந்த குழப்பத்துக்கு முடிவு வந்துள்ளது. 124 எம்.எல்.ஏக்கள் ஆதரவு அளித்திருப்பதாக எடப்பாடி பழனிச்சாமி கொடுத்திருந்த ஆதரவுக் கடிதத்தை ஏற்றுக் கொண்ட ஆளுநர் அவரை ஆட்சியமைக்க அழைப்பு விடுத்துள்ளார்.

**அடுத்தடுத்து சந்திப்பு:**

முன்னதாக, நேற்று முன்தினம் புதன்கிழமை ஆளுநர் வித்யாசாகர் ராவை பொறுப்பு முதல்வர் ஓ.பன்னீர்செல்வமும், அ.தி.மு.க. சட்டப்பேரவை கட்சித் தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ள எடப்பாடி பழனிச்சாமியும் தனித்தனியாக சந்தித்து ஆட்சி அமைப்பது தொடர்பாக கோரிக்கை விடுத்தனர். இந்நிலையில், நேற்று வியாழக்கிழமை காலை எடப்பாடி பழனிச்சாமிக்கு ஆளுநர் மாளிகையில் இருந்து அழைப்பு சென்றது. இதனையடுத்து கூவத்தூரிலிருந்து ஆளுநர் மாளிகைக்குப் புறப்பட்டுச் சென்றார் எடப்பாடி பழனிச்சாமி. இந்த சந்திப்பைத் தொடர்ந்து ஆளுநர் மாளிகையிலிருந்து செய்திக் குறிப்பு வெளியானது. அ.தி.மு.க. சட்டப் பேரவை கட்சித் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட எடப்பாடி பழனிச் சாமியை தமிழக முதல்வராக நியமித்து ஆளுநர் வித்யாசாகர் ராவ் உத்தரவிட்டுள்ளார். அதேவேளையில், 15 நாட்களுக்குள் பெரும்பான் மையை நிரூபிக்க வேண்டும் என அவகாசம் கொடுத்துள்ளார்.

**தகர்ந்த கனவும்.. எதிர்பாராத வரவும்..**

சொத்துக்குவிப்பு வழக்கில் சசிகலாவுக்கு 4 ஆண்டுகள் சிறை தண்டனையை உச்ச நீதிமன்றம் உறுதி செய்தது. இதனால், அவரது முதல்வர் கனவு தகர்ந்தது. இதைத் தொடர்ந்து சட்டப்பேரவை கட்சித் தலைவராக சசிகலாவுக்கு பதில் எடப்பாடி பழனிச்சாமி தேர்வு செய்யப்பட்டார். கட்சியில் திண்டுக்கல் சீனிவாசன், செங்கோட்டையன் உள்ளிட்ட மூத்த தலைவர்கள் இருந்தாலும் எடப்பாடி பழனிச்சாமி சட்டப்பேரவை குழுத் தலைவராக நியமிக்கப்பட்டார். இதனால், அவருக்கு முதல்வர் ஆகும் வாய்ப்பு வந்து சேர்ந்தது.



**இழுபறிக்குப் பின்..**

சட்டப்பேரவைக் கட்சித் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட அன்றைய தினமே ஆளுநரை சந்தித்து ஆட்சி அமைக்க உரிமை கோரினார் பழனிச்சாமி. அதன்பிறகும் ஆளுநர் எந்த முடிவையும் அறிவிக்கவில்லை. இதையடுத்து, நேற்று முன்தினம் இரவு 7.30 மணிக்கு எடப்பாடி பழனிச்சாமி மீண்டும் ஆளுநரை சந்தித்து தன்னை ஆட்சி அமைக்க அழைக்குமாறு கேட்டுக்கொண்டார். அவருடன் அமைச்சர்கள் வேலுமணி, டி.ஜெயக்குமார், எம்.பி.நவநீதகிருஷ்ணன் உள்ளிட்ட 10 பேர் ஆளுநரைச் சந்தித்தனர். சந்திப்பு முடிந்து வெளியில் வந்த அமைச்சர் டி.ஜெயக்குமார் அங்கிருந்த நிருபர்களிடம் பேசும் போது, "அ.தி.மு.க. சட்டப் பேரவை கட்சித் தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ள எடப்பாடி பழனிச்சாமிக்கு அனைத்து எம்எல்ஏக்களின் ஆதரவு இருப்பதால் எங்களை அழைத்து அமைச்சரவையை உடனடியாக அமைத்து சட்டப்பேரவை ஜனநாயக மாண்பு காக்கப்பட வேண்டும் என வலியுறுத்தினோம். அதை பரிசீலிப்பதாக ஆளுநர் தெரிவித்தார். ஆளுநர் நிச்சயமாக ஜனநாயகத்தை காப்பார் என்ற நம்பிக்கை இருக்கிறது" என்றார். முதல்வர் பன்னீர்செல்வமும் தங்களுக்கு பெரும்பான்மை ஆதரவு இருப்பதாக கூறியுள்ளாரே என கேட்டபோது, அவர்களிடம் 8 எம்எல்ஏக்கள் மட்டுமே உள்ளனர். எங்க ளிடம் 124 பேர் உள்ளனர்" என்றார் .(இ-12)





தினமும் மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகி 7.30 மணிக்கு நிறைவடையும்.
3 ஆம் நாள் (17.02.2017) தன் வந்திரி ஹோமம்/
ஆயுஷ்ய ஹோமம்- நோய், நொடி நீங்க
இறைபணிச் செல்வி கலாவித்தகி திருமதி M. அனந்தலட்சுமி (இந்து அபிவிருத்தி உத்தியோகத்தர்-குருகுலம், ஆனைப்பந்தி)
விடயம்- ஆலய வழிபாட்டு முறைகள்
சொற்பொழிவு ஒருங்கமைப்பு
நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபம், நல்லூர்.
திரு.சண்முகராஜா கணேசலிங்கம், தர்மகர்த்தா
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
021 224 2300


## வடக்கு மாகாண சிறந்த நூற்பரிசுத் தேர்வுப்போட்டி-2016

வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் வருடாவருடம் வடமாகாண எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் நோக்கமாக கொண்டு மேற்படி போட்டிகளை நடத்தி வருகின்றது. இப் போட்டிக்கான நிபந்தனைகள் வருமாறு,

01. நூல்கள் யாவும் 2016 ஜனவரி 01 ஆம் திகதிக்கும் 2016 டிசெம்பர் 31ஆம் திகதிக்கும் இடையில் அச்சில் வெளிவந்தவையாகவும், முதல்பதிப்பாகவும் இருத்தல் வேண்டும்.

02.நூலாசிரியர் வடக்கு மாகாணத்தின் 05 மாவட்டங்களில் ஒன்றினை பிறப்பிடமாக கொண்டவராக அல்லது வடமாகாணத்தில் 10 வருடங்கள் வாழ்ந்தவராக இருத்தல் வேண்டும். (யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி)

03.நூலின் 04 பிரதிகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

04.பின்வரும் துறைகளில் போட்டிகள் இடம்பெறும்.நூலாசிரியர் தான் எந்தப் பிரிவில் தனது ஆக்கத்தை சேர்த்துக்கொள்ள விரும்புகின்றார் என்பதை கட்டாயம் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

| | |
|---|---|
| 1)அறிவியல் | 09)நாவல் |
| 2)சமூகவிஞ்ஞானம் | 10)நாடகம் |
| 3)ஆய்வு நூல் | 11)குழந்தை இலக்கியம் |
| 4)திறனாய்வு | 12)சிறுவர் இலக்கியம் |
| 5)சமயம் | 13)நாட்டார் இலக்கியம் |
| 6) வரலாறு | 14)சிறுகதை |
| 7)மரபுக்கவிதை | 15)மொழிபெயர்ப்பு |
| 8)புதுக்கவிதை | 16)ஏனையவை |

05.நூல் ISBN முத்திரை பொறிக்கப்பட்டுள்ளதாக இருத்தல் வேண்டும்.

06.மொழிபெயர்ப்பு (மொழிபெயர்ப்பு நூல்கள் யாவும் தமிழ்மொழியிலிருந்து ஏனைய மொழியிலும், ஏனைய மொழியிலிருந்து தமிழ்மொழியிலும் ஆக்கப்பட்டிருத்தல் வேண்டும்) தவிர்ந்த ஏனைய நூல்கள் தமிழ்மொழி மூலம் ஆக்கப்பட்டிருப்பதுடன் நூலில் பதிப்பித்த ஆண்டும் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

07.பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் கலாசார உத்தியோகத்தரிடம் விண்ணப்பப் படிவத்தை பெற்று பூர்த்தி செய்து நூல்களை பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ ஒப்படைக்கலாம்.

08.விண்ணப்ப முடிவுத்திகதி 2017.03.30 ஆகும். இத்திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக

**உதவிப்பணிப்பாளர்,**
**பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,**
**செம்மணி வீதி, நல்லூர்,**
**யாழ்ப்பாணம்.**

என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். குறித்த திகதிக்கு பின்னர் கிடைக்கும் நூற்பிரதிகள் தொடர்பில் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படமாட்டாது.

09. போட்டிக்காக அனுப்பி வைக்கப்படும் நூல்கள் மீண்டும் கையளிக்கப்படமாட்டாது. மேலதிக விபரங்களுக்கு 021-205-4105 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (சி-7567)


கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 59 செவ் 2 இல்<br>உயரம்: 168cm<br>தகைமை/தொழில்:A/Lகனடா PR<br>தொ.இ: B/6937 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:O/L<br>எதிர்பார்ப்பு:வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/6967 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: உத்திராடம்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:வரைபடநிபுணர்<br>தொ.இ: B/6940 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 84 செவ் 8 இல்<br>உயரம்: 152cm<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/6969 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 62 செவ் 4 இல்<br>தகைமை/தொழில்:A/Lபிரான்ஸ் PR<br>தொ.இ: B/6941 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 3 சூரிசெவ் 11 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:BA/அரசதொழில்<br>தொ.இ: G/6971 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 48 செவ் 7 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:BBA, PGDCA/ தனியார் தொழில்<br>தொ.இ: B/6948 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 56 செவ் 7 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: G/6975 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai. jaffna@gmail.com
குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

# மனம் தளராது உறுதியுடன் போராடுங்கள்; வெற்றி நிச்சயம்





(பனிக்கன்குளம்)

கோப்பாப்பிலவு பிலவுக் குடியிருப்பு விமானப்படையி னர்முகாம்முன்பாகதொடர்ச்சி யாக நேற்று 17 ஆவது நாளாக காணி விடுவிப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருக் கும் மக்களை யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் மற்றும் வடக்கு மாகாண சபை உறுப்பினர் க.சிவநே சன் உள்ளிட்டோர் நேற்று காலை 8 மணியளவில் சந் தித்து கலந்துரையாடி மக்க ளின் அவல நிலைமைகள் தொடர்பில் கேட்டறிந்தனர்.

இதன் போது மக்கள் தெரிவிக்கையில்,

விமானப்படையினர்கைய கப்படுத்தியுள்ள தமக்கான காணியில் விமானப் படையி னரின் கட்டடங்களோ வேறு எந்த விதமான இராணுவ நிலைகளோகாணப்படவில்லை எனத் தெரிவித்தனர்.

இவற்றைக் கேட்டறிந்து கொண்ட பாராளுமன்ற உறுப் பினர் உறுதியுடன் மனம் தள ராது போராடிக் கொண்டிருக் கும் உங்களின் போராட்டத் திற்கு பூரண ஆதரவு வழங்கு வதாகவும் இந்த உண்மை நிலைமை தொடர்பாக உரிய தரப்பினரிடம் எடுத்துரைப் பதாகவும் தெரிவித்தார்.

அதன் பின்னர் புதுக்குடி யிருப்புபிரதேசசெயலகம்முன் பாக தொடர்ச்சியாக மூன்றா வது நாளாகவும் சுழற்சி முறையில் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் மக்களையும் சந்தித்து நிலைமைகள் தொடர் பில் ஆராய்ந்து கேட்டறிந்து கொண்டனர். (2-281)

# மாணவர்களும் போராட்ட களத்தில் இணைந்தனர்



புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் முன்பாக தொடர்ச்சி யாக 14 ஆவது நாளான நேற்றும் போராட்டத்தில் ஈடு பட்டுள்ள மக்களுடன் மு/புதுக் குடியிருப்பு மத்திய கல்லூரி உயர் தரப் பிரிவில் கல்வி கற் கும் மாணவர்கள் நேற்றைய தினம் பாடசாலைக்கு சமுகம் அளிக்காது தமது உறவுக ளின் அவல நிலை கண்டு மாணவர்கள் மக்களுக்கு ஆதரவாக போராட்டத்தில் ஈடுபட்டனர். (2-281)

## அறநெறிப் பாடசாலை திறப்பு விழா

முல்லைத்தீவு மாவட்டத் தின் புதுக்குடியிருப்பு வேணா வில் கிராம சிறார்களின் நலன்கருதி அமைக்கப்பட்ட சிவயோக சுவாமிகளின் அற நெறிப் பாடசாலைக்கான புதிய கட்டடத் திறப்பு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு ரிஷி தொண்டு நாத சுவாமிகளின் தாயார் திருமதி சிவலோசனி கனகரத்தினத்தால் (ஸ்ரீ சுப்பிர முனிய கோட்டம், கோப்பாய்) திறந்து வைக்கப்படும். (2-3)




# நல்லாட்சி அரசாங்கம் கையகப்படுத்தியுள்ள காணிகளை விடுவித்து ஆதரவு வழங்கவேண்டும்



(பனிக்கன்குளம்)

கேப்பாப்பிலவு பிலவுக் குடியிருப்பு விமானப்படையி னர் முகாம் முன்பாக கடந்த 17 ஆவ்து நாளாக நேற்றும் கையகப்படுத்தியுள்ள காணி விடுவிப்புக்காக மக்கள் போராட் டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இம் மக்களுக்கு ஆதர வாக நேற்று முற்பகல் 11 மணி யளவில் மன்னார் சமூக பொரு ளாதார மேம்பாட்டிற்கான நிறுவனத்தைச் சேர்ந்தவர் கள் வருகை தந்து வற்றாப் பளை - புதுக்குடியிருப்பு வீதி யூடாக பேரணியாக நகர்ந்து சென்றுபோராட்டத்தில் ஈடுபட்டி ருக்கும்மக்களுடன் இணைந்து நில மீட்புப் போராட்டத் திற்கு ஆதரவு வழங்கியிருந்த னர்.

இந்த நிறுவனத்தைச் சேர்ந்த பெண்ணொருவர் கருத்துக் கூறுகையில்,


வன்னி மாவட்டத்தை பொறுத்த வரையில் கடந்த 30 வருட காலமாக யுத்தம் யுத்தம் என்று அனைத்து மக்களையும் தொட் டுச் சென்றது; இதன் வடுக்கள். இதன் விளைவுகளாக காணா மல் ஆக்கப்பட்டோர், கடத்தப்பட் டோர்உள்ளிட்டோரை யோசித்து பெற்றோர், உறவினர் இவர் கள் எப்போது மீண்டும் வரு வார்கள் என கண்ணீர் வடிக் கின்றனர்.

வடக்கு மாகாணத்தை பொறுத்த மட்டில் பிள்ளை களை இழந்து, யுத்தத்தில் பாதிக்கப்பட்டு, கணவனை இழந்து, தற்போது தடுப்பில் இருக்கிறாரா? இல்லையா? என்ற பல்வேறு பிரச்சினை களுக்கு, மத்தியில் எப்படி வாழ முடியும்.

இதனைவிட ஒரு உண்மை யான பிரச்சினை இருப்ப தற்கு ஓர் இடம் வேண்டும். எமது வீட்டில் எஞ்சியுள்ளவர் களை வைத்து பராமரிப்ப தற்கு நல்லாட்சி என்று கூறப் படுகின்ற அரசாங்கம் இராணு வத்தால் கையகப்படுத்தி வைத் துள்ள காணிகளை விடுவித் தாவது ஒரு ஆதரவை வழங்க வேண்டுமெனவும் அவர் வேண்டு கோள் விடுத்தார். (2-281)

# கிளிநொச்சியில் டெங்கு தீவிரம்; மக்களே! அவதானமாக இருங்கள்

## மாவட்ட அரச அதிபர் எச்சரிக்கை



கிளிநொச்சி மாவட்டத் தில் டெங்குக் காய்ச்சலானது மிகத் தீவிரமாகப் பரவக் கூடிய அபாயநிலை அவதா னிக்கப்பட்டுள்ளதாக கிளி நொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமை நாயகம் தெரிவித்தார்.

இவ் வருடத்தின் முதல் 43 நாட்களில் கிளிநொச்சி யின் நான்கு பிரதேச செயலக பிரிவுகளில் இருந்து 126 நோயாளர்கள் டெங்குக் காயச் சல் காரணமாகச் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இவர்களுள் அநேகர் வெளிமாவட்டங்களில் பணி, கல்வி நடவடிக்கைகள் மற் றும் பிற தேவைகளுக்காகச் சென்று தங்கியிருந்த வேளை யில் நோய்த்தொற்றுக்கு ஆளாகிய நிலையில் எமது மாவட்டத்திற்குத் திரும்பி யிருந்தமை அவதானிக்கப் பட்டுள்ளது.

கண்ணகைபுரம், கிராஞ்சி, கல்மடுநகர், புன்னை நீராவி, தருமபுரம், அம்பாள்குளம், பாரதிபுரம், கோணாவில், மலையாளபுரம், பிரமந்தனாறு, தருமபுரம், ஆனைவிழுந் தான், கிருஸ்ணபுரம், இராம நாதபுரம், சாந்தபுரம், வேரவில், அம்பாள்நகர், கணேச புரம், கண்டாவளை, கல்லாறு, மாவடியம்மன், மாயவனூர், நாச்சிக்குடா, நல்லூர் பரமன் கிராய், பெரியகுளம், பெரிய பரந்தன், செல்வாநகர், ஸ்கந்தபுரம், உருத்திரபுரம் கிழக்கு, உதயநகர் மேற்கு, வட்டக்கச்சி ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் இருந்தே ஒன்றிற்கு மேற்பட்ட டெங்கு நோயாளிகள் இனங் காணப்பட்டுள்ளனர்.

எனவே உயிர்க்கொல்லி டெங்கு நோயிலிருந்து மக் களை பாதுகாப்பதற்காக மாவட டம் முழுவதும் டெங்கு குடம்பி கள் மற்றும் டெங்கு நுளம்பு கள் வாழக்கூடிய இடங்களை இனங்கண்டு அழிக்கும் நோக குடன் சிரமதான நடவடிக்கை கள் பிரதேச செயலாளர்கள் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரிகளது ஒழுங்கமைப் பில் திட்டமிடப்பட்டுள்ளது.

வீடுவீடாகச் சென்று டெங்கு நுளம்பு வளரும் இடங்களை இனங்கண்டு அழித்தல், விழிப்புணர்வு ஏற்படுத்துதல், பாடசாலைகள் மற்றும் பொது மக்கள் கூடும் இடங்களை சுத்திகரித்தல் ஆகிய நடவடிக்கை கள் மாவட்டம் முழுவதும் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதற்காக நீங்கள் ஒவ் வொருவரும் உங்களால் இயன்ற பங்களிப்பை வழங்கி உதவுமாறு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் கேட்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத் தில் டெங்குநோய் தடுப்பு செயற்பாடுகள் முன்னெடுக் கப்படவுள்ள பிரதேச செய லாளர் பிரிவுகள் வருமாறு.

கரைச்சி பிரதேச செயலா ளர் பிரிவு திருநகர் வடக்கில் இன்றும் எதிர்வரும் 20 ஆம் திகதி அம்பாள்குளம், கனக புரம் எதிர்வரும் 27 ஆம் திகதி கணேசபுரம், பெரிய பரந்தன், எதிர்வரும் மார்ச் மாதம் 23 ஆம் திகதி மருத நகர், பன்னாங்கண்டி ஆகிய இடங்களிலும் நடைபெறும். பளை பிரதேச செயலாளர் பிரிவு - மாசார், புலோப் பளை, இத்தாவில் இன்றும் எதிர்வரும் 19 ஆம் திகதி முகாவில், முகமாலை, தம்ப காமம், எதிர்வரும் 20 ஆம் திகதி முகாவில், முகமாலை, தம்பகாமம் ஆகிய இடங்களி லும் நடைபெறும் என அவர் அறிவித்துள்ளார். (2-312)

# ஒளிப்பதிவு, புகைப்படங்கள் எடுப்பதால் அச்சமடைகின்றோம்

## பிலவுக்குடியிருப்பு மக்கள்


(பனிக்கன்குளம்)

கேப்பாப்பிலவு பிலவுக்குடி யிருப்பு மக்கள் கடந்த 17 ஆளாவது நாளாகவும் விமா னப் படையினர் முகாம் முன் பாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இப் போராட்டத்தைக் குழப் பும் முகமாக இராணுவ, விமா னப் படை புலனாய்வாளர்கள் பல்வேறு சதித் திட்டங்களைத் தீட்டி வருவதாக போராட்டத் தில் ஈடுபட்டு வருகின்ற மக் கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த சில தினங்களாக போராட்டத்திற்கான தங்களின் உறுதியான, நியாயமான நிலைப்பாட்டை அறிந்து கொண்ட புலனாய்வாளர்கள் போராட் டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக் கும் சிலருக்கு மதுபானம் உள் ளிட்ட போதைப் பொருட்களை வழங்கி போராட்டத்தில் ஈடு பட்டிருக்கும் ஏனையவர்களு டன் சண்டையிட வைத்து அதை ஒளிப்பதிவு செய்து நியாய மான போராட்டத்தை கொச் சைப்படுத்த முயன்று வருவ



தாக மக்கள் தெரிவிக்கின்ற னர்.

அத்தோடு போராட்டத் திற்கு ஆதரவு வழங்குவதற்கு வருகின்ற ஏனைய தரப்பி னரை விமானப் படை முகாம் வேலியோரமாக நின்று புகைப் படங்கள் எடுப்பதாகவும் அவர் களின் காவலரணில் இருந்து கொண்டு தொடர்ச்சியாக போராட்டத்தில் ஈடுபட்டு வரு கின்ற மக்களின் நடவடிக்கை களை ஒளிப்பதிவு செய்து வருகின்றனர்.

அத்துடன் பெண்கள், சிறு வர்கள் அதிகளவில் போராட் டத்தில் கலந்து கொண்டவர் களை புகைப்படம், ஒளிப்பதிவு கள் என்பவற்றைச் செய்வது அநாகரிகமான செயல் என வும் அம் மக்கள் தெரிவிக் கின்றனர்.

இதேவேளை போராட்ட களத்தில் உள்ள மக்களுக்கு ஆதரவு வழங்குவதற்காக வருகை தந்த ஒருவர் கருத் துத் தெரிவிக்கையில்,

தாங்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு ஆத ரவு வழங்க வந்திருந்த வேளை களில் தங்களை இவ்வாறு புகைப்படம் எடுப்பதால் அச் சம் கொள்வதாகவும் இச் செயற்பாட்டை உடனடியாக நிறுத்தவேண்டும் எனவும் கூறினார். (2-281-15)

# வைத்தியசாலையின் மின்தூக்கி பழுது; நோயாளர்கள் அவதி

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் மின் தூக்கி (லிப்ட்) பழுதடைந்து காணப்படுவதால், சத்திர சிகிச்சை நோயாளிகள் உட்பட மாற்றாற்றலுடைய நோயாளி கள் உட்பட பலதரப்பட்ட நோய் களுக்கு சிகிச்சை பெற வரும் நோயாளர்களை மேல்தள த்திற்குக் கொண்டு செல்லும் போது பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக சுட்டிக் காட்டப்படுகின்றது. இது தொடர் பில் மேலும்தெரிய வருவதாவது,


மின்தூக்கி பழுதடைந் துள்ளதால் மேல்தளத்தி லுள்ள நோயாளர்களை கீழ்த் தளத்துக்கும் சத்திரசிகிச்சை செய்யப்பட்ட நோயாளர்களை மேல் தளத்திற்கும் கொண்டு செல்கின்றபோது பல்வேறு சிரமங்கள் ஏற்படுகின்றன.

தீவிர சிகிச்சைப்பிரிவு, பிரசவ விடுதி, சத்திரசிகிச்சை கூடம் என்பனவற்றுக்கு செல்வ தற்கு இந்த மின்தூக்கி பயன்ப டுத்தப்பட்டு வந்த நிலையில் கடந்த சில நாட்களாக மின் தூக்கி செயலிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-15)

# மூன்றாவது நாளாகவும் நேற்று தொடர்ந்தது உணவுத் தவிர்ப்பு

## மயங்கி சரிந்தவர்களுக்கு சிகிச்சைகள் வழங்கப்பட்டன







(பனிக்கன்குளம்)

புதுக்குடியிருப்பு மையப் பகுதியில் நிலை கொண்டிருக்கும் இராணுவத்தை வெளியேற்றக் கோரியும் கேப்பாப்பிலவு பிலவுக்குடியிருப்பு மக்களுக்கு ஆதர வாகவும் கடந்த 14 நாட்களாக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்கள் நேற்று மூன்றாவது நாளாகவும் சுழற்சி முறையிலான உணவுத் தவிர்ப்பு போரராட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்த சுழற்சி முறையிலான உணவுத் தவிர்ப்புப் போராட்டம் நேற்று காலையுடன் 48 மணித்தியாலங்களை கடந்துள்ள நிலையில் ஏற்கனவே உணவு இன்றி நீராகாரம் அருந்தாது போராட்டத்தில் ஈடுபட்டு வந்தவர்களுக்கு பதிலாக வேறு மூவர் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

இதேவேளை நேற்று முன்தினம் மாலை வேளை தாயொருவர் திடீரென மூச்சுத்திணறல் காரணமாக புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு நோயாளர் காவு வண்டி மூலமாக எடுத்துச் செல்லப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டார்.

அதன்பின்னர் புதுக் குடியிருப்பு வைத்தியசாலையைச் சேர்ந்த வைத்தியர் அணியொன்று போராட்டம் இடம் பெற்ற இடத்திற்கு வருகை தந்து போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கான மருத்துவ பரிசோதனையொன்றை மேற்கொண்டது.(2-281)

# தேர்தல் தொடர்பாக மக்களுக்கு விளக்கமளிக்கும் கலந்துரையாடல்



(குருமன்காடு)

மன்னார் மாவட்டத்தில் தேர்தல் தொடர்பாக மக்களுக்கு விளக்கமளிக்கும் விசேட கலந்துரையாடல் மார்ச் 12 இயக்கத்தின் ஏற்பாட்டில் மன்னார் சர்வோதயத்தில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்றுள்ளது.

இதில் மார்ச் 12 இயக்கத்துடன் இணைந்து சர்வோதயம், சேவாலங்கா, ஆர்.பி. ஆர். அரசசார்பற்ற ஸ்தாபனங்களின்ஒன்றியம்ஆகியவை குறித்த கலந்துரையாடலை ஏற்பாடு செய்திருந்தன.

குறித்த கலந்துரையாடலில் மன்னார், நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு, மடு ஆகிய ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளையும் உள்ளடக்கிய கிராம மட்டத் தலைவர்கள், மீனவ அமைப்புக்களின் பிரதிநிதிகள், மதத்தலைவர்கள் என குறிப்பிட்ட அளவிலானோர் தெரிவு செய்யப்பட்டு தேர்தல் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டது.

மார்ச் 12 பிரகடனத்தில் கைச்சாத்திட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் தொடர்பிலும் குறிப்பாக தேர்தல் ஒன்று இடம்பெறுகின்ற போது மக்களின் செயற்பாடுகள் குறித்தும் விரிவாக விளக்கமளிக்கப்பட்டது.

மேலும் புதிய உள்ளூராட்சி மன்றத்தேர்தல் முறைமையுடன் புதிய அரசியல் கலாசாரம் ஒன்றை கட்டியொழுப்புவது தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-250)

# மாங்குளத்தில் முதியோர் இல்லம் அமைக்க பிரேரணை நிறைவேற்றப்படல் வேண்டும்

(சிவநகர்)

முல்லைத்தீவு மாவட்டத்தில்முதியோர் இல்லம் அமைக்கப்பட வேண்டிய தேவையுள்ளதாக வடக்கு மாகாண முதியோர் பேரவை செயற்குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

வடக்கு மாகாண முதியோர் பேரவை செயற்குழுக் கூட்டம் அண்மையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைபெற்றது.

இதன்போதே வடக்கு மாகாண முதியோர் பேரவை அங்கத்தவர்கள், சமூக சேவை அலுவலர்கள் ஆகியோரினால் சுட்டிக்காட்டப்பட்டது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

முதியோர் இல்லங்களில் முதியவர்களை இணைக்காமல் தமது குடும்பத்தினரே அவர்களைப் பராரிக்கின்ற நிலையை ஏற்படுத்தப்பட வேண்டுமெனப்பரவலாக தெரிவிக்கப்பட்டு வரும் நிலையில் அனைவரையும் இழந்து தனித்தநிலையில் வாழும் முதியவர்களைப் பாதுகாக்க வேண்டியதும் பராமரிக்க வேண்டியதும் மிக அவசியமானது.

இந்தநிலையில் சுனாமிப் பேரழிவினாலும் யுத்தப் பேரழிவினாலும் தமது உறவுகளையும் உடமைகளையும் இழந்த நிலையில் வாழும் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள பல முதியவர்கள் சொல்லொணாத் துன்பத்திற்குள்ளாகி வாழ்ந்து வருகின்றனர்.

70 வயதிற்கு மேற்பட்ட முதியோர்களுக்கு வழங்கப்படும் இரண்டாயிரம் ரூபா பணத்தித்தில் கழிக்கப்படும் நூறு ரூபா வீதமான பணம் வடக்கு மாகாணத்திலிருந்து பல இலட்சம் மாதாந்தம் தேசிய முதியோர் செயலகத்திற்குக் கிடைக்கின்றது.

இந்த நிதியைப் பயன்படுத்தி தெற்குப் பகுதியில் முதியோர் இல்லங்கள், விடுதிகள் அமைப்பதற்கான முஸ்தீப்புக்களே ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. முல்லைத்தீவு மாவட்டத்தின் மையப்பகுதியான மாங்குளத்தில் முதியோர் இல்லமொன்று அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள்,மாகாணசபை உறுப்பினர்கள் பாராளுமன்றத்திலும் வடக்கு மாகாண சபையிலும் பிரேரணையாக முன்கொண்டுவந்து செயற்படுத்த வேண்டுமென சமூக ஆர்வலர்களாலும் பொதுமக்களாலும் வேண்டுகோள் விடுக்கப்படுகிறது. (2-254)

# மகளிர் மற்றும் சிறுவர் துஷ்பிரயோக தடுப்புப் பணியகம் திறந்து வைப்பு



(மல்லாவி )

ஐரோப்பிய ஒன்றியத்தின் 30 இலட்சம் ரூபா நிதி அனுசரணையுடன் வவுனியா மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்குட்பட்ட கனகராயன்குளம் பொலிஸ் நிலையத்தில் மகளிர் மற்றும் சிறுவர் துஷ்பிரயோக தடுப்பு பணியகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்றுள்ளது. இதில் கலந்து கொண்ட வன்னி மாவட்ட பொலிஸ் பிரதிப் பொலிஸ்மா அதிபர் கருத்துரைக்கையில்,

இதுவரை காலமும் சிறுவர்கள், பெண்கள் தொடர்பில் ஏற்படுகின்ற வன்முறை சம்பவங்கள், உதவிகள், ஆலோசனைகள் வழங்குதல் உட்பட பல்வேறு நலத்திட்டங்களை செயற்படுத்த தனியான கட்டட வசதி இல்லாத நிலை காணப்பட்டது.

இந் நிலை மாற்றப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந் நிகழ்வின் போது, ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதிகளான ரிம்சுட்டான், உணா மககுலி, ஐரோப்பிய சங்கத்தின் இலங்கை, மாலைதீவு வதிவிடப் பிரதிநிதி துங்லாய் மாகு, வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரேஸ்குமார், வன்னி மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன், கனகராயன்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அபயகோன் ஆகியோர் கலந்து கொண்டு திறந்து வைத்துள்ளனர்.

திறப்பு விழா நிகழ்வுகள் நடைபெற்ற போது, பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள், கிராம மட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், வர்த்தக சங்கத்தினர், பொது மக்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்துள்ளார்கள். (2-15)

# ஆசிரியரின் மோ.சைக்கிளை திருடியவர் அகப்பட்டார்

(மல்லாவி )

வவுனியா மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்குட்பட்ட வவுனியா பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள தேக்கவத்தை பகுதியில் ஆசிரியர் ஒருவரின் மோட்டார் சைக்கிளை திருடியதாகக் கூறப்படும் நபர் ஒருவர் வவுனியா போக்குவரத்து பொலிஸாரின் வீதிப்போக்குவரத்து கண்காணிப்பு நடவடிக்கையின் போது மாட்டிக் கொண்டதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளார்கள்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது

தலைக்கவசமின்றி மோட்டார் சைக்கிள் செலுத்தி வந்த நபர் ஒருவரை வீதிக் கண்காணிப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் தடுத்து நிறுத்தி சோதனையிட்ட போது அவர் மதுபோதையில் மோட்டார் சைக்கிள் செலுத்தி வந்தமையும் தெரிய வந்துள்ளது.

இது தொடர்பாக குறித்த நபர் மீது பொலிஸார் விசாரணையை மேற்கொண்ட போது இவர் ஆசிரியர் ஒருவரின் மோட்டார் சைக்கிளை திருடியுள்ளமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து சந்தேக நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதே வேளை தனது மோட்டார் சைக்கிள் ஒன்று திருட்டுப்போயுள்ளதாக ஆசிரியர் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்துள்ளார்.

கைதான சந்தேக நபரிடம் விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் விசாரணைகளின் பின்னர் தடயப் பொருட்களுடன் சந்தேக நபரை வவுனியா மாவட்ட நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாகவும் வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர். (2-15)

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...


## குருதிச் சுற்றுலா

(தொடர்ச்சி..)

அந்த அமுக்கத்தில் இருகூர் வால்வு எனும் கீழே உள்ள கதவுகளைத் திறந்து கொண்டு குருதி செல்லும். அவ்வாறு குருதி செல்லும் இடமே இடது இதயஅறை. அங்கே சென்று பார்த்தால் தொகுதிப் பெருநாடி என்ற பிரதான பாதை அரைமதி வால்வுகளால் மூடப்பட்டிருக்கும். இன்னொரு விடயம் குருதி இடது இதய அறைக்குள் வந்ததும் இருகூர் வால்வுகளும் மூடிக்கொள்ளும். இப்போது குருதி உடல் முழுதும் பிரயாணம் செய்ய வேண்டிய தருணம். எனவே தடித்த சுவரைக் கொண்ட இடது இதய அறை சுருங்கிக் கொள்ளும். வழமையை விட அதிகளவான இந்த அமுக்கத்தால் அரைமதி வால்வை தள்ளிக் கொண்டு குருதி தொகுதிப் பெரு நாடிக்குள் புகுந்து செல்லும். பின்பு ஒவ்வொரு சந்தியிலும் பிரிந்து செல்லும். நாடிகள் புகுந்து உடலங்கங்களையும் உயிர்க்கலங்களையும் நோக்கி சுற்றுலா செல்லும் சுவாசப்பையில் ஏறிய ஒட்சிசனும் சமிபாட்டுத் தொகுதியிலிருந்து ஏறிய ஒரு சக்கரைட்டு முதலிய போசணைகளும் தமக்குரிய இடங்களில் இறங்கிக் கொள்ளும். கூடவே சக்தி உற்பத்தியிலிருந்து வெளியேறிய $CO_2$ நீராவி குருதியில் ஏற மீண்டும் இதயத்தை நோக்கிப் பயணம் தொடரும்.


இங்கு குறிப்பிட வேண்டிய விடயமெனின் சோணை அறைகள் இரண்டும் ஒரே நேரத்தில் சுருங்கி விரிவதோடு இதய அறைகளும் சம நேரத்தில் சுருங்கித் தளரும்.

சோணையறைகள் சுருங்கி குருதி வெளியேறிய பின் முக்கூர் மற்றும் இருகூர் வால்வுகள் சம நேரத்தில் மூடிக் கொள்ளும் அப் போது லப் (Lup) எனும் சத்தம் உருவாகும். சுவா சப்பை நாடி மற்றும் தொகு திப் பெரு நாடியின் ஆரம்பத்தில் அமைந்துள்ள அரைமதி வால்வுகள் மூடப் படும் போது டப் (Dup) எனும் சத்தம் கேட்கும். இப்போது நெஞ்சில் கைவைத்து பாருங்கள் லப் டப் கேட்கிறதா.



வலது அறையிலுள்ள குருதியும் இடது அறையிலுள்ள குருதியும் கலக்காத வண்ணம் இரண்டுக்கும் நடுவிலே இதய அறைப் பிரிசுவர் காணப்படுகின்றது. குருதி திரும்பி வரும் நாளப் பாதையை விட குருதி செல்கின்ற நாடிப்பாதை தடிப்பானதாகக் காணப்படும். ஏனெனில் இடது இதய அறையின் மிகத் தடித்த சுவர் அதிக அமுக்கத்துடன் செலுத்தும் போது குருதியும் அதிக அமுக்கத்துடன் பயணிக்கும். அதைத் தாங்குவதற்காகவே நாடிப்பாதை தடிப்புடையதாகக் காணப்படும்.

பயணம் என்கிறோமே இந்தப் பயணத்தில் விபத்துக்கள் ஏற்படதா (?) இங்குதான் சிக்கல் உள்ளது. இப்பயணத்தின் போது ஏற்படும் சிறு தடங்கல் ஆயினும் அல்லது சிறு விபத்தாயினும் உயிரை கசக்கிப் பிழிந்து எடுத்து விடும். சில சமயங்களில் உயிருக்கு உலையும் வைத்து விடும். இலிப்பிட்டுச் சேர்வைகள் புரதத்துடன் கலந்து குருதியூடாக பயணிக்கின்றன. சமச்சீரற்ற உணவு முறையால் இவ்விலிப்போ புரதங்கள் அதிகரிக்கும் போது நாடிகளில் படிய ஆரம்பிக்கும். ஏற்கனவே முன்னைய பாதைகளாக உள்ள குழாய்கள் மேலும் சிறிதாக்கப்படுவதால் குருதி பயணிக்கும் போது தடங்கல் உருவாகிறது. இதனால் உரிய பகுதிகளுக்கு குருதி செல்வதில் தடையேற்படுகிறது. குறித்த இடங்களில் குருதி தேங்கும் நிலை உருவாகின்றது.




குருதியை அனுப்புவதற்காக இதயம் அதிகப் பிரயத்தனப்பட்டு அமுக்கத்தை அதிகம் வழங்க வேண்டியேற்படும். முடிவில் மாரடைப்பும் தொடர்ந்து மரணமும் பயணத்தடையின் பலனாக அமையும்.

அதிக அமுக்கம் பிரயோகிக்கப்படும்போது நாடியில் துவாரங்கள் ஏற்பட நேரிடும். பாதை உடைந்ததால் பயணத்திசை மாறி குருதி, குழாய்களை விட்டு வெளியே செல்லும். சில வேளைகளில் அதிக குருதி உறைந்து இரத்தக்கட்டிகளை உருவாக்கும். இந்நிலை மூளையின் எங்கேனும் ஒரு பகுதியில் நடந்தால் பயணத்தின் பரிசாய் பாரிசவாதம் எம்மை முட்டித் தள்ளிவிடும்.

எமக்கே தெரியாமல் நடக்கும் இந்தக் குருதிச் சுற்றுலாவில் ஏற்படும் சிறு தடங்கல் எமக்கே தெரியாமல் எம் உயிரையே எடுத்து விடும். எனவே எம்முயிரைக் காக்க நாம்தான் முன்வரவேண்டும். பணமின்றி நிகழும் குருதிப் பயணம் பயமின்றித் தொடர பயனுறுதி வாய்ந்தவற்றை நாம்தான் மேற்கொள்ள வேண்டும்.

அவையும் பணமற்ற செயல்களே. "தவறான உடற்பயிற்சி தவிர்க்கப்படவேண்டிய புகையும் மதுவும் வேண் டிய நாருணவு வேண்டாமே. அதிக உப்பு உணவு குறைக்க வேண்டிய மன அழுத்தம் கூட்டவேண்டிய சத்துணவு இத்தனையும் கடைப்பிடித்தால் தடங்கலற்ற பிரயாணம்நாள்தோறும் நம் உடலினுள் நன்றாக நடக்குமே. நம் வாழ்வு சிறக்குமே. (முற்றும்)


ஸ்ரீ.ஜஸ்மிகா
தரம் 12
யா/ உடுப்பிட்டி
மகளிர் கல்லூரி.


## வாரத்திற்கு ஒரு புதிர்! 180

உலகின் மூன்றாவது நீளமான நதி எனும் பெருமைக்குரிய ஆசியாவின் மிக நீளமான நதி எது?

புதிர் 180 இற்கான விடைகளை 27.02.2017 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

கலாநிதி.(செல்வி) ஷிவதர்சினி இராசலிங்கம்
ஆசிரியர், பிரிவு A
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
இரசாயனவியற்றுறை
யாழ்.பல்கலைக்கழகம்.

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 500/- பணப்பரிசு வழங்கப்படும்.
இப் பணப்பரிசினை யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான சங்கம் பிரிவு A பிரிவிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

## புதிர் 179 க்கான 500/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி

கே.இராஜகோபால்
அடைக்கலம் தோட்டம்
கந்தசுவாமி கோவிலடி,
வட்டுக்கோட்டை.

**புதிர் 179க்கான கேள்வியும் விடையும்:**

காலநிலை மாற்றத்தால் ஏற்படும் கடலோர மணற்படுக்கைகளில் எந்தப் பாரவுலோகத்தின் அளவு அதிகரிக்கின்றதென அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வு சுட்டிக்காட்டியுள்ளது? பாதரசம் (Hg)

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 180

சரியான விடை:-..............................
முழுப்பெயர்:-..............................
முகவரி:-..............................
தொ.பே. இல:..............................
கையொப்பம்:..............................

# மாசி மாத இராசி பலன்கள்

## 13.02.2017-13.03.2017

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



*மூளை பலத்தையே மூல பலமாகக் கொண்டு இயங்கும் மிதுன இராசி அன்பர்களே!*




உங்களுக்கு மாதத் தொடக்கத்திலேயே மகிழ்ச்சியான செய்தி வந்து சேரப் போகிறது. குருவின் பரிபூரண பார்வை உங்கள் இராசியில் பதிவதால் பெருமைகள் குவியும். பிரச்சினைகள் தீரும். தர்ம சிந்தனை மேலோங்கும். தனவரவு திருப்திகரமாக இருக்கும். அருமைப் பெற்றோர்களும், அருகில் இருப்பவர்களும் ஆதரவுக் கரம் நீட்டுவர். ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருந்த அனைத்துக் காரியங்களும் நிறைவேறும். அலைமோதிய அலுவலகப் பிரச்சினைகள் அனைத்தும் சீராகி வளமான வாழ்விற்கு வழிவகுத்துக் கொடுக்கும்.

இராசிநாதன் புதன் வலிமை இழந்து இருப்பது ஒருவழிக்கு யோகம்தான். கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகங்கள் வலிமை இழந்திருக்கும் பொழுது யோகத்தை ஏற்படுத்தும். அந்த அடிப்படையில் மறைந்த புதனால் நிறைந்த தனலாபம் கிடைக்கும். அதைக்கொண்டு பெரிய அளவில் தொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். அரசியல் பிரமுகர்களும், ஆற்றல்மிக்க தொழிலதிபர்களும், உங்களுக்கு உறுதுணையாக இருக்க கிரகங்களின் ஒத்துழைப்பு இம்மாதம் கூடுதலாகவே கிடைக்கின்றது.

கிரகங்கள் நல்ல நிலையில் சஞ்சரிக்கும் பொழுது நாம் எதைச் செய்ய நினைக்கிறோமோ, அதை உடனடியாக செய்து முடிக்க இயலும். கிரகங்கள் வலிமை இழந்து சஞ்சரிக்கும் பொழுது, நாம் பரிகாரங்களை செய்து தான் பலனடைய முடியும். 6இல் சனி இருப்பது விபரீத ராஜயோகத்திற்கு வழிவகுத்துக் கொடுக்கிறது. அஷ்டமாதிபதி சனி 6இல் சஞ்சரிக்கும் பொழுது "கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜயோகம்" என்பதற்கிணங்க வெற்றி வாய்ப்புகள் வீடு தேடி வரப்போகிறது. விலகி இருந்த உறவினர்கள் விரும்பி வந்து சேரப் போகிறார்கள். பகை பாராட்டிய நண்பர்கள் பக்குவமாக வந்திணைந்து உங்கள் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருப்பர். இந்த மாதம் சிவபெருமானைப் போற்றும் சிவராத்திரி வருகிறது. அன்றைய தினம் முழுமையாக விரதமிருந்து அருகில் இருக்கின்ற சிவாலயம் சென்று 6 கால பூஜையிலும் கலந்து கொள்வது நல்லது. இயலாதவர்கள் ஒருகால பூஜையில் மட்டுமாவது கலந்து கொண்டு உள்ளன்போடு சிவனை வழிபட்டால் இல்லம் தேடி இனிய தகவல் வந்து சேரும்.

**கும்ப புதனும், மீன புதனும்!**

பெப்ரவரி 16ஆம் திகதி கும்ப இராசிக்குப் புதன் செல் கிறார். உங்கள் இராசிக்கு அதிபதியான

## நெருங்கி வருகிறது நல்ல நேரம்!

புதன் 9ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது பொன், பொருள் சேர்க்கை ஏற்படும். புதிய திருப்பங்கள் உருவாகும். மண், பூமி வாங்கும் யோகம உண்டு. மாங்கள நிகழ்வுகள் இல்லத்தில் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படும். மார்ச் 5ஆம் திகதி மீனத்தில் புதன் நீசம் பெறப்போகிறார். இந்த காலத்தில் தாய்வழி ஆதரவு பெருகும். கொடுத்த கடன்கள் வசூலாகும். உறவினர் பகை அகன்று உற்சாகத்தோடு செயற்படுவீர்கள்.

**குருவின் வக்ர இயக்கம்!**

பெப்ரவரி 22ஆம் திகதி துலாம் இராசிக்குள் குரு வக்ரம் பெறுகிறார். அதன் பிறகு மார்ச் 10ஆம் திகதி கன்னி இராசிக்கு குரு வக்ரம் பெற்றுச் செல்கிறார். இதுபோன்ற வக்ர காலங்களில் ஆலோசிக்காமல் செய்யும் காரியங்களில் கூட ஆதாயம் கிடைக்கும். கல்யாணக கனவுகள் நனவாகும். களத்திர ஸ்தானத்திற்கும், தொழில் ஸ்தானத்திற்கும் குரு அதிபதியாக விளங்குவதால் வாழ்க்கைத் துணையின் உத்தியோகம் சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

உதிரி வருமானங்கள் பெருகும். பழைய பங்குதாரர்களை விலக்கிவிட்டுப் புதிய பங்குதாரர்களை சேர்த்துக் கொள்ளும் சூழ்நிலை உருவாகும்.

**மேட செவ்வாயின் சஞ்சாரம்!**

பெப்ரவரி 26ஆம் திகதி மேட இராசிக்குச் செவ்வாய் செல்கிறார். 6,11இற்கு அதிபதி செவ்வாய் இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது சம்பள உயர்வு பற்றிய சந்தோஷத் தகவல் வந்து சேரும். உத்தியோகத்தில் வெளிநாடு செல்லும் வாய்ப்பு கைகூடும். சகோதரத்தோடு இணக்கம் ஏற்படும். வருமானத்திற்கு வழி வகுத்துக் கொள்வீர்கள். உடன்பிறந்தவர்களால் கூடுதல் நன்மை கிடைக்கும். பெரிய அளவில் முதலீடுகள் செய்து தொழிலை விரிவுபடுத்த நினைப்பீர்கள். வாகனம் வாங்கும் யோகம் கைகூடும். இம் மாதம் வியாழக்கிழமை தோறும் குருவழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**


இந்த மாதம் பார்க்கும் குருவைப் பலப்படுத்த வேண்டிய மாதமாகும். தாமதப்பட்ட காரியங்கள் தடையின்றி நடைபெறும். சேமிப்பு உயரும். சிறுசிறு பிரச்சினைகளால் வந்த உறவினர் பகை மாறும்.

கணவன்-மனைவிக்குள் நேசமும், பாசமும் கூடும். ஒருமித்த கருத்துடன் செயலாற்றி காரியங்கள் அனைத்திலும் வெற்றி காண்பீர்கள். பிள்ளைகளின் முன்னேற்றம் எதிர்பார்த்த படி அமையும். அவர்களின் கல்யாணக் கனவுகளை நனவாக்குவீர்கள்.

உங்கள் பேரில் சொத்துகள் வாங்கும் யோகம் உண்டு. வருத்தங்கள் அகன்று வளர்ச்சி கூடும். உத்தியோகத்தில் உயர்பதவி கிடைப்பதற்கான அறிகுறிகள் தென்படும். வியாழன் தோறும் விரதமிருந்து குருவை வழிபடுவதோடு குலதெய்வ வழிபாட்டையும் மேற்கொள்வது நல்லது.



*நல்ல மாற்றங்கள் வரும் என்ற நம்பிக்கையோடு செயற்படும் கடக இராசி நேயர்களே!*




மாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, இராசிநாதன் சந்திரன் தனாதிபதி சூரியனைப் பார்க்கும் விதத்தில் தொடக்க நாள் அமைகின்றது. சுகஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை அஷ்டம ஸ்தானத்தில் பதிவாகின்றது. எனவே ஆரோக்கியத் தொல்லை அடியோடு அகலும். செயற்பாடுகளில் வெற்றி காண்பீர்கள். முக்கியப் புள்ளிகளால் முன்னேற்றம் கூடும் மாதம் இது.

தனாதிபதி சூரியன் தன ஸ்தானத்தைப் பார்ப்பதால் வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும். வருமானப் பற்றாக்குறை அகலும். எதை எந்த நேரத்தில் செய்ய விரும்புகிறீர்களோ, அதை அந்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள்.

உங்கள் இராசியைப் பொறுத்தவரை 6,9இற்கு அதிபதியானவர் குருபகவான். 9இற்கு அதிபதியானவர் சுக ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது பெற்றோர் வழி ஒத்துழைப்பு கிடைக்கும். பிரிந்து சென்ற உறவினர்கள் மீண்டும் வந்திணைவர். இடம், பூமி வாங்குவதில் இருந்த பிரச்சினைகள் அகலும். என்றைக்கோ வாங்கிப் போட்ட இடம் இப்பொழுது நல்ல விலைக்கு விற்பனையாகும்.

வீண் விரயங்கள் ஏற்படாமல் கைக்கு வந்த தொகையைத் தொழிலுக்கு மூலதனமாகவோ, புதிய இடம் வாங்குவதற்கோ செலவிடுவது நல்லது. புதிய வாகனம் வாங்குவதற்கான முயற்சியில் ஈடுபடுவீர்கள். அந்த முயற்சிக்கு அரசுவழிச் சலுகைகள் உங்களுக்கு கிடைக்கலாம்.

செவ்வாய் சுக்ர சேர்க்கை 9ஆம் இடத்தில் உள்ளது. எனவே வாழ்க்கைத் துணை வழியிலும், தந்தை வழியிலும் வர வேண்டிய சொத்துகள், சொந்தங்களின பகையால் ஏற்பட்டிருந்த தடை அகன்று தகுந்த பலன கிடைக்கும். 2இல் இராகுவும், 8இல் கேதுவும் இருப்பதால் சர்ப்ப கிரகங்களின் ஆதிக்கம் தொடர்ந்து கொண்டுள்ளது. எனவே வளர்ச்சியும், தளர்ச்சியும் மாறி மாறி வரலாம். வளர்ச்சியை

## முக்கிய முடிவெடுக்கும் நேரம்!

வரவழைத்துக் கொள்ள விரும்புபவர்கள் முறையாக நாகசாந்திப் பரிகாரங்களை யோகபலம் தரும் நாளில் செய்வது நல்லது.

இந்த மாதம் சிவராத்திரி விழா வருவதால் அன்றைய தினம் சிவனை முறையாக வழிபடுவதன் மூலம் செழிப்பான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளலாம்.

**கும்ப புதனும், மீன புதனும்!**

பெப்ரவரி 16ஆம் திகதி கும்ப இராசிக்குப் புதன் செல்கிறார். 12ஆம் இடத்திற்கு அதிபதியான புதன் அஷ்டமத்தில் அடியெடுத்து வைக்கும் பொழுது, விபரீத ராஜயோக அடிப்படையில் எதிர்பாராத நல்ல திருப்பங்கள் ஏற்படும். எதிரிகள் விலகுவர். உதிரி வருமானத்தோடு ஒப்பற்ற விதத்தில் தொழிலிலும் லாபம் கிடைக்கும். மக்கள் செல்வங்களின் மனஸ்தாபம் மாறும். மறைந்த புதனால் நிறைந்த தனலாபம் கிடைக்கும் நேரமிது. மார்ச் 5 ஆம் திகதி மீனத்தில் புதன் நீசம் பெறப் போகிறார். இக்காலத்தில் விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேருவர். உத்தியோகத்தில் நீண்ட தூரத்திற்கு இடமாற்றங்கள் கிடைக்கலாம்.

**குருவின் வக்ர இயக்கம்!**

பெப்ரவரி 22ஆம் திகதி துலாம் இராசிக்குள், குரு வக்ரம் பெறுகிறார். அதன் பிறகு மார்ச் 10ஆம் திகதி மீண்டும் கன்னி இராசிக்குள் குரு வக்ர இயக்கத்தில் செல்கிறார். இதன் விளைவாக பூர்வீக சொத்துத் தகராறுகள் நல்ல முடிவிற்கு வரும். உத்தியோகத்தில் நீண்ட நாட்களாக எதிர்பார்த்துக் காத்திருந்த பதவி உயர்வு, ஊதிய உயர்வுகள் வந்து சேரும். குழந்தைகளின் கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

**மேட செவ்வாயின் சஞ்சாரம்!**


பெப்ரவரி 26ஆம் திகதி மேட இராசிக்குச் செவ்வாய் செல்கிறார். இக்காலம் ஒரு இனிய காலமாகும். 5,10-க்கு அதிபதியான செவ்வாய் 10ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது புதிய தொழில் தொடங்கும் திட்டங்கள் நிறைவேறும். ஒப்பந்தங்கள் வந்து அலைமோதும். இடம், பூமி வாங்குவதில் ஆர்வம் செலுத்துவீர்கள். இம் மாதம் செவ்வாய்க்கிழமை தோறும் முருகப்பெருமானை வழிபட்டு வருவது நல்லது.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறும் மாதம் இது. சொத்துகளால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். சொந்த, பந்தங்களின் ஒத்துழைப்போடு முன்னேற்றம் காண்பீர்கள். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை அதிகரிக்கும். நண்பர்களின் ஒத்துழைப்போடு உத்தியோகத்தில் முன்னேற்றம் காண்பீர்கள். குழந்தைகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். குடியிருக்கும் வீட்டால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். எதிர்பார்த்தபடியே இலாகா மாற்றங்களும், சம்பள உயர்வும் கிடைக்கும். மேட செவ்வாயின் ஆதிக்க காலத்தில் மிகுந்த நன்மை கிடைக்கும். குலதெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள். இராகு-கேது பிரீதி செய்வதன் மூலம் நல்ல வாய்ப்புகளை வரவழைத்துக் கொள்ள இயலும்.


(தொடரும்)

# வன்னிப் பெருநிலப்பரப்பில் கட்
# நாகபடுவானில் கண்டுபிடிக்கப்பட்







நீண்டகாலமாக தொல்லியல், வரலாற்று ஆய்வாளர்களால் அதிகம் கவனத்தில் கொள்ளப்படாத வன்னிப் பிராந்தியத்திற்கு தொன்மையான, தொடர்ச்சியான வரலாறு உண்டு என்பதை உறுதிப்படுத்துவதில் அண்மைக்காலமாக மன்னார் மாவட்டத்தில் கட்டுக்கரைக் குளம் என அழைக்கப்படும் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் தொல்லியல் அகழ்வாய்வுகளுக்கு முக்கிய இடமுண்டு. இங்கு தொடர்ந்தும் அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில் பூநகரிப் பிரதேச சபை முழங்காவில் குமுழமுனை வட்டாரங்களை அண்டிய நாகபடுவானில் தெரியவந்த தொல்லியற் சின்னங்கள் பற்றிய செய்திகளை அப் பிரதேச கிராம அலுவலகர், சமுர்த்தி உத்தியோகத்தர், ஊடகவியலாளர் மற்றும் வரலாற்று ஆர்வலர்கள் எமது தொல்லியல் இறுதிவருட மாணவன் பானுசங்கருக்கு தெரியப்படுத்தினர். அதன் அடிப்படையில் தொல்லியற் திணைக்களப் பிரதிப்பணிப்பாளர் மற்றும் பூநகரிப் பிரதேச செயலாளரின் அனுமதியுடன் தொல்லியற்திணைக்களப் பிரதேசப் பொறுப்பாளர் பா. கபிலன் உதவியுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொல்லியற் பிரிவு ஆசிரியர்கள், மாணவர்கள் இணைந்து கடந்த வாரம் அவ்விடத்தை அடையாளம் கண்டு அங்கு பரீட்சகரமான ஆய்வு ஒன்றை மேற்கொண்டு வருகின்றனர். இவ்விடம் கட்டுக்கரைக்குளத்திற்கு வடமேற்கே 50 கி.மீற்றர் தொலைவில் நாகபடுவானில் கானா மேட்டைக் குளம் என அழைக்கப்படும் காட்டுப்பகுதியில் பாழடைந்த குளத்தின் அணைக்கட்டுக்கு அருகில் அமைந்துள்ளது. இவ்விடத்தில் இருந்த பாரிய மரமொன்று வேருடன் விழுந்த போது அவற்றின் அடிப் பகுதியில் புதையுண்டிருந்த வரலாற்றுத் தொன்மை மிக்க பல சின்னங்கள் வெளிக்கிளம்பியிருந்தன. இச் சின்னங்களை அச்சத்துடனும், ஆச்சரியமாகவும் பார்த்த மக்களில் ஒரு பிரிவினர் அவற்றின் வரலாற்றுப் பெறுமதியை உணராமல் அச்சின்னங்களில் இ கும், தமது வீடுகளுக்கும் எடுத்துச் சென்றுள்ளனர். ஏஞ்சியிருந்தவற்றை அச்சம் காரணமாக மக்கள் சிதைவடையச் செய்து ஒதுக்குப்புறங்களில் வீசியுள்ளனர்.



ஆயினும் எமது ஆய்வின் போது இவ்வகையான தொல்லியற் சின்னங்கள் அவ்விடத்தில் பரந்த அளவில் மண்ணினுள் புதையுண்டிருப்பதை உணரமுடிந்தது. அவற்றை உறுதிப்படுத்தும் நோக்கில் அங்கு தெரிவு செய்யப்பட்ட ஒரு இடத்தில் 4X3 மீற்றர் நீள அகலத்தில் மாதிரிக்குழி அமைத்து அகழ்வு செய்தோம். இந்த அகழ்வின் போது அடையாளம் காணப்பட்ட மூன்று கலாசார மண் அடுக்குகளில் பல்வேறு கால கட்டத்தைச் சேர்ந்த மட்பாண்டங்களைக் கண்டுபிடிக்க முடிந்தது. அவை வடிவ அமைப்பிலும், தொழில் நுட்பத்திறனிலும் கட்டுக்கரைக் குளப்பிரதேச அகழ்வாய்வில் கிடைத்த மட்பாண்டங்களைப் பெருமளவு ஒத்ததாக உள்ளன. மூன்றாவது கலாசார மண் அடுக்கல் ஒரு சில மட்பாண்டங














# ...ட்டுக்கரைக் குளத்தை அடுத்து ...ட்ட இன்னொரு புராதன குடியிருப்பு









களுடன் பெருமளவு சுடுமண் உருவங்களும், கழிவிரும்புகளும் (Iron Slakes) கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இக்கலாசார மண்படையில் கண்டுபிடிக்கப்பட்ட சுடுமண் உருவங்களும், மட்பாண்டங்களும் இங்கு வாழ்ந்த பண்டைய கால மக்களின் சமய நம்பிக்கைகளைப் பிரதிபலிப்பதாக உள்ளன. அச்சுடுமண் உருவங்களில் பீடத்தின் மேல் அமர்ந்திருக்கும் இரு தெய்வங்களின் சிலைகள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. இத்தெய்வச் சிலைகளை ஊர்வலமாகத் தூக்கிச் செல்லும் வகையில் அதன் சதுரமான பீடத்தின் நான்கு பக்கங்களிலும் முக்கோண வடிவிலமைந்த சதுரமான துவாரங்கள் காணப்படுகின்றன. பீடத்தில் அமர்ந்த நிலையில் உள்ள தெய்வச் சிலைகளின் இரு கால்களும் காற் சலங்கைகளுடன் தொங்க விடப்பட்ட நிலையில் காணப்படுகின்றன. சிலையின் வலது கரம் பிற்கால தெய்வச் சிலைகளில் இருப்பது போன்ற அபய கஸ்தமாகவும், இடது கரம் வரதகஸ்தமாகவும் தோற்றமளிக்கின்றன. அவற்றின் வலது கஸ்தத்தின் உள்ளங்கையில் திரண்ட மும்மணிகள் காணப்படுகின்றன. இவற்றின் தோற்ற அமைப்பு பிற்காலச் சிலைகள், செப்புத் திருமேனிகளின் கலை வடிவங்களை நினைவுபடுத்துவதாக உள்ளன. இருப்பினும் இச்சிலைகளின் தலைப்பாகங்கள் பெருமளவுக்கு சிதைவடைந்த நிலையிலேயே காணப்பட்டன. அவற்றிடையே கிடைத்த நட்சத்திர வடிவிலான தோடணிந்த காதுகள்,



தாடைப்பகுதிகள் பண்டைய கால மக்களின் கலைமரபையும், உயர்ந்த தொழில் நுட்பத் திறனையும் புலப்படுத்துவதாக உள்ளன. இச்சிற்பங்களுடன் சேர்ந்ததாக மேலும் சில கைகள் உடைந்த நிலையில் கிடைத்துள்ளன. அக்கைகளில் சிலவற்றின் உள்ளங்கைகளில் திரண்ட மும்மணிகள் காணப்படுகின்றன. இவற்றை நோக்கும் போது பல கரங்கள் கொண்ட தெய்வச் சிலைகளாக இவை இருந்திருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது.

இச்சிலைகளுடன் இவ்வகழ்வாய்வில் கிடைத்த பிற தொல்லியற் சின்னங்கள் இவ்விடம் பண்டையகால மக்களின் வழிபாட்டிற்குரிய மையமாக இருந்திருக்கலாம் எனக் கருத இடமளிக்கிறது. இதற்கு அகழ்வாய்வின் போது கிடைத்த பல அளவுகளில் வடிவங்களில் அமைந்த நாக



உருவங்கள், ஆமையின் வடிவம், அகல் விளக்குகள், ஆலய மணிகள், எருதின் உருவம், யானை, குதிரை என்பவற்றின் உடற்பாகங்கள், இலிங்க வடிவங்கள், பல அளவுகளில் பயன்படுத்தப்பட்ட சட்டிகள், தட்டுகள், அவற்றின் விளிம்புகளில் படுத்துறங்கும் நாக பாம்பின் உருவம் என்பவற்றை உதாரணங்களாகக் குறிப்பிடலாம். இச்சான்றாதாரங்களுடன் இங்கு கண்டுபிடிக்கப்பட்ட இரு சுடுமண் அச்சுக்கள் இங்கு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. அவற்றின் ஒருபக்கத்தில் புள்ளிகளான இலட்சனை அல்லது பண்டைய கால எழுத்துக் காணப்படுகின்றது. இது அறிஞர்களின் முறையான பொருள் விளக்கத்தைப் பெறும்பட்சத்தில் இங்கிருந்த குடியிருப்புக்கள் மற்றும் சமயச் சின்னங்களின் காலத்தை நிச்சயப்படுத்தக் கூடியதாக இருக்கும் என நம்பலாம்.




தமிழகத்தில் சுடு மண்ணாலான தெய்வ உருவங்கள், அரசனின் சிலைகள், சமயச் சின்னங்கள் என்பன நீர்நிலைகளை மையப்படுத்தி



இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றிய குடியிருப்புப் பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் தெய்வ உருவங்கள், கிராமி தெய்வங்கள் அல்லது நாட்டுப்புற தெய்வங்கள் என அழைக்கப்படுகின்றன. இம்மரபு பிற்காலத்திலும் தொடர்ந்ததற்கு சங்க இலக்கியத்திலும், பழந்தமிழ் இலக்கியங்களிலும் பல ஆதாரங்கள்காணப்படுகின்றன.

நாகபடுவானில் இவ்வகைச் சிலைகள், சிற்பங்கள் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்ட இடத்திற்கு மிக அருகே தெற்கிலும், மேற்கிலும் உள்ள காட்டுப்பகுதியில் பாழடைந்த இரு குளங்களின் அணைக்கட் டுக்கள் காணப்படுகின்றன. இதனால் இங்கு கிடைத்த சமயச் சின்னங்கள் கட்டுக்கரைக் குளத்தைப் போல் பண் டைய காலத்தில் குளத்தை மையப்படுத்தி தோன்றிய குடியிருப்புக்களுக்குரிய பெறு மதிமிக்க சான்றுகளாகக் கொளளத்தக்கன. இவை ஈழத் தமிழரின் பூர்வீக வரலாறு, பண்பாடு பற்றிய ஆய்வுகளுக்கு கிடைத்த முக்கிய சான்று களாகக் கொள்வதில் எதுவித சந்தேகமும் இல்லை எனலாம்.

பேராசிரியர் ப.புஷ்பரட்ணம்
தொல்லியல் இணைப்பாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



# பௌத்த மதத்தைப் பாதுகாக்க நான் குரல் கொடுப்பேன்

## அமைச்சர் மனோ உறுதி



(கொழும்பு)

**புதிய அரசியலமைப்பில் பௌத்த மதத்துக்குரிய இடம் வழங்கப்படாதிருந்தால் அதற்கு எதிராக முதலில் குரல் கொடுக்கப் போகின்றவன் நான்தான் என அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் இரவு கொழும்பில் நடைபெற்ற தனியார் வானொலி நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

முன்னர் இடம்பெற்ற யாபபுச் சீர்திருத்தத்தில் உள்ளடக்கப்படாத ஜனநாயக வாத விடயங்கள் புதிய அரசியல் யாப்பு சீர்திருத்தத்தில் உள்வாங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மனோ மேலும் தெரிவித்தார். (இ-7)

# கூட்டு எதிரணியின் Top 10ல் ஏழாவது நபர் அமைச்சர் ரவி



(கொழும்பு)

கூட்டு எதிர்க் கட்சியின் டொப் டென் ஊழல் மோசடிக்காரரர்களின் அறிமுக வரிசையில் ஏழாவது நபராக நிதி அமைச்சர் ரவி' கருணாநாயக்க அறிவிக்கப்பட்டுள்ளார்.

அரசாங்கத்தின் அனுசரணையுடன் வாகன உதிரிப்பாகங்களை இறக்குமதி செய்து 6500 மில்லியன் ரூபாவை அரசாங்கத்துக்கு நட்டம் ஏற்படுத்தினார் என்பது இவருக்கெதிராக கூட்டு எதிர்க் கட்சி முன்வைத்துள்ள குற்றச்சாட்டாகும்.


இந்தக் குற்றச்சாட்டு மகிந்தானந்த அளுத்கமகே எம்.பி. யினால் இலஞ்ச ஊழல் விசாரணைகள் ஆணைக்குழுவில் நேற்று முன்தினம் முன்வைக்கப்பட்டுள்ளது. (இ-7)

# இலங்கையில் பணியாற்ற 6 1/2 இலட்சம் டொலர் தேவை

## ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் சுட்டிக்காட்டு

ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்தின்செயற்பாடுகளை இலங்கையில் இந்த ஆண்டு முன்னெடுப்பதற்கு ஆறு இலட்சத்து 48 ஆயிரம் டொலர் நிதி தேவைப்படுவதாக ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் செயிட் ராட் அல ஹு'சேன் தெரிவித்துள்ளார்.

ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்தின் செயற்றிறனை வலுப்படுத்துவதற்கு இந்த ஆண்டில் மேலதிக நிதி தேவைப்படுவதாகவும் இதற்கு நாடுகளும். தனியார் கொடையாளர்களும் உதவ வேண்டும் என்றும் அவர் கோரிக்கை ஒன்றை



விடுத்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்துக்கு ஐ.நாவின் வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் ஆண்டுக்கு 107.56 மில்லியன் டொலர் நிதி ஒதுக்கப்படுவது வழக்கம்.

எனினும், மனித உரிமைகள் பாதுகாப்பு சார்ந்த செயற்பாடுகள், சிறப்பு அறிக்கையாளர்களின் பயணங்கள் உள்ளிட்ட தேவைகளுக்காக 252.9 மில்லியன் டொலர் மேலதிகமாகத் தேவைப்படுவதாக ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் பணியகம் தெரிவித்துள்ளது.

இதன் அடிப்படையில் இலங்கையில் இந்த ஆண்டில செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு, ஆறு இலட்சத்து 48 ஆயிரம் டொலர் நிதி தேவைப்படுவதாக ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் தெரிவித்துள்ளார். (இ-7)

# பேஸ்புக் தடை; அரசாங்கம் தீர்மானிக்கவில்லை - கயந்த


பேஸ்புக் போன்ற சமூக வலைத்தளங்களை கட்டுப்படுத்த அரசாங்கம் கவனம் செலுத்தவில்லை என்று பாராளுமன்ற மறுசீரமைப்பு மறறும் ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவை இணை பேச்சாளருமான கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக் களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் சமூக வலைத்தளங்களை கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா? என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அமைச்சர், சமூக வலைத்தளங்களை கட்டுப்படுத்துவதற்கான நடைமுறை உலக நாடுகளில் இருக்கும் என்று நான் நினைக்கவில்லை;

இவ்வாறான சமூக வலைத்தளங்களை பொதுமக்கள் பயன்படுத்துவது தொடர்பில் அவற்றை தெளிவுபடுத்துவதற்கு நாம் முயற்சிக்கின்றோம்.

ஆனால் இதனை கட்டுப்படுத்துவதற்கோ நிறுத்துவதற்கோ நாம் தீர்மானிக்க



வில்லை எனவும் தெரிவித்துள்ளார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## உடனே கண்டிக்கிறீர்களா?

எதையும் கையோடு உடனே கண்டிக்க வேண்டும் என்பதில்லை. ஒரு பிள்ளை அடுப்பின் அருகே போகிறது. ஒரு சிறுமி ஏதோ கோபத்தில் தனக்கு குடிக்கத் தரப்பட்ட பாலை கீழே கொட்டுகிறாள். ஒரு வாலிபன் தனக்குத் தெரிந்த ஒருவரை அறைந்து விடுகிறான்.

இவற்றையெல்லாம் செயற்குழுவைக் கூட்டியா கண்டிக்க முடியும் என்று கேட்கிறீர்கள் அல்லவா? நியாயமான கேள்வி. இவை உடனே கண்டிக்கப்பட வேண்டியவைதாம். ஆனால் சந்தர்ப்பம் வரும் போது கண்டிக்கப்பட வேண்டிய விடயங்களே உலகில் அதிகம்.

ஆற அமரக் கண்டித்தால் எங்கே எடுபடப் போகிறது? எதையும் சூட்டோடு சூடாகக் கண்டிக்க வேண்டும் என்ற எண்ணம் உள்ளவர்கள் கீழ்க்காணும் விடயங்களை மீண்டும் ஒருமுறை பரிசீலிக்கட்டும்.

கையோடு கண்டிப்பவர்கள் பெரும்பாலும் கோபத்தின் உச்சியில் இருக்கிறார்கள். வார்த்தைகளை வரைமுறை இன்றிக் கொட்டுகிறார்கள். அதைக் கேட்டுக் கொள்ள நேர்பவர்களோ, தாங்கள் செய்த தவறை மறந்து விட்டு மற்றவர்கள் பேசிய பேச்சுகளைப் பிடித்துக் கொள்கிறார்கள்.

ஆக பிரச்சினைகள் திசை திரும்பி விடுகின்றன. கண்டிக்கத்தக்க தவறுகளைச் செய்து விட்டவர்கள் கூடத் தங்கள் செயலில் உள்ள சிறு நியாயத்தை மற்றவர்கள் உணர மறுக்கிறார்களே எனக் குதிக்கிறார்கள். தவறாகவே இருந்தாலும் தனக்கு மன்னிப்புத் தரப்படக் கூடாதா? என்று உள்ளுக்குள் ஏங்குகிறார்கள்.

எனவே கண்டித்துச் சொல்பவர்களின் எந்தச் சொல்லும் இவர்களது காதில் ஏற மறுக்கிறது. எனவே அதையே திரும்பத் திரும்ப செய்கிறார்கள். தவறுகள் தொடர்கின்றன.

மூன்றாவதாக உடனே கண்டிப்பவர்கள் சூழ்நிலைகளை மறந்து விட்டுப் பேசுகிறார்கள். இது நான்கு பேர் நடுவே நடக்கும் போது கண்டிக்கப்பட்டவர்கள் தாங்கள் மிகவும் அவமானப்படுத்தப்பட்டு விட்டதாக நினைக்கிறார்கள். எனவே கண்டிக்கப்பட்டவர்கள் தங்கள் தவறை உணராமல் கண்டித்தவர்கள் மீது எரிச்சலடைகிறார்கள்.

எனவே இந்த அணுகுமுறையிலும் கண்டிப்பவர்களின் நோக்கம் அடியோடு நிறைவேறாமல் போய்விடுகிறது.

அப்படியென்றால் எப்போதுதான் கண்டிப்பது? ஓர் ஆட்சேபனை. கண்டிப்பது தவறு; எடுத்துச் சொல்லுங்கள் எடுபடும்.

யாரையும் வைத்துக் கொண்டு பேசாதீர்கள். மனிதர் வேலைக்குத் தாமதாமாக வருகிறாரா? மணி என்னை மாலையில் என் அறையில் வந்து பார்? என்று சொல்லுங்கள். அவர் பொய்க் காரணம், சாக்கு எனும் கேடயங்களோடு வருவார். நீங்கள் ஆயுதங்களைப் பயன்படுத்தாமல் இதமாக எடுத்துச் சொல்லுங்கள். மனிதர் சராணாகதி அடைந்து மாறியே விடுவார். நம்மால் மாற்றப்பட வேண்டியவர்கள், நம்மை உதவிக்கு அணுகும் போதும் எடுத்துச் சொல்வதும் நல்ல பலனைத் தரும்.

குரலில் எரிச்சலைக் களைத்து, பரிவுடன் பேசுங்கள். அவை அப்படியே இதயத்தில் போய்த் தங்கித் தன் வேலையைத் தொடங்கும். மெல்ல மூளையைச் சலவை செய்ய ஆரம்பித்துவிடும்.

கண்டிப்பதன் -இல்லையில்லை- எடுத்துச் சொல்வதன் நோக்கம் மற்றவர்கள் மாற வேண்டும் என்பதுதானே? அது முன் கூறிய வழிமுறைகளில் தான் சாத்தியம்.

**லேனா தமிழ்வாணன்**

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்-பகுதி 2

01. பின்வரும் பாடலை நன்றாக வாசித்துக் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக.

*சுத்தம் தெருவில் செய்கிறாய்*
*சிறந்த தொண்டன் ஆகிறாய்*
*வண்ணக் குயில் குஞ்சுக்கு*
*வளர்ப்புத் தாயும் நீயாவாய்!*

*விட்டுக் கொடுத்து வாழும்*
*வித்தை எங்கு கற்றீரோ?*
*கற்கும் சிறுவர் மனத்திலே*
*கருத்தை விதைத்து உயர்த்துகிறாய்?*

1. இப் பாடல் எந்தப் பறவையைப் பற்றிக் கூறுகிறது?
........................................................................................

2. பாடலில் வந்துள்ள நிறுத்தற் குறிகள் எவை?
........................................................................................

3. ஒத்த சொல் தருக.
i. வழி - ....................................................
ii. அகத்திலே.....................................................

4. விட்டுக் கொடுத்து வாழும் பிராணி எது?
........................................................................................

5. பாடலில் வந்துள்ள பெயர் அடைமொழிச் சொல் ஒன்று தருக.
........................................................................................

6. விசிறியும் சுழியும் அரவும் இடம்பெற்ற சொல் எது?
........................................................................................

(1 X 6 = 6 புள்ளிகள்)

02. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் வெற்றிடத்திற்கு பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து எழுதுக.
1. காலையில் குயில்கள் இனிமையாக
........................................................ (கூவியது, கூவின)
2. திருடனைக் கண்ட நாய்
........................................................(குரைத்தன, குரைத்தது)

(2 X 1 = 2 புள்ளிகள்)

03. பின்வரும் பழமொழிகளின் கருத்தினை புள்ளிக்கோட்டில் எழுதுக.
1. கந்தையானாலும் கசக்கிக்கட்டு:-
........................................................................
2. அன்பான சிநேகிதனை ஆபத்தில் அறியலாம் :-
........................................................................

(2 X 1 = 2 புள்ளிகள்)

04. பின்வரும் கருத்துக்களுக்குப் பொருத்தமான மரபுத்தொடரை எழுதுக.
1. ஆபத்து வேளையில் கைவிடல் :-
........................................................................................
2. மனதை வருந்தச் செய்தல் :-
........................................................................................

(2 X 1 = 2 புள்ளிகள்)

05. பின்வரும் பாடல்களின் இடைவெளிகளை நிரப்புக.
1. *கும்மியடி பெண்ணே கும்மியடி - நீ*
........................................................................
*குழந்தைப் பெண்ணே கும்மியடி - நீ*
*குலத்தைக் காத்திட கும்மியடி*
2. *சாய்ந்தா டம்மா சாய்ந்தாடு*
*தாமரைப்பூவே சாய்ந்தாடு*
........................................................................
*கோவிற் புறாவே சாய்ந்தாடு* (2 X 1 = 2 புள்ளிகள்)

06. ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.
1. அழிப்பதனால் / காடுகளை / சூழல் / மாசடைகின்றது / சுற்றுபுறச்
........................................................................................
2. தொழிலுக்கு / வேறெதுவும் / உழவுத் / ஒப்பானது / இவ்வுலகில் / இல்லை.
........................................................................................

(2 X1 =2 புள்ளிகள்)

07. பின்வரும் விடுகதைகளுக்குரிய விடைகளை எழுதுக.
1. தன்னிடம் சேருபவனை தன்னைப்போல் மாற்றுவான் அவன் யார்?
....................................
2. வில்லாய் வளைபவன் ஒருபோதும் ஒடிந்து போக மாட்டான் அவன் யார்?
....................................

08. ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலப் பெயரை ஆங்கிலத்தில் எழுதுக.



.......................... (1X1=1 புள்ளி)

09. பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் தமிழ்க் கருத்தை எழுதுக.
1. Be Careful - ........................................................
2. Please do your home work - ......................... (2 X 1 = 2 புள்ளிகள்)

10. பின்வரும் சிங்களச் சொற்களின் தமிழ்க் கருத்தை எழுதுக.
1. கரவில :- ................................................ (1 X 1 = 1 புள்ளி)


11. பின்வரும் சிங்கள வாக்கியத்தின் கருத்தை தமிழில் எழுதுக.
1. சத்து வத்த(ட்)ட யமு (Dh) த ? - ........................................................
2. ரு (ப்) பியல் திஹய் - ....................................... (2 X 1 = 2 புள்ளிகள்)

12. அன்றாடம் நாம் இயற்கையான காய்கறிகளை உண்டு நோயின்றி வாழ வேண்டும். "வீட்டுத்தோட்டத்தின் பயன்கள்" என்னும் தலைப்பில கருத்துள்ள ஐந்து சொற்களுக்குக் குறையாத மூன்று வாக்கியங்கள் எழுதுக.
1........................................................................................
........................................................................................
2........................................................................................
........................................................................................
3........................................................................................
........................................................................................

(3 X 2= 6 புள்ளிகள்)


♦ சரியான விடையைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

13.




1. தரப்பட்டுள்ள இலக்கங்களைப் பயன்படுத்தி ஆக்கக் கூடிய மிகச் சிறிய எண்ணை எழுதுக.
....................................................
2. மிகச் சிறிய எண்ணில் 2 குறிக்கும் பெறுமானம் யாது?

14.




இரண்டு பாத்திரங்களிலும் உள்ள நீரின் மொத்த அளவு யாது?
........................................................................

15) 40 தொடக்கம் 50 வரையான எண்களை எழுதும் போது நடுவில் வரும் எண் யாது? ..........................

16) காலை 7.15 இற்கு புறப்பட்ட புகையிரதம் பிற்பகல் 3.45 இற்கு கொழும்பைச் சென்றடைந்தது.
1. கொழும்பைச் சென்றடைந்த நேரத்தை நியம நேரத்தில் எழுதுக.
..................................................
2. பயணத்திற்குச் செலவிடப்பட்ட நேரம் எவ்வளவு?
..................................

17. சதுரமுகி ஒன்றின் விளிம்பு ஒன்றின் நீளம் 8cm எனின் மொத்த விளிம்புகளின் நீளம் யாது?
........................................................................................

18. A குவியலில் 850 தேங்காய்களும் B குவியலில் A குவியலின் இருமடங்கு தேங்காய்களும் உள்ளன. A,B ஆகிய இரு குவியல்களிலும் காணப்பட்ட மொத்தத் தேங்காய்களின் எண்ணிக்கை யாது?
........................................................................................

19. சங்கரை விட மதன் உயரம் கூடியவன். சங்கரை விட ராமு உயரம் குறைந்தவன். எல்லோரிலும் உயரம் கூடியவன் குமார் எனின் இவர்களில் உயரம் குறைந்தவர் யார்?
........................................................................................

20.





சமபக்க முக்கோணிகள் இரண்டு ஒன்றோடு ஒன்று பொருத்தப்பட்டுள்ள இவ் உருவின் சுற்றளவு யாது?
........................................................................

21. ஒரு சாடியில் 750ml நீர் உள்ளது. சாடியை முழுமையாக நிரப்ப இன்னும் 500ml நீர் தேவை எனின் சாடி கொள்ளும் நீரின் அளவு யாது?
........................................................................

22. சமநிறை கொண்ட 5 பொதிகளின் நிறை 4kg 800g ஆகும் எனின் இரண்டு பொதிகளின் நிறை யாது?
........................................................................

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்-பகுதி 2


23. 

நிழற்றப்பட்ட பகுதியை பின்னமாகத் தருக?

............................................................................

24. 500ml மண்ணெண்ணெய் ரூபா 45.00 ஆகும். ஒருவர் 5l மண்ணெண்ணெய் வாங்கி கடைக்காரரிடம் ரூபா 500.00 ஐ கொடுத்தால் அவனுக்குக் கிடைக்கும் மீதிப்பணம் எவ்வளவு?

........................................................................................................

25. 

படத்தில் காட்டப்பட்டுள்ள பூக்களின் மொத்த எண்ணிக்கையை உரோமன் எண்ணில் எழுதுக.

..............................................

26. மைதானத்தைச் சுற்றி 3m சம இடைவெளியில் சிவப்பு, பச்சை, நீலம் எனும் ஒழுங்கில் 30 மின்குமிழ்கள் ஒளிரவிடப்பட்டன எனின் மைதானத்தின் சுற்றளவு யாது?

........................................................................................................

27. ஒரு பாடசாலைக்கு 3240 விசுக்கோத்துக்கள் வழங்கப்பட்டன. ஒரு மாணவனுக்கு 3 விசுக்கோத்துகள் வீதம் எத்தனை மாணவர்களுக்கு வழங்க போதுமானது?

.................................................................... (15 X 2 = 30புள்ளிகள்)

♦ **மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

28. தியானச் செயற்பாட்டின் இரண்டாவது படிநிலை எது?
1. உடலைத் தளர்த்தல் 2. மனதை தளர்த்தல் 3. மனஉறுதி 4. மலர்வு

29. இரும்பு மரம் என அழைக்கப்படுவது?
1. தேக்கு மரம் 2. பலா மரம் 3. நாக மரம் 4. முருங்கை மரம்

30. எண்ணெய் பெறுவதற்கு பயன்படாத வித்து எது?
1. எள்ளு 2. பயறு 3. கச்சான் 4. வேம்பு

31. தோசம் நீக்கிக்கொள்ள "பிரித் ஓதிய நீர்" தெளிக்கும் சம்பிரதாயத்துடன் தொடர்புடைய இனத்தவர்.
1. பௌத்தர் 2. தமிழர் 3. இஸ்லாமியர் 4. கத்தோலிக்கர்

32. "பின்னவல" எவ்விலங்குச் சரணாலயம்?
1. சிங்கம் 2. மான் 3. புலி 4. யானை


33. தச்சு வேலைக்கு பயன்படும் உபகரணம்?



1 2 3 4

34. இலங்கையில் முதன் முதல் தோன்றிய குளம் எது?
1. அபயவாவி 2. மின்னேரியா 3. பதவியா 4. சேனநாயக்க சமுத்திரம்

35. மீன் எப்பாகத்தினால் சுவாசிக்கின்றது?
1. கண் 2. பூ 3. முதுகுச்செட்டை 4. மேற்றோல்

36. 

இவ்வுருவில் காணப்படும் உடுத்தொகுதி
1. கார்த்திகை 2. பெருங்கரடி
3. விருச்சிகம் 4. வேட்டைக்காரன்

37. மத்திய மாகாணத்தில் உள்ள மாவட்டங்களின் எண்ணிக்கை.
1) 4 2) 3 3) 5 4) 2

38. அலங்கார வேலைக்கு பயன்படும் தையல்
1. பெரிய நூலோடல் 2. சிறிய நூலோடல் 3. சோம் 4. கம்பளித்தையல்

39. அசுத்த நீரினை பருகுவதனால் ஏற்படும் நோய்கள் அடங்கிய தொகுதி.
1. டெங்கு, மலேரியா, யானைக்கால்
2. குவாசியக்கோர், என்புருக்கி, வாந்திபேதி
3. இருமல், தடிமன், மலேரியா
4. கொலரா, கழிச்சல், நெருப்புக்காய்ச்சல

40. 

இப்படத்தில் குறிப்பது.
1. இப்பக்கம் மேலே 2. நீர் குடித்தல்
3. உடையக்கூடியது 4. ஈரலிப்பிலிருந்து பாதுகாக்கவும்

41. எரிபொருள் நிரப்பு நிலையத்தைக் குறிப்பது எது?

1. இலங்கை மின்சார சபை CEYLON ELECTRICITY BOARD 2. LANKA 3. Water District #125 4.

42. இலங்கையின் தேசிய மலர் எது?
1. அல்லி 2. காட்டுமல்லிகை 3. நித்திய கல்யாணி 4. நீல அல்லி

43. மின்னேரியாக் குளத்தைக் கட்டியவர்?
1. காசியப்பன் 2. தாதுசேனன் 3. மகாசேனன் 4. மகாபராக்கிரமபாகு


44. நீர்ச்சுழலியின் வேகத்தை அதிகரிக்க செய்ய வேண்டியது?
1. நீரை மெதுவாக ஊற்றுதல் 2. சுழலியை கையால் பிடித்து சுழற்றல்
3. நீரை வேகமாக ஊற்றல் 4. சுழலி அச்சின் நிறையைக் கூட்டுதல்

45. இலங்கையிலுள்ள ஆதிவாசிகளின் நடனம் எது?
1. பரதநாட்டியம் 2. கிரிகொரங்க 3. கண்டிய நடனம் 4. கும்மி

46. பூக்களை சேதமாக்கும் பிராணி எது?
1. வெட்டுக்கிளி 2. செண்பகம் 3. நத்தை 4. அட்டை

47. அரச இலச்சினை பொறிக்கப்பட்டுள்ள ஆவணம் அல்லாதது எது?
1. நாணயம் 2. கடவுச்சீட்டு 3. தேசிய அடையாள அட்டை 4.தனியார் நூல்கள

48. பின்வருவனவற்றில் ஒளிரக்கூடிய மின்சுற்று எது?



(1) (2) (3) (4)

49. வித்துக்கள் மூலம் ஆக்கப்படும் ஆக்கம்
1. ஒரிகாமி 2. அல்பனா 3. கொலாச் 4. ஸ்ரென்சில்

50. இருமல், ஆஸ்துமா போன்ற நோய்களைக் குணப்படுத்தும் தாவரம் எது?
1. பாகற்காய் 2. கண்டங்கத்தரி 3. பூசணி 4. புடோல்

51. தேசிய அடையாள அட்டையை வழங்கும் திணைக்களம் எது?
1. குடிவரவு குடியகல்வு திணைக்களம் 2. பிரதேச செயலகம்
3. மாவட்ட செயலகம் 4. தேசிய ஆட்பதிவுத் திணைக்களம்

52. நீர்க்குடத்தில் மோதிரத்தை இட்டு மணமகனும் மணமகளும் தேடி எடுக்கும் சடங்கு செய்பவர்கள்?
1. தமிழர் 2. சிங்களவர் 3. முஸ்லிம் 4. பறங்கியர்

53. மிளகுடன் சேர்த்து கலப்படம் செய்யப்படும் வித்து?
1. கடுகு 2. குரக்கன் 3. பப்பாசி வித்து 4. பூசணி வித்து

54. இலங்கைக்கு கிழக்கே அமைந்துள்ள நாடுகள்
1. இந்தியா, மாலைதீவு 2. மலேசியா, தாய்லாந்து
3. ஈரான், சிங்கப்பூர் 4. தாய்வான், சீனா

55. பொருளாதார நன்மைக்காக வளர்க்கப்படும் பிராணி எது?
1. சிங்கம் 2. காகம் 3. தேனீ 4. நாய்

56. வயல்களில் தீங்கு விளைவிக்கும் பூச்சிகளை பிடித்துண்ணும் பறவை எது?
1. புறா 2. ஆந்தை 3. காகம் 4. குயில்

57. நிறைவேற்று அதிகாரம் கொண்ட முதலாவது ஜனாதிபதி யார்?
1. D.S சேனநாயக்கா 2. J.R ஜெயவர்த்தனா
3. வணஎஸ்.மஹிந்த 4. வில்லியம் கோபல்லாவா

58. பால்மா தொழிற்சாலை அமைந்துள்ள இடம் எது?
1. பொலநறுவை 2. அம்பேவல 3. வெலிசற 4. பியந்தல

# சசிகலாவின் பக்கத்து அறையில் கொலையாளி சயனைடு மல்லிகா




சொத்துக் குவிப்பு வழக்கில் சிறை சென்றுள்ள சசிகலா பக்கத்து அறையில் கொலையாளி 'சயனைடு' மல்லிகா இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

'சயனைடு மல்லிகா' கர்நாடகாவில் உள்ள பெண் குற்றவாளிகளில் முக்கிய மானவர்.

பெங்களூர் சிறைக்குச் நேற்று முன்தினம் மாலை 5.45 மணிக்கு சென்ற சசிகலாவிடம் கையெழுத்துப் பெறப்பட்டு ஆவணங்கள் சரி பார்க்கப்பட்டன. பிறகு அவர் ஒரு சிறிய அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

10 அடி அகலம், 12 அடி நீளம் கொண்டதாக அந்த அறை இருந்தது.

அந்த அறையில் கழிவறை உள்ளிட்ட எந்த வசதியும் இல்லை. எனவே சசிகலா வேறு அறை கேட்டுள்ளார்.

சசிகலா பக்கத்து அறையில் 'சயனைடு' மல்லிகா என்ற கைதி உள்ளார்.

இந்த சயனைடு மல்லிகா கர்நாடகாவில் உள்ள பெண் குற்றவாளிகளில் முக்கிய மானவர்.

இவர் கொலை வழக்கில் சிக்கி நீண்ட நாட்களாக பெங்களூர் சிறையில் இருந்து வருகிறார்.

கடந்த தடவை சசிகலா ஜெயிலுக்கு சென்றபோதும் சயனைடு மல்லிகா அங்கு தான் இருந்தார்.

அப்போது ஜெயலலிதாவை சந்தித்து பேசுவதற்கு சயனைடு மல்லிகா மிகவும் ஆசைப்பட்டார்.

சிறைத் துறை அதிகாரிகளிடம் இதற்காக அவர் அனுமதி கேட்டார். ஆனால் அவருக்கு அனுமதி வழங்கப்படவில்லை. (இ-12)

# மரண தண்டனைக்கு மாற்று வழி

மரண தண்டனையை, சாகும் வரையான சிறைத் தண்டனையாக மாற்றுவது தொடர்பிலும் அது தொடர்பில் பரிசீலிக்கும் நடவடிக்கைகளிலும், அரசாங்கம் களமிறங்கியுள்ளது.

சிறைச்சாலைகளின் இடநெரிசல் மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்புக்களுக்காக நீதிமன்ற மற்றும் சட்டமுறையான காரணங்கள் தொடர்பில் ஆராய்வதற்கென நியமிக்கப்பட்ட செயலணியின் முதலாவது அறிக்கையிலேயே, இந்தப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையை, நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க அமைச்சரவை அனுமதியளித்துள்ளதாக, ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் ஊடகவியலாளர் சந்திப்பின் போது தெரிவித்தார்.

"சிறைத்தண்டனைக்கு பதிலாக, சமூகம் சார்ந்த தண்டனை முறைகளை பயனுள்ள விதத்தில் பயன்படுத்தல், அபராதங்களைச் செலுத்துவதற்கு முடியாது போகும் பிரஜைகளுக்கு சிறைத்தண்டனை வழங்குவதற்கு பதிலாக, கட்டம் கட்டமாக குறித்த அபராதத்தைச் செலுத்தும் வகையில், சட்டத்தில் உள்ள விதிமுறைகளை முழுமையாகச் செயற்படுத்த, அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது. குற்றப்பத்திரிகையின்றி சிறைபிடிக்கப்பட்டுள்ளவர்களை பிணைப் பத்திரங்களின் அடிப்படையில் விடுவித்தல் மற்றும் சட்ட விதிகளின் படி, நீதவான் நீதிபதிகள் மாதத்துக்கு ஒருமுறை சிறைச்சாலைகளை பார்வையிடுதல், பிணையில் விடுவிப்பதற்கு முடியுமான குற்றங்கள் தொடர்பில் பொலிஸ் பிணை பெற்றுக் கொடுக்கும் முறையினை பின்பற்றல், புதிய சிறைச்சாலைகளை நிர்மாணித்தல் மற்றும் மறுசீரமைப்பு செய்தல், சிறைச்சாலை ஊழியர்களுக்கு பாதுகாப்பான மற்றும் உரிய சூழலை செய்து கொடுத்தல் ஆகிய சிபாரிசுகள், செயலணியின் முதலாவது அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ளன.

குறித்த அறிக்கையினை நாடாளுமன்றத்தில் முன்வைப்பது தொடர்பில் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் ஆகியோர் இணைந்து, முன்வைத்த யோசனைக்கே அமைச்சரவையின் அனுமதி கிடைத்துள்ளது" என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.(இ-7)

# விமான பயணிகளின் பாதுகாப்புக்கு நாய்களை ஈடுபடுத்த நடவடிக்கை

கட்டுநாயக்க விமான நிலையத்தின் பாதுகாப்பைப் பலப்படுத்தும் நோக்கில் நாய்களைச் சேவையில் ஈடுபடுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் இதற்காக வேண்டி 20 நாய்களை கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானப் போக்குவரத்துத்துறை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்திற்கே இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (இ-7)

# விபத்தில் வயோதிபர் படுகாயம்

வான் - மோட்டார் சைக்கிள் மோதிய விபத்தில் வயோதிபர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்று முன் தினம் புதன்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் பருத்தித் துறை வீதியில் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

யாழ்ப்பாணத்திலிருந்து அச்சுவேலிக்கு சென்றுகொண்டிருந்த வயோதிபரின் மோட்டார் சைக்கிளை பின்னால் வந்த வெளிநாட்டு சுற்றுலாப் பயணியின் வான் மோதியதில் வயோதிபர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் அச்சுவேலியைச் சேர்ந்த சின்னத்தம்பி இரத்தினம் (வயது-71) என்னும் வயோதிபரே படுகாயமடைந்தவராவார். இச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் வாகன சாரதியை கைது செய்து மேலதிக விசாரணை முன்னெடுத்து வருகின்றனர். (இ-30)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 989

Search for people, places and things — Nagendram Home

**அஜந்**




**கிரு**



பதில் கிடைக்காதென்பதை நன்கு அறிந்த பின்னும் கேள்விகளைக் கேட்டு வருந்துவதை விடவா முட்டாள்தனம் இருந்துவிடப் போகிறது.

**நிலு**



கழக வெற்றியை ஜெயாவின் பாதத்தில் சமர்ப்பிப்பேன்- சசி கம்பிளைண்டே காலைக் காணோம்னுதான்.

**விமலேஸ்**

அவ, அவனுங்க கையில ரோஸ்சோட அலையிறானுங்க...தெருப்பக்கம் போகவே பயமாயிருக்கு.




**பவி**

என்னைப் பார்த்து ஏன்டா அந்தக் கேள்வி கேட்டாய்? அப்படி என்ன கேட்டான்?



என்ன கேட்டானா...பெப்ரவரி 14 காதலர் தினம்மன கள்ளக் காதலர் தினம் என்னைக்குன்னு கேட்கிறான்ம்பா.

**வாணன்**




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# சிறைச்சாலைக்குள் சசிகலாவுக்கு என்னென்ன வசதிகள் கிடைக்கும்?



சொத்துக்குவிப்பு மேல்முறையீட்டு வழக்கில் 4 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள அ.தி.மு.க. பொதுச் செயலாளர் சசிகலா பெங்களூருவில் உள்ள பரப்பன அக்ரஹாரா மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

அங்கு சசிகலாவுக்கு என்னென்ன வசதிகள் வழங்கப்படும் என சிறைத் துறை நிர்வாகத்தினர் தகவல் வெளியிட்டுள்ளனர். "கடந்த முறை தமிழக முதல்வராக இருந்த ஜெயலலிதாவுடன் சசிகலா, இளவரசி ஆகியோர் சிறையில் அடைக்கப்பட்டு இருந்தனர். ஜெயலலிதா இசட் பிளஸ் பாதுகாப்பில் இருந்த வி.வி.ஐ.பி. என்பதால் வெளியில் இருந்து உணவு, மருந்துகள், உடை, ஏ.சி.வசதி, உதவியாளர்கள் உள்ளிட்ட பல வசதிகள் அனுமதிக்கப்பட்டன. ஆனால சசிகலா அ.தி.மு.க. பொதுச் செயலாளர் மட்டுமே. முதல்வர் இல்லை என்பதால் அவருக்கு அத்தகைய வசதிகள் வழங்கப்படாது.

சசிகலா தரப்பில் தங்களுக்கு நீரிழிவு உள்ளிட்ட நோய்கள் இருப்பதால் சிறையில் தனியாக ஏசி வசதியுடன் அறை, தொலைக்காட்சி, செய்தித்தாள்கள், மேற்கத்திய கழிவறை வசதிகள், வெந்நீர், போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீர், மருத்துவ வசதி, வெளியில் இருந்து உணவு, உடை, மருந்துகள் உள்ளிட்டவை கொண்டுவர அனுமதி கேட்டனர். இதில் பல வசதிகளுக்கு நீதிபதி அனுமதி மறுத்துவிட்டார்.

வருமான வரி செலுத்துபவர் என்பதால் ஏ- கிளாஸ் எனப்படும் முதல் வகை சிறை வசதி வழங்கப்படுகிறது. அதன்படி மின்விசிறியுடன் கூடிய அறை ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் தொலைக்காட்சி, மேற்கத்திய கழிவறை வசதி, வெந்நீர், போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீர் உள்ளிட்ட வசதிகள் செய்து தரப்படும்.

மருந்து, உணவு மற்றும் உடைகளும் சிறைத்துறையே வழங்கும். சசிகலா அறையிலே இளவரசியும் தங்க அனுமதிக்கப்பட்டுள்ளார். 3 நீல நிற சேலை, 1 தட்டு, 1 செம்பு, 1 நாற்காலி, 1 கட்டில் மெத்தை, தலையணை, படுக்கை விரிப்பு, போர்வை, பூஜை செய்ய சாமி படம் உள்ளிட்டவை வழங்கப்படும்.

சிறைத் துறையின் நேர விதிமுறைப்படி, காலை 6.30 மணிக்கு சிற்றுண்டி வழங்கப்படும். முற்பகல் 11.30 மணிக்கு மதிய உணவும் மாலை 4 மணிக்கு டீ அல்லது கோப்பியும், மாலை 6.30 மணிக்கு இரவு சாப்பாடும் வழங்கப்படும். தாமதமாக வருவோருக்கு உணவு வழங்கப்படாது. தேவையெனில் உணவை வாங்கி வைத்துக் கொண்டு தேவைப்படும் நேரத்தில் உண்ணலாம்.

பெங்களூர் சிறையை பொறுத்தவரை பெண்களுக்கு மூன்று வகையான வேலைகள் வழங்கப்படுகின்றன. எனவே சசிகலா, இளவரசிக்கு ஊதுவர்த்தி உருட்டுவது, மெழுகுவர்த்தி செய்வது, தோட்ட மற்றும் சமையல் பணி செய்வது போன்றபணிகள்வழங்கப்படும்.

இருவரும் வயதானவர்கள் என்பதால் மெழுகுவர்த்தி செய்யும் பணி ஒதுக்கப்படலாம். இதற்காக நாளொன்றுக்கு கூலியாக ரூ. 50 வழங்கப்படும். இது பணமாக அல்லாமல் கூப்பனாக வழங்கப்படும். அதனை வைத்து சசிகலா தனக்கு தேவையான பற்தூரிகை, சவர்க்காரம், வெதுப்பக உணவுப் பொருட்களை வாங்கிக் கொள்ளலாம். சிறை தண்டனை காலம் முடிவடைந்த பிறகு செய்த வேலைக்கு தக்க கூலி பணமாக கொடுக்கப்படும்" என்றனர்.


4 ஆண்டு தண்டனை பெற்ற சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகிய மூவரும் சுமார் 6 மாதம் வரையே இதுவரை தண்டனை பெற்றுள்ளனர். எனவே மீதமுள்ள மூன்றரை ஆண்டுகள் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டியுள்ளது.

உச்சநீதிமன்ற தீர்ப்பை மறு ஆய்வு மற்றும் சீராய்வு மனுதாக்கல் செய்தாலும் சிறையில் இருந்து வெளியில் வருவது கடினமான ஒன்று என தெரிகிறது.

எனவே ஏதாவது ஒரு முக்கிய பணிக்காக மட்டும் சில நாட்கள் பரோலில் வெளியில் வர முடியும் என்று சட்ட நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். (இ-12)

## ஊழல்; கொலை-சிறை





(சென்னை)

சொத்துக்குவிப்பு வழக்கில் சிறப்பு நீதிமன்ற நீதிபதி குன்ஹாவின் தீர்ப்பை உச்ச நீதிமன்றம் உறுதி செய்ததை அடுத்து, தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் தோழி சசிகலா, அவரது உறவினர்களான சுதாகரன், இளவரசி ஆகிய 3 பேரும் நேற்று முன்தினம் பெங்களூர் பரப்பன அக்ரஹாரா சிறையில் அடைக்கப்பட்டனர்.

இவ்வழக்கில் ஜெயலலிதாவும் குற்றவாளியே என நீதிபதிகள் தங்களது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளனர். அதே சமயம் ஊழல் குற்றங்களுக்காக அரசியல்வாதிகள் நீதிமன்றங்கள் மூலம் தண்டிக்கப்படுவது இது முதல்முறையல்ல.

ஏற்கனவே பல்வேறு அரசியல்வாதிகளும் ஊழல் மற்றும் கொலைக் குற்றங்களுக்காக தண்டிக்கப்பட்டுள்ளனர். அவர்களது பட்டியல்:

**ஜெகன்நாத் மிஸ்ரா (காங்கிரஸ்)**

பீஹாரின் முன்னாள் முதல்வர். மாட்டுத்தீவன ஊழல வழக்கில் 2013இல் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டார்.

**லாலு பிரசாத் யாதவ் (ஆர்ஜேடி)**

பீஹாரின் முன்னாள் முதல்வர். ராஷ்ட்ரிய ஜனதா தளத்தின் தலைவர். இவரும் மாட்டுத் தீவன ஊழல் வழக்கில் சிக்கி சிறையில் அடைக்கப்பட்டு, பிணையில் விடுவிக்கப்பட்டார்.

**சிபு சோரன் (ஜேஎம்எம்)**

ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா கட்சியின் தலைவர். கொலை வழக்கில் குற்றவாளி என அறிவிக்கப்பட்ட முதல் மத்திய அமைச்சர். 2007இல் இவ்வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டார்.


**சுக்ராம் (காங்கிரஸ்)**

இமாச்சலப் பிரதேசத்தைச் சேர்ந்தவர். முன்னாள் மத்திய அமைச்சர். வருமானத்துக்கு அதிகமாக சொத்துக் குவித்த வழக்கில் குற்றவாளி என நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்டவர்.

**முகமது சஹாபுதீன் (ஆர்ஜேடி)**

பீஹாரின் சிவான் தொகுதி முன்னாள் எம்.பி. இவர் மீது பல்வேறு கிரிமினல் வழக்குகள் இன்றும் நிலுவையில் உள்ளன. தற்போது கடத்தல் உள்ளிட்ட வழக்குகளில் சிறைத்தண்டனை அனுபவித்து வருகிறார். (இ-12)

## வீட்டு வரி செலுத்தாத சசிகலாவுக்கு நோட்டீஸ்




அ.தி.மு.க. பொதுச்செயலாளர் வி.கே.சசிகலாவுக்கு வீட்டு வரி நிலுவையை செலுத்துமாறு ஐதராபாத் மாநகராட்சி நேற்று முன்தினம் நோட்டீஸ் அனுப்பியது.


தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா கடந்த 1990 ஆம் ஆண்டில் ஐதராபாத்தின் புறநகர் பகுதியான ஜிடி மெட்லு என்ற பகுதியில் திராட்சை தோட்டத்தை வாங்கினார். இதற்கு ஜேஜே கார்டன்ஸ் என பெயரிடப்பட்டது.

அவ்வப்பொழுது ஓய்வெடுப்பதற்காக ஜெயலலிதா அங்கு செல்வது வழக்கம். இதுபோல, செகந்திராபாத் மாரேட்பல்லி என்ற இடத்தில் ராதா காலனி பகுதியிலுள்ள ஒரு பங்களாவை (கதவு எண் 16) சசிகலா பெயரில் ஜெயலலிதா வாங்கி உள்ளார்.

கடந்த 4 ஆண்டுகளாக இந்த வீடு பூட்டியே காணப்படுகிறது. அதேநேரம் வீட்டு வரி ரூ.35.424 செலுத்தப்படாமல் உள்ளது.

இது தொடர்பாக, ஐதராபாத் மாநகராட்சி சார்பில் சசிகலாவுக்கு நேற்று முன்தினம் நோட்டீஸ் அனுப்பப்பட்டது. வரி நிலுவையை உடனடியாக செலுத்துமாறு அந்த நோட்டீஸில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-12)

## நீதிபதி குன்ஹா, சட்டத்தரணி ஆச்சார்யா வீடுகளுக்குப் பலத்த பொலிஸ் பாதுகாப்பு



(பெங்களூர்)

பெங்களூரிலுள்ள நீதிபதி மைக்கேல் டி.குன்ஹா, சொத்துக் குவிப்பு வழக்கில் கர்நாடக அரசு தரப்பில் வாதாடிய சட்டத்தரணி. ஆச்சார்யா ஆகியோரது வீடுகளுக்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

சொத்துக் குவிப்பு வழக்கில் சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோருக்கு 4 ஆண்டு சிறைத் தண்டனையும், தலா ரூ.10 கோடி அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

பெங்களூர் சிறப்பு நீதிமன்ற நீதிபதி மைக்கேல் டி.குன்ஹா வழங்கிய தீர்ப்பை உறுதி செய்து உச்ச நீதிமன்ற நீதிபதிகள் பினாகி சந்திரகோஷ், அமித்வராய் ஆகியோர் தீர்ப்பு வழங்கினார்.

இதைத் தொடர்ந்து சசிகலா,இளவரசி, சுதாகரன் ஆகியோர் பெங்களூரு பரப்பன அக்ரஹாரா சிறையில் நேற்று முன்தினம் மாலை அடைக்கப்பட்டனர்.

கடந்த 2014ஆம் ஆண்டு மறைந்த முதல் அமைச்சர் ஜெயலலிதா, சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோருக்கு 4 ஆண்டு சிறைத் தண்டனை விதித்து சிறப்பு நீதிமன்ற நீதிபதி மைக்கேல் டி.குன்ஹா தீர்ப்பு வழங்கிய போதே பெங்களூரில் வன்முறை வெடித்தது.

பேருந்துகளின் கண்ணாடிகள் உடைக்கப்பட்டன. நீதிபதியை கண்டித்தும் கோஷங்கள் எழுப்பப்பட்டன.

இதனால் மீண்டும் அது போல சம்பவங்கள் நடந்து விடாமல் இருக்க பெங்களூரில் உள்ள நீதிபதி மைக்கேல் டி.குன்ஹா மற்றும் சொத்துக் குவிப்பு வழக்கில் கர்நாடக அரசு தரப்பில் வாதாடிய சட்டத்தரணி ஆச்சார்யா ஆகியோரது வீடுகளுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. இந்த 2 வீடுகளிலும் கர்நாடக மாநில பொலிஸார் அதிக அளவில் குவிக்கப்பட்டுள்ளனர். (இ-12)

# நியூஸிலாந்தில் காட்டு தீயால் அவசரகால நிலை பிரகடனம்



நியூஸிலாந்தின் கிறிஸ்ட் சேர்ச் நகரின் அருகே போர்ட் ஹில்ஸ் பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை ஏற்பட்ட பாரிய காட்டுத்தீ காரணமாக குறித்த பகுதி மக்கள் அனைவரும் அவசரமாக வெளியேற்றப்பட்டுள்ளனர்.

அத்துடன், பிற்பகல் முதல அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. உள்ளூர் ஊடக தகவல்களின் பிரகாரம் 200 முதல் 300 வரையான மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தீவிரமாக பரவிவரும் காட்டுத்தீயை அணைகக்கும் முயற்சியாக நீர்க் குண்டு வீச்சு விமானங்கள் வரவழைக்கப்பட்டுள்ளன.

மேலதிகமாக தீயணைப்பு வீரர்களும் வரவழைக்கப்பட்டுள்ளனர். (இ-12)

# ஐ.நா.அமைதிப்படையின் புதிய தலைவராக ஜீன்

(வோஷிங்டன்)

ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிப்படை அமைபபுக்கு புதிய தலைவராக பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த் ஜீன்-பியர் லாக்ரோயிசை ஐ.நா. பொதுச் செயலர் நியமித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் சபையில் உள்ள அமைதிப்படை அமைப்பானது, அமைதியற்ற சூழ்நிலை நிலவும் நாடுகளில் அமைதி நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. இதற்காக பல்வேறு நாடுகளில் ஐ.நா. அமைதிப்படை முகாமிட்டுள்ளது.

ஐ.நா பொதுச் செயலருக்கு அடுத்தபடியாக, ஐ.நா. அமைதிப்படைத் தலைவர் பதவி மற்றும் ஐ.நா. அரசியல் விவகாரத் தலைவர் பதவி முக்கியத்துவம் வாய்ந்தது.

இந்நிலையில், பிரான்ஸ் நாட்டு வெளியுறவுத் துறை அமைச்சகத்தில் ஐ.நா. விவகாரங்களுக்கான இயக்குநராகப் பணியாற்றி வரும் ஜீன்-பியர் லாக்ரோயிஸ், ஐ.நா. அமைதிப் படைத் தலைவராக நியமிக்கப் பட்டுள்ளார். கடந்த 6 ஆண்டுகளாக அந்தப் பொறுப்பை வகித்து வரும் ஹெர்வ் லாட்சூஸ், வரும் மார்ச் மாதத்துடன் ஓய்வு பெறவிருப்பதையடுத்து, அந்தப் பதவிக்கு ஜீன்-பியர்லாக்ரோயிஸ், ஐ.நா.பொதுச் செயலாளரால் நியமிக்கப்பட்டுள்ளார். (இ-12)

# ஐ.நா.பாதுகாப்பு சபையின் கண்டன அறிக்கையை நிராகரித்தது வடகொரியா

வட கொரியாவின் அண்மைய ஏவுகணைச்சோதனை குறித்த ஐ.நா. பொதுப் பாதுகாப்புச் சபையின் கண்டன அறிக்கையை வட கொரிய வெளியுறவு அமைச்சு நிராகரித்துள்ளது.

வட கொரிய வெளியுறவு அமைச்சின் செய்தித் தொடர்பாளரை மேற்கோள்காட்டி நேற்று முன்தினம் புதன் கிழமை வட கொரிய அரச தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது.

எமது அணு ஆயுத சோதனை மற்றும் ஏவுகணை சோதனைகளுக்கு தடை என்ற ஐ.நா. பாதுகாப்பு சபையின் தீர்மானத்தினை நாம் எப்போதும் ஏற்றுக் கொள்ளமாட்டோம்' என வட கொரிய வெளியுறவு அமைச்சின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்ததாக குறித்த ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

உலக நாடுகளின் எதிர்ப்புக்களையும் மீறி தொடர்ச்சியாக ஏவுகணைச்சோதனை நடத்திவரும் வட கொரியா இறுதியாக கடந்த ஞாயிற்றுக் கிழமை ஏவுகணை சோதனை நடத்தியது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-12)

# ஈராக் தலைநகரை உலுக்கிய சக்திவாய்ந்த குண்டுவெடிப்பு 15 பேர் பலி! 50 பேர் படுகாயம்



ஈராக் தலைநகர் பக்தாத்தின் வடக்கு பகுதியில் ஷியா மக்கள் செறிந்து வாழும் புறநகர் பகுதியில் இடம்பெற்ற சக்திவாய்ந்த குண்டுவெடிப்பில் 15 பேர் உயிரிழந்ததுடன், சுமார் 50இற்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர்.

தற்கொலைதாரியொருவர் வெடிபொருட்கள் நிரப்பப்பட்ட டிரக் வண்டியொன்றை வெடிக்க செய்து இந்த நாசகார செயலை முன்னெடுத்திருப்பதாக ஈராக் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வாகன திருத்துமிடங்கள் மற்றும் பாவனைக்கு உட்படுத்தப்பட்ட கார் விற்பனை நிலையங்கள்என்பன அமைந்துள்ள சனநெரிசல் மிகுந்த பகுதியிலேயே இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் புதன் கிழமை மேற்கொள்ளப்பட்ட குறித்த தாக்குதலுக்கு இது வரை எந்தவொரு அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. எனினும், இதற்கு முன்னர் இடம்பெற்ற பெரும்பாலான தற்கொலை குண்டு தாக்குதல்களுக்கு ஐ.எஸ். தீவிரவாதிகள் பொறுப்பேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இஸ்ரேல் -பாலஸ்தீன மோதலுக்கு தீர்வாக அமைதி ஒப்பந்தம் வரும்

## ட்ரம்ப் உறுதி



(இஸ்ரேல்)

இஸ்ரேல்- பாலஸ்தீன மோதலுக்கு தீர்வு காணும் வகையில் புதிய சமாதான ஒப்பந்தமொன்றை ஏற்படுத்தவுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் பிரதமர் பென்ஜமின் நெதன் யாஹூவுடனான செய்தியாளர் மாநாடொன்றில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து தெரிவித்த அவர்,

மத்திய கிழக்கில் சமாதான நடைமுறைகளை முன்னெடுக்க வேண்டுமாயின் இஸ்ரேலியர்களுக்கும் பாலஸ்தீனர்களுக்கும் இடையே சமரசம் ஏற்பட வேண்டும்.

அமெரிக்காவும் இஸ்ரேலும் மனித உயிரின் மதிப்பை போற்றும் இரு நாடுகளாகும்.

எனது பார்வையில் இஸ்ரேல் குறித்த ஐ.நா. செயற்பாடுகள் முற்றிலும் நியாயமற்றதாகும்.

இஸ்ரேல்- பாலஸ்தீனம் இடையே அமெரிக்கா சமாதானத்தை ஊக்குவிக்கிறது.


அதன்படி சிறந்த அமைதி ஒப்பந்தமொன்றையும் ஏற்படுத்த நாம் எதிர்பார்த்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-12)


# தமிழக சிறைக்கு மாறத் திட்டம்

(பெங்களூர்)

பெங்களூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ள குற்றவாளியான சசிகலா சார்பில், உச்ச நீதிமன்றத்தில் மறுசீராய்வு மனு தாக்கல் செய்யப்படவுள்ளதாக கூறப்படுகிறது. சொத்துக் குவிப்பு வழக்கில் சசிகலா உட்பட மூன்று பேருக்கும் 4 ஆண்டுகள் சிறைத் தண்டனையை உச்சநீதிமன்றம் உறுதி செய்தது. இதனையடுத்து மூவரும் பெங்களூர் சிறையில் அடைக்கப்பட்டனர். இந்நிலையில் தீர்ப்பை மறுபரிசீலனை செய்யக் கோரி சசி தரப்பில் உச்சநீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்வது குறித்து அ.தி.மு.க. சட்டத்தரணிகள் ஆலோசனையில் ஈடுபட்டுள்ளனர். இது தொடர்பாக உச்சநீதிமன்றத்தில் முக்கிய வழக்குகளில் ஆஜராகும் சட்டத்தரணிகளிடம் ஆலோசனையை பெறவும் முடிவு செய்துள்ளனர்.

அதனால் இன்னும் ஒரு சில தினங்களில் சீராய்வு மனு தாக்கல் செய்யப்படலாம் என அ.தி.மு.க. வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. தீர்ப்பில் உள்ள எழுத்துப் பிழை, கணக்கு பிழைகளை சுட்டிக்காட்டி மனு ஒன்றை தாக்கல் செய்யவும் அ.தி.மு.க. சட்டத்தரணிகள் திட்டமிட்டுள்ளனர். இதே போல் தம்மை தமிழக சிறைக்கு மாற்றக் கோரி சசி தரப்பில், பெங்களூர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது. (இ-12)







# சிறுவர் அரங்கம்

## ஒரு அடியில் இருநூறு பேர்

நீ வலிமையானவன் என்றால் நிரூபித்துக் காட்டு, என்றது பூதம்.

அப்படியா? என்ற அவன் தன் சட்டைப் பையிலிருந்த கூழாங்கல் உருண்டையை எடுத்தான். அந்த உருண்டையை வானத்தில் தூக்கிப் போட்டுப் போட்டுப் பிடித்தான்.

இது என்ன சொல்பார்ப்போம், என்று கேட்டான், அவன்.

உருண்டையானகூழாங்கல், என்றது பூதம்.

என் வலிமையைப் பார், என்ற அவன் அந்த வெண்ணெய் உருண்டையைக்கைக்குள்வைத்து அழுத்தினான். அது பொலபொலவென்று தூள் தூளாகிக் கீழே விழுந்தது.

உண்மையை உணராத அந்த முட்டாள் பூதம் அவனை மிகுந்த வலிமையானவன்என்றுநினைத்தது. கீழே வா. உனக்கு இன்னும் ஒரு சோதனை, என்றது அது.

எப்படியும் பூதத்தை ஏமாற்றி விடலாம் என்ற எண்ணத்தில் கீழே குதித்தான் அவன்.

தரையில் கிடந்த சிறு கல்லை எடுத்தது அது. என் வலிமையைப் பார், என்று சொல்லி அந்தக் கல்லை உயரே வானத்தை நோக்கி வீசியது.

அரை மணி நேரம் கழித்து அந்தக்கல்கீழே விழுந்தது.

எங்கே இதைப் போலச் செய்து உன் வலிமையைக் காட்டு, என்றது பூதம்.

நான் கல்லை மேலே வீசினால் கீழே விழவே விழாது. வான் உலகத்தைக் கிழித்துக் கொண்டு சென்று விடும். என்று பெருமையுடன் சொன்ன அவன் தன் பைக்குள் இருந்த சிட்டுக் குருவியைஎடுத்தான் அதைமேலே தூக்கி எறிந்தான். அப்படியே பறந்து சென்றது அது.

பூதம் நீண்ட நேரம் காத்திருந்தது. மேலே எறிந்த கல் கீழே விழவே இல்லையே. இவனிடம் கவனமாக இருக்க வேணடும். இல்லையேல் என்னைக் கொன்று விடுவான், என்று நினைத்தது அது.

நீ என் விருந்தினர். என் மாளிகைக்கு வா. விருந்து சாப்பிட்டுவிட்டுச் செல்லலாம், என்று அன்புடன் அழைத்தது அது.

இருவரும் பூதத்தின் மாளிகையை அடைந்தனர். அந்த மாளிகைகளைச்சுற்றிலும தோட்டம இருந்தது.



சமையல் செய்ய விறகு இல்லை. காட்டிற்குச் சென்று சிறிது விறகு கொண்டு வா, என்று அவனைப் பார்த்துச் சொன்னது பூதம்.

உடனே அவன், எதற்காக விறகு? நான் அந்தப் பெரிய மரத்தை அப்படியே இழுத்து வருகிறேன், என்றான்.

அந்தப் பெரிய மரத்தைப் பார்த்தது பூதம். அது கீழே விழுந்தால் தன் தோட்டம் பாழாகி விடும். மாளிகைச் சுவரும் இடிந்து விடும் என்று நினைத்தது அது.

பயந்துபோனஅதுநானே, சென்றுவிறகுகொண்டுவருகிறேன், என்று புறப்பட்டது.

சிறிது நேரத்தில் விறகுடன் அங்கே வந்தது அது.

இன்னும் எப்படி எல்லாம் அதை ஏமாற்றலாம் என்று சிந்தித்துக் கொண்டிருந்தான் அவன்.

**தொடரும்...**




## இன்றைய நாளில் முன்னைய பதிவுகள்

- 1753 - சுவீடன் கிரெகோரியின் நாட்காட்டிக்கு மாறியது. பெப்ரவரி 17ம் நாளின் பின்னர் மார்ச் 1ற்கு மாறியது.
- 1788 - லெப்டினண்ட் போல் (டீயடட) என்பவன் சிட்னியில் இருந்து நோர்போல்க் தீவுக்கு கைதிகளைக் குடியேற்றச் சென்ற போது மனிதர்களற்ற லோர்ட் ஹோவ் தீவைக் கண்டுபிடித்தான்.
- 1854 - பிரித்தானியா ஒரேஞ்சு சுயாதீன நாட்டை விடுதலை பெற்ற நாடாக அங்கீகரித்தது.
- 1864 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: எச்.எல். ஹன்லி என்ற நீர்மூழ்கிக் கப்பல் யூஎஸ்எஸ் ஹவுசட்டோனிக் என்ற போர்க்கப்பலைத் தாக்கி மூழ்கடித்தது.
- 1865 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: தென் கரோலினாவின் கொலம்பியா நகரம் அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்பின் படைகள் வெளியேற்றத்தின் போது தீயிடப்பட்டது.
- 1867 - சூயஸ் கால்வாய் ஊடாக முதலாவது கப்பல் சென்றது.
- 1881 - இலங்கையில் இரண்டாவது மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. நாட்டின் மொத்தத் தொகை 2,759,738, வட மாகாணத்தில் 302, 500, யாழ்ப்பாணத்தில் 40, 057 ஆகக் கணக்கெடுகப்பட்டது.
- 1890 - பிரித்தானிய நீராவிக்கப்பல் ஒன்று சீனக் கடலில் மூழ்கியதில் 400 பெர் கொல்லப்பட்டனர்.
- 1933 - நியூஸ்வீக் முதலாவது இதழ் வெளிவந்தது.
- 1936 - சிறுவர்களுக்கான அதிமேதாவி மாயாவி முதற்தடவையாக வரைகதைகளில் தோன்றினார்.
- 1947 - வொயிஸ் ஒஃப் அமெரிக்கா தனது ஒலிபரப்புச் சேவையை சோவியத் ஒன்றியத்துக்கு விஸ்தரித்தது.
- 1957 - மிசூரியில் வயோதிபர் இல்லம் தீக்கிரையாகியதில் 72 பேர் கொல்லப்பட்டனர்.
- 1962 - மேற்கு ஜெர்மனியின் ஹம்பூர்க் நகரில் இடம்பெற்ர புயலில் 300 பேருக்கு எல் கொல்லப்பட்டனர்.
- 1979 - மக்கள் சீனக் குடியரசுக்கும் வியட்நாமுக்கும் இடையில் போர் ஆரம்பமாகியது.
- 1990 - இலங்கையின் ஊடகவியலாளர், மனித உரிமை செயற்பாட்டாளர் ரிச்சர்ட் டி சொய்சா கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டார்.
- 1996 - பென்சில்வேனியாவில் இடம்பெற்ற சதுரங்க ஆட்டத்தில் காரி காஸ்பரொவ் ஐபிஎம்மின் டீப் புளூ கணினியை வென்றார்.
- 2000 - விண்டோஸ் 2000 வெளியிடப்பட்டது.
- 2006 - பிலிப்பீன்சில் சென் பேர்னார்ட் நகரில் இடம்பெற்ற மண்சரிவில் சிக்கி 1,000 பேருக்கு அதிகமானோர் உயிருடன் புதையுண்டனர்.

பிறப்புகள்ஜதொகுஸ

- 1888 - ஓட்டோ ஸ்டேர்ன், நோபல் பரிசு பெற்ற ஜேர்மானிய இயற்பியலாளர் (இ. 1969)
- 1927 - யுவான் அல்மெய்டா, கியூப புரட்சியாளர் (இ. 2009)
- 1984 - சதா, தென்னிந்தியத் திரைப்பட நடிகை

இறப்புகள்ஜதொகுஸ

- 1956 - எஸ். வையாபுரிப்பிள்ளை, தமிழறிஞர், பதிப்பாளர் (பி. 1891)
- 1986 - ஜே. கிருஷ்ணமூர்த்தி, தத்துவவியலாளர் (பி. 1895)
- 2014 - ஆர். கே. ஸ்ரீகண்டன், கருநாடக இசைப் பாடகர் (பி. 1920)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 150 | 70 | 120 | 120 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 100 | 100 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 180 | 180 | 180 | 200 | 200 | 250 | 180 |
| தக்காளி | 40 | 100 | 70 | 50 | 60 | 80 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 100 | 60 | 60 | 70 | 60 | 60 |
| கோவா | 20 | - | 15 | 30 | 40 | 40 | 40 |
| கரட் | 40 | 60 | 80 | 60 | 60 | 60 | 40 |
| பூசணி | 50 | 40 | 50 | 50 | 60 | 60 | 60 |
| புடோல் | 60 | 60 | 80 | 80 | 80 | 60 | 160 |
| வாழைக்காய் | 50 | 60 | 50 | 50 | 70 | 60 | 70 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 120 | 120 | 100 | 120 | 80 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 200 | 200 | 160 | 200 | 200 | 300 | 160 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 200 | 120 | 160 | 120 | 180 |
| கருணைக் கிழங்கு | 50 | 100 | 80 | 50 | 60 | 80 | 60 |
| பயற்றங்காய் | 120 | 100 | 70 | 120 | 200 | 120 | 160 |
| லீக்ஸ் | 50 | 100 | 160 | 80 | 60 | 80 | 60 |
| பீற்றூட் | 50 | 100 | 60 | 50 | 60 | 80 | 80 |
| கறிமிளகாய் | 180 | 200 | 120 | 260 | 160 | 200 | 140 |
| முருங்கைக்காய் | 600 | 800 | 500 | 600 | 600 | 800 | 600 |
| போஞ்சி | 140 | 160 | 80 | 120 | 120 | 140 | 100 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 60 | 100 | - | 80 | 100 |
| கீரை - 1பிடி | 40 | 20 | 80 | 40 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 80 | 80 | 120 | 120 | 160 | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 30 | 60 | 60 | 50-60 | 50 |
| இராசவள்ளி | 200 | 300 | 200 | 160 | 160 | 200 | 140 |
| வெங்காயப்பூ | 60 | 40 | 60 | 50 | 60 | 50 | 50 |
| முள்ளங்கி | 80 | 60 | 60 | 60 | 50 | 80 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 30 | 30 | 40 | 20 | 30 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 20 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 60 | 60 | 60 | 60 | 60 | 70 |

நன்மையைச் செய்யுங்கள். யாருக்கு என்று மட்டும் கேட்காதீர்கள்.

– ஓர் அறிஞர்

வலம்புரி
T.P: 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழ் மக்கள் பேரவைக்கு கடுமையான பொறுப்புக்கள் உண்டு

அரசியலில் இருந்தால்தான் மக்களுக்குப் பணி செய்ய முடியும் என்பது ஒரு நிபந்தனையல்ல.

அரசியலில் ஈடுபடாமல் – தேர்தல் கலாசாரத்துக்குள் விழுந்து எழும்பாமல் மக்கள் பணி செய்தவர்கள் ஏராளம். இவர்களை இன்றும் உலகம் புனிதர்களாகப் போற்றித் துதிக்கின்றது.

இந்திய தேசத்துக்கு விடுதலை பெற்றுக் கொடுத்த அண்ணல் காந்தி அடிகள் ஆட்சி அதிகாரத்தை வெறுத்தார். தேர்தல் கலாசாரத்தை தவிர்த்தார். இதனால் இன்றுவரை அவரைப் பாரத பூமி தொழுது போற்றுகிறது.

இதுதவிர பகுத்தறிவின் தந்தை ஈ.வே.ரா. பெரியார் தேர்தல் களத்தில் நின்றவர் அல்லர். மாறாக மக்களைத் தேடிச் சென்று அவர்கள் மத்தியில் பகுத்தறிவை விதைத்தார்.

இதனால் தமிழகம் அறியாமை எனும் இருளில் இருந்து விடுதலை பெற்றது.

இவ்வாறு அரசியல் என்ற களத்தை புறந்தள்ளி மக்கள் பணி செய்தவர்கள் பலரைக் குறிப்பிட முடியும். இத்தகையவர்கள் அரசியல் சார்ந்தவர்கள் என்று மக்கள் நினைத்ததும் உண்டு.

இவ்வாறான நினைப்புக்கு காரணம் அவர்களைச் சுற்றி அரசியல்வாதிகளும் கட்சிகளும் வலம் வந்தமை என்று கூறிக் கொண்டாலும் இதனையும் கடந்து அரசியலைத் தீர்மானிக்கின்ற மாபெரும் சக்திகளாக இவர்கள் இருந்தமை என்று கூறுவதே உண்மையானது.

அதாவது தூய்மையான மக்கள் பணி செய்த இவர்கள் யாரை அடையாளம் காட்டுகின்றனரோ அவர்களை ஆட்சிப் பீடத்தில் அமர்த்துவதற்கு மக்கள் தயாராக இருந்தனர்.

உதாரணத்துக்கு ஒன்றைக் கூறலாம். ஈ.வே.ரா. பெரியார் யாரை தேர்தலில் வெற்றி பெறுக என்று ஆசிர்வதிக்கின்றாரோ அவரை தேர்தலில் வெற்றி பெறச் செய்யும் கடமையை தமிழக மக்கள் நிறைவேற்றினர்.

இவ்வாறான வெற்றியை அறிஞர் அண்ணாதுரை அவர்கள் கூட பெற்றிருந்தார் என்ற வரலாறுகளை நாம் பார்க்க முடிகின்றது.

இந்த வகையில்தான் அரசியல் என்ற சூழமைவைக் கடந்து மக்கள் பணி செய்ய முடியும் என்பது நிருபணமாகிறது.

தமிழ் மக்கள் பேரவையும் இத்தகைய தன்மை கொண்டதே. இன்றைய சூழ்நிலையில் தமிழ் மக்கள் பேரவைக்கு மிகுந்த பொறுப்புக்கள் உண்டென்பது மறுக்க முடியாத உண்மை.

தமிழ் மக்கள் மத்தியில் அரசியல் சார்ந்த தெளிவை ஏற்படுத்துவது; ஜெனிவாக் கூட்டத்தொடரில் இலங்கை அரசுக்குக் காலஅவகாசம் வழங்கப்படுமாயின் அதனால் தமிழ் மக்களுக்கு ஏற்படும் பாதகத் தன்மையை வெளிப்படுத்துவது; தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தவறான அணுகுமுறைகளையும் அரசியல் நகர்வுகளையும் சுட்டிக் காட்டுவது; சரியானவற்றை வரவேற்பது; தமிழ் மக்களின் வாழ்விடங்களை மீட்பது என்றவாறு பல்வேறு பொறுப்புக்களைச் செய்ய வேண்டிய கடமைப்பாட்டில் தமிழ் மக்கள் பேரவை உள்ளது என்பதற்கு அப்பால்,

தேர்தல் மூலமான தமிழ் மக்களின் அரசியல் தலைமையைத் தீர்மானிக்கின்ற சக்தியையும் தமிழ் மக்கள் பேரவை கொண்டிருக்கும் போதுதான் எங்கள் இனத்தின் விடியலும் எதிர்பார்ப்பும் இலகுவாகும் என்பது சர்வ நிச்சயம்.

# 80 இலட்சம் ரூபாய் செலவில் வைத்தியர் விடுதி நிர்மாணிப்பு

(பொற்பதி)

வடமராட்சிக் கிழக்கு நித்தியவெட்டை(முள்ளியான்) வைத்தியசாலைக்கான வைத்தியர் விடுதி சுமார் 80 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாக அந்த வைத்தியசாலையின் வைத்தியர் தா. உமாபதிசிவம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், நித்தியவெட்டை (முள்ளியான்) வைத்தியசாலையினை நான் பொறுப்பேற்று இன்றைக்கு ஐந்து ஆண்டுகளுக்குமேல் ஆகிவிட்டது. இன்றுவரைக்கும் முழுநேரமாக வெளி நோயாளர் பிரிவு மற்றும் குழந்தைகள் கர்ப்பவதிகளுக்கான கிளினிக் ஆகியன இடம்பெற்று வருகின்றன.

ஆனால் வைத்தியர்களோ ஏனைய உத்தியோகத்தர்களோ தங்குவதற்கு இவ்வைத்தியசாலையில் இடம் இலலை. இதன் காரணமாக வடக்கு மாகாணசபையின் சுகாதார அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் மூலமாக 80 இலட்சம் ரூபாய் செலவில் வைத்தியர் தங்கும் விடுதியும் 25 இலட்சம் ரூபாவிற்கு அதற்கான தளபாடங்களுமாக மொத்தமாக 105 இலட்சம் ரூபாய ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில் கட்டட நிர்மாணப் பணிகள் முற்று முழுதாக நிறைவடைந்துள்ளன. ஆனால் இதற்கான தளபாடங்கள் இதுவரைக்கும் அங்கு வந்து சேரவில்லை.

கட்டட நிர்மாணப்பணிகள் முடிவுற்று ஏறக்குறைய மூன்று மாதகாலமாகியும் கட்டடத்தினை உத்தியோக பூர்வமாக கையளிப்பதற்கான எந்தவிதமான நடவடிக்கையினையும் உரிய தரப்பினர் இதுவரைக்கும் மேற்கொள்ளவில்லை . இவ் வைத்தியசாலை வைத்தியர் மருதங்கேணி வைத்தியசாலை வைத்தியர் விடுதியிலேயே தங்கிநின்று இங்கு பணிக்கு வருவதாகவும் அவர் தெரிவித்தார். இவ் வைத்தியசாலை வைத்தியர் விடுதி உரிய முறைப்படி திறந்து வைக்கப்படுமாயின் அங்கேயே தங்கி நின்று இரவு பகல் சேவையினை வழங்க முடியுமென வைத்தியர் தா. உமாபதி சிவம் தெரிவித்தார்.

இதனால் நித்திய வெட்டை வைத்திய சாலையினை சுற்றியுள்ளவர்கள் நிறைய பயனடையமுடியுமென தான் நம்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-64)

# கிம் ஜாங் உன்னின் சகோதரன் கொலை இரு பெண்கள் கைது

(கோலாலம்பூர்)

உலக நாடுகளுக்கு சவாலாக திகழ்ந்து வரும் வட கொரியா ஜனாதிபதி கிம் ஜாங் உன்னின் சகோதரர் கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இரு பெண்கள் மலேசிய பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வியட்நாம் கடவுச்சீட்டை கொண்டிருந்த முதலாவது சந்தேகநபர் கோலாலம்பூர் சர்வதேச விமான நிலையத்தில் வைத்து நேற்று முன்தினம் புதன்கிழமை கைது செய்யப்பட்டிருந்த நிலையில், மற்றுமொரு பெண்ணொருவரும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் நேற்று உறுதிப்படுத்தியுள்ளனர்.

எனினும், அது தொடர்பான மேலதிக தகவல்கள் எதுவும் இதுவரை வெளியிடப்படவில்லை.

கண்காணிப்பு கமராக்கள் மூலம் பதிவுசெய்யப்பட்ட காணொலிகளின் அடிப்படையில் குறித்த கைதுகள் இடம்பெற்றுள்ள நிலையில், மேலும் சந்தேக நபர்களை கைது செய்யும் நோக்கில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

45 வயதான கிம் ஜாங் நாம், மலேசிய தலைநகர் கோலாலம்பூர் விமான நிலையத்தில் வைத்து கடந்த திங்கட்கிழமை விஷ ஊசித் தாக்குதலுக்கு இலக்காகி திடீரென உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-12)

# விழிப்புணர்வு நாடகம்

கிராம மட்டத்தில் தற்கொலை தடுப்பு விழிப்புணர்வு செயற்றிட்டத்தை முன்னெடுக்கும் நோக்குடன் கைகொடுக்கும் நண்பர்கள் அமைப்பினரால் ஒழுங்கு செய்யப்பட்ட "மனமெனும் வெள்ளைக் காகிதம்" விழிப்புணர்வு நாடகம் இன்று வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு நாவாந்துறை சென். நீக்கிலஸ் சனசமூக நிலைய முன்றலில் இடம்பெறும். (இ-12)

# மின்சாரம் தடைப்படும்


உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 6.30 மணி வரை **யாழ். பிரதேசத்தில** பத்தைமேனி, பாரதி வீதி, தம்பாலை, இடைக்காடு, வளலாய், தபால்நிலைய வீதி சாவகச்சேரி, பெருங்குளம் சந்தி, டச்சு வீதி சாவகச்சேரி, மருதங்குளம் ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில** வெளிக்குளத்திலி ருந்து குடாகச்சக்கொடிய வரை, கோவில்குளத்திலிருந்து சிதம்பரபுரம் வரை, வவுனியா நகரத்திலிருந்து போகஸ்வேவாவரை, T.M.M கல்லுடைக்கும் ஆலை, சூசைப்பிள்ளையார் குளம், ஓவியா விடுதி S.V.R. அரிசி ஆலை, லங்கா அரிசி ஆலை, கீர்த்தி அரிசி ஆலை, குடாகச்சக்கொடிய கல்லுடைக்கும் ஆலை, CEC கல்லுடைக்கும் ஆலை, 1ஆம் குறுக் குத்தெரு வவுனியா, பிரசன்னா கல்லுடைக்கும் ஆலை, வவுனியா நகரம், பூங்கா வீதி, புகையிரத நிலைய வீதி, வவுனியா மணிக்கூட்டுக் கோபுரத்திலிருந்து கண்டி வீதியூடாக கற்குண்டமடு வரை, மதவு வைத்த குளத்திலிருநது பண்டாரிக்குளம் வரைக்கும், காத்தார் சின்னக்குளம், மகாறம்பைக் குளம், பூந்தோட்டம், குருமன்காடு, வைரவப் புளியங்குளம், பட்டானிச்சூரிலிருந்து நெளுக்குளம் சந்தி வரை, கூமாங்குளத்திலிருந்து நொச்சிக்குளம் வரை, நெளுக்குளத் திலிருந்து பெரிய நொச்சிக்குளம் வரைக்கும், நேரியகுளத்திலிருந்து செட்டிகுளம் வரை, வவுனியா வைத்திய சாலை, வவுனியா இலங்கை தொலைத்தொடர்பு நிலையம், வவுனியா மக்கள் வங்கி, வவுனியா தேசிய சேமிப்பு வங்கி, வவுனியா இலங்கை வங்கி, வவுனியா கார்கில்ஸ் பூட்சிற்றி, கச் சேரியடி நீர்ப்பாசன சபை, மூன்றுமுறிப்பு விமானப் படைமுகாம், மண்டரின் காமெண்ட்ஸ், Gowloom காமெண்ட்ஸ் இரட்டை பெரியகுளம் இராணுவ முகாம், பூ-ஓயா இராணுவ முகாம், குளோப் அரிசி ஆலை, மடுக்கந்த தொலைத்தொடர்பு நிலையம், குருமன் காடு UNHCR, அரசன் அரிசி ஆலை, சியாம் அரிசி ஆலை, ஸ்ரீரங்கம் அரிசி ஆலை, தெய்வேந்திரம் அரிசி ஆலை, சுயன் அரிசி ஆலை, அஸ்வி அரிசி ஆலை, ஜீவன் அரிசி ஆலை, செட்டி குளம் தொலைத்தொடர்பு கோபுரம், செட்டிகுளம் வைத்தியசாலை, செட்டி குளம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** கடலேரி ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### காலையில் விழித்தவுடன் எந்தத் திசையைப் பார்த்து விழித்தால் யோகம் உண்டாகும்?

❖ கிழக்கு முகம்பார்த்தால் ஆயுள் விருத்தி.
❖ தென்கிழக்கு மூலையை பார்த்தால் துவேஷம்.
❖ தெற்கு முகம் பார்த்தால் மரண பயம் உண்டாகும்.
❖ தென்மேற்கு மூலை பார்த்தால், பாவங்கள் சேரும்.
❖ மேற்கு முகம் பார்த்தால், நல்ல விஷயங்கள் நடக்கும்.
❖ வடமேற்கை பார்த்தால், புஷ்டியுண்டாகும்.
❖ வடகிழக்கு மூலையை பார்த்தால், உடலிலும் உள்ளத்திலும் சக்தி கிடைக்கும். சிந்தனை தெளிவாக இருக்கும்.

இவ்வகையான எளிய சாஸ்திர பரிகாரங்களை நம்பிக்கையுடன் கடைப்பிடித்தால் இன்னல்கள் மறையும். இறைவனின் ஆசியால் நன்மைகள் நம்மை தேடி வரும். இரும்பு, எண்ணெய், உளுந்து, பழங்கள், நீர் இவைகளை தானம செய்தால், கஷ்டங்கள் விலகும், உடல் ஆரோக் கியமாக இருக்கும்.




### ஏழைக்கும் உறவுக்கும் தானம்

❖ ஒருவன் தன் கையால் உழைப்பதும் மோசடி செய்யாமல், பொய் பேசாமல் ஒருவன் நடத்தும் வாணிபமும் தான் யாவற்றிலும் சிறந்த சம்பாத்தியம்.

❖ பணியாளர்களுக்கு உபசரியுங்கள். நீங்கள் உண்பதிலிருந்து அவர்களுக்கும் உணவு அளியுங்கள்.

ஒரு தந்தை தன் பிள்ளைக்கு அளிக்கும் மாபெரும் பரிசு நல்லொழுக்கமே.

❖ உங்களிடம் கண்ணியத்துடன் நடந்து கொள்வது உங்கள் குழந்தைகளின் கடமை உங்கள் குழந்தைகளைச் சமமாக நடத்துவது உங்களின் கடமை.

❖ ஏழைகளுக்கு தானம் வழங்கினால் ஒரு நன்மை கிட்டும், உறவினர்களுக்கு தானம் வழங்கினால் இரண்டு நன்மைகள் கிட்டும். ஒன்று, தானம் வழங்கியதற்காகவும், மற்றொன்று உறவுகளை இணைத்ததற்காகவும்.

❖ மண்ணிலுள்ள மனிதர்களை நீங்கள் நேசித்தால், விண்ணிலுள்ள இறைவன் உங்களை நேசிப்பான். நீங்கள் அன்பு செலுத்தாதவரை இறை நம்பிக்கையாளர்களாக முடியாது.

**- வேதவரிகளும் தூதர் மொழிகளும் நூலில் இருந்து**



யாழ். மாவட்ட 20 வயதிற்கு உட்பட்ட பூப்பந்தாட்ட வீர, வீராங்கனைகளுக்கான குழுத் தெரிவு வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் (14.02.2017) செவ்வாய்க்கிழமை அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய அமரர் கனகலிங்கம் மகாலிங்கம் நினைவுகூர் உள்ளக அரங்கில் நடைபெற்ற போது...-

### றோல் போல் போட்டியில் பங்குபெற

# கிளிநொச்சி பாடசாலை மாணவிகள் பங்களாதேஷ் நோக்கி பயணம்

கிளிநொச்சி பாடசாலை மாணவிகளான திவ்யா, துலக்சினி ஆகியோர் 17.02.2017-23.02.2017 வரை பங்களாதேஷில் நடைபெறவுள்ள றோல் போல் உலகக் கிண்ண போட்டியில் இலங்கை அணியினை பிரதிநிதித்து வப்படுத்தி விளையாட நேற்று முன்தினம் பயணமாகினர்.

கிளிநொச்சி புகையிரத நிலையத்தில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், வலயக்கல்விப் பணிப்பாளர் ஆகியோர் அவர்களுக்கான கௌரவிப்பினை வழங்கி வழி அனுப்பி வைத்தனர். (க)



# கவியன் அதிரடி கோல்

## அரையிறுதியில் ரெட் கிங்ஸ்



இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகம் நடத்தும் Soccer league உதைபந்தாட்ட தொடரில் (12.02.2017) அன்று மாலை இடம்பெற்ற மிக விறுவிறுப்பான போட்டியில் பாயும் புலியை எதிர்த்து விளையாடிய ரெட் கிங்ஸ் அணி மோதியது. பரபரப்பாக நடைபெற்ற இப் போட்டியில் கவியனின் அதிரடி கோல்கள் மூலம் 02:01 என்ற அடிப்படையில் பாயும் புலியை வீழ்த்தி அரையிறுதிப்போட்டிக்கு நுழைந்தது ரெட்கிங்ஸ் அணி. (க)

# கரவெட்டி மத்தொனி விளையாட்டுக்கழக 21 வயது பிரிவினருக்கான கிரிக்கெட்

## இறுதிப் போட்டியில் ஞானம்ஸ், ஸ்பேஸ்

கரவெட்டி மத்தொனி விளையாட்டுக்கழகம் நடத்திய 21 வயது பிரிவினருக்கு இடையிலான அணிக்கு 9 பேர் 8 பந்துப் பரிமாற்றம் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் play off முறையிலான அரையிறுதி போட்டியில் கரவெட்டி ஞானம்ஸ் அணி, கரவெட்டி ஐங்கரன் அணி மற்றும் கரவெட்டி சிற்றி ஸ்பேஸ் அணிகள் மோதின.

முதல் போட்டியில் ஞானம்ஸ் அணியை எதிர்த்து ஐங்கரன்அணி மோதியது. நாணயச் சுழற்சியில் ஞானம்ஸ் அணி வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடியது. அவ் அணி 6.1 பந்து பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 38 ஓட்டங்களை பெற்றது. பிரணவன் அதிக பட்சமாக 14 ஓட்டங்களை பெற்றார். ஐங்கரன் அணி சார்பாக அஜந் 4 இலக்குகளைகைப்பற்றினார். 39 என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய ஐங்கரன் அணி 6.5 பந்து பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 24 ஓட்டங்களை பெற்றது. இப்போட்டியில் 14 ஓட்டங்களினால் ஞானம்ஸ் அணி வெற்றி பெற்று இறுதிபோட்டிக்குதெரிவாகியது.

இரண்டாவது போட்டியில் ஐங்கரன் அணியை எதிர்த்து சிற்றி ஸ்பேஸ் அணி மோதியது. நாணயச் சுழற்சியில் ஐங்கரன் அணி வெற்றி பெற்று களத்தடுப்பை தெரிவு செய்தது. சிற்றிஸ்பேஸ் நிர்ணயிக்கப்பட்ட 8 பந்து பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 64 ஓட்டங்களை பெற்றது. சுஜத் அதிக பட்சமாக 19 ஓட்டங்களை பெற்றார். பாபு மற்றும் அஜந் தலா 2 இலக்குகளை கைப்பற்றினார்கள். 65 என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய ஐங்கரன் அணி ஆரம்பத்தில் அதிரடியாக விளையாடி இருந்தும் நிர்ணயிக்கப்பட்ட 8 பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து 61 ஓட்டங்களை மட்டுமே பெறமுடிந்தது.

விதுஷன் அதிக பட்சமாக 20 ஓட்டங்களைபெற்றார். மதன் 2 இலக்குகளையும் சதீஸ் 1 இலக்கையும் கைப்பற்றினார்கள்.

இப்போட்டியில் சிற்றி ஸ்பேஸ் அணி 3 ஓட்டங்களினால் வெற்றி பெற்று இறுதி போட்டிக்கு தெரிவாகியது. (க)

# கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்குக

சுன்னாகம் black caps விளையாட்டுக்கழகம் நடத்தும் மென் பந்து சுற்றுப் போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

சம்பியனாகும் அணிக்கு வெற்றிக் கிண்ணமும் பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படும்.

விண்ணப்பிக்கும் விளையாட்டுக் கழகங்கள் 077 113 6792, 070 235 3587, 077 981 0679 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பினை ஏற்படுத்துக. (க)

# இன்றைய போட்டிகள்

நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம் நடத்தும் Northern challengers உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று வெள்ளிக் கிழமை இரவு 7 மணிக்கு நடைபெறும் போட்டியில் பாசையூர் சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து வட மராட்சி மனோகரா விளையாட்டுக் கழகலும் இரவு 8 மணிக்கு நடைபெறும்போட்டியில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகத்தைஎதிர்த்து மன்னார் கில்லறி விளையாட்டுக்கழகலும் மோத வுள்ளது. (க)



வேலணை தெற்கு ஐயனார் வித்தியாலயத்தின் வருடாந்த செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழா (08.02.2017) அன்று ஐயனார் விளையாட்டுக்கழக மைதானத்தில் பாடசாலை அதிபர் திருமதி சுதர்சினி யொய்ஸ் நியூட்டன் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வுகளில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினமும் சிறப்பு விருந்தினராக வேலணை கோட்டக் கல்விப் பணிப்பாளர் பொ. சிவானந்தராஜா உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

## நல்லாட்சியை விமர் ...

என நிதியமைச்சர் ரவி கருணா நாயக்க தெரிவித்துள்ளார்.

நிதியமைச்சில் நேற்று நடை பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் ரவி கருணாநாயக்க கலந்து கொண்டார்.

நல்லாட்சி அரசாங்கத்தினால் பெற்ற புதிய கடன்களினால் நாடு இன்னும் அதளபாதாளத்துக்குள் சென்று கொண்டிருப்பதாகவும், நல் லாட்சி பெற்ற கடன்களில் என்ன செய்யப்பட்டிருக்கிறது என்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஊடகங்களுக்கு முன் பாக முன்பு கேள்வி எழுப்பியிருந்தார்.

இந்தநிலையில் நேற்றைய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டிருந்த நிதியமைச்சர் இதற்கு பதிலளித்தார்.

நிதியமைச்சர் தனது பதிலில், "இந்த அரசாங்கம் பெற்ற கடன் களில் என்ன செய்திருக்கிறது என்று முன்னாள் நிதியமைச்சரும் ஜனாதிபதியுமான மகிந்த ராஜ பக்ஷ வினா எழுப்பியிருப்பதை ஊட கங்கள் மூலம் அறிந்துகொண் டேன். கடன் சுமையினால் நிறை ந்து அதனை செலுத்த முடியாத சூழ் நிலையிலேயே நாட்டை எம்மிடம் வழங்கினர்.

எனவே மகிந்த ராஜபக்ஷ தெரிந்து ஒருவிடயத்தைக் கதைக்க வேண் டும். இல்லாவிட்டால் அதைப்பற்றி பேசக்கூடாது.

அரசியல் சூழ்நிலையில் பேசி னால் பிரச்சினையில்லை. ஆனால தகவல்களை வைத்துக் கொண்டு சுட்டிக்காட்டி பேசினால் அதற்கு பதிலளிக்க நான் தயார். நாங்கள் பெற்ற 8.8 பில்லியன் மற்றும் 1100 பில்லியன் கடன் அளவு மொத்த கடன் கணக்கில் சேர்க்கவில்லை. மொத்தமாக உள்ள 9.7 பில்லியன் கடன் முன்னாள் அரசாங்கத்தி னால் பெறப்பட்ட, செலுத்தப்படாத கணக்கு. அதனை செலுத்திமுடிக் கும் பொறுப்பு எமக்கு உள்ளது.

1700 பில்லியனாக இருந்த கடன் 9500 பில்லியனாக அதிக ரிக்கச் செய்த மகிந்த ராஜபக்ஷ இன்று கடன்பற்றி எம்மிடம் வெட்க மின்றி கேட்கின்றார் என நிதிய மைச்சர் சாடியுள்ளார். (செ-11)

## ஐரோப்பிய ஒன்றிய...

கலந்துகொண்டு கிளிநொச்சி கரை ச்சி பிரதேச செயலக பிரிவில் மருத நகர் கிராமத்தில் இரண்டு வீட்டுத் திட்ட பயனாளிகளின் வீட்டுக்கான அடிக்கல்லை நாட்டி வைத்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி அனுசரணையில் 860 வீடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இதற்காக ஆறு இலட்சத்து 70 ஆயிரம் ரூபாயை ஒவ்வொரு வீட்டுத்திட்டத்துக்கும் வழங்கு வதோடு, வாழ்வாதாரத்துக்கும் நிதி உதவிகள் வழங்கப்படவுள்ளது.

வீட்டுத்திட்டத்தை ஹாபிடாட் பேரர் ஹியுமானிட்டி நிறுவனமும் பயனாளிகளுக்கான வாழ்வாதா ரத்தை வேல்ட் விசன் நிறுவன மும் முன்னெடுக்கவுள்ளன.

இங்கு கருத்து தெரிவித்த ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான தூதுக்குழுவின் தூதுவர் ஹி டுங் லாய் மர்கியு ஐரோப்பிய ஒன்றியம் 2005 முதல் இலங்கையில் பணி யாற்றி வருகிறது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங் களில் 2 ஆயிரத்து 435 வீடுகளை அமைப்பதற்கு உதவியுள்ளோம்.

இத்திட்டத்தின் கீழ் தனியே வீடுகளை மாத்திரமன்றி மீள் குடி யேறியுள்ள குடும்பங்களின் வாழ் வாதாரங்களை மேம்படுத்தவும் உதவிகளை வழங்கிவருகின்றோம் எனத் தெரிவித்தார். (செ-312)

## காணாமல்போன...

பின் குறித்த ஆசிரியையின் சடலம் சிதைவடைந்த நிலையில் உடற் பாகங்களாக மன்னார் மடு பிர தேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட கீரிச்சுட்டான் பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை மீட்கப் பட்டுள்ளது.

குறித்த சடலம் உடற்பாகங்களாக மடு பிரதேசச் செயலாளர் பிரிவுக் குட்பட்ட கீரிச்சுட்டான் பகுதியில் உள்ள காட்டுப்பகுதியில் இருந்தே நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு மீட்கப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

மடு பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப்ப டையில் குறித்த சடலம் மிகவும் உருக்குலைந்த நிலையில் மீட்கப் பட்டுள்ளது.

வவுனியா பாண்டியன் குளம் கிராமத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தாயாரும் தொண் டர் ஆசிரியையுமான ஏ. ஜாலினி (வயது-31) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

குறித்த தொண்டர் ஆசிரியரது மரணம் தொடர்பில் மன்னாரில் உள்ள அரச திணைக்களமொன் றில் கடமையாற்றுகின்ற அவரது கணவரிடம் பொலிஸார் விசார ணைகளை மேற்கொண்டுள்ள தாக கூறப்படுகின்றது.

சடலம் மீட்கப்பட்டுள்ள இடத் திற்கு நேற்று வியாழக்கிழமை மாலை சென்ற மன்னார் மாவட்ட நீதவான் சடலத்தை பார்வை யிட்டுள்ளதோடு மீட்கப்பட்ட சட லத்தை மன்னார் பொது வைத் தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

மேலதிக விசாரணைகளை மடு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை குறித்த ஆசிரியர் 2016ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதியின் போது காணா மல் போயுள்ளதாக தெரிய வந் துள்ள நிலையில் அவரது சடலம் ஆடைகள் மற்றும் நகைகள் மூலம் அவரது உறவினர்களி னால் அடையாளம் காணப்பட்டுள் ளது.

அத்தோடு குறித்த பெண்ணின் கணவர் அண்மையில் ஓமந்தைப் பகுதியில் உள்ள காட்டுப்பகுதியில் கைகள் கட்டப்பட்ட நிலையில் பொலிஸாரினால் மீட்கப்பட்டு வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (செ-4,250)

## கொழும்பு நகரில்...

கின்ற போதிலும் ஊடகங்கள் தவறான செய்திகளை வெளியிட்டு வருவதாகவும் அவர் குற்றம்சாட்டி யுள்ளார்.

பாட்டலி சம்பிக்க ரணவக்க மேலும் கருத்து வெளியிடுகையில்,

கடந்த வரவு செலவுத்திட்ட விவாதத்தின் போது நாட்டில் சட்ட விரோதமாக பல கட்டடங்கள் அமை க்கப்பட்டு வருவதாகவும் இது தொடர பில் ஆராய வேண்டுமெனவும் பிரதியமைச்சர் ஹர்ச டி சில்வா கோரிக்கை விடுத்திருந்தார்.

இது தொடர்பில் நாடு முழுவ தும் ஆராய்ந்து கணக்கெடுப்பு நடத்த தகவல்களை பெறவேண்டி யுள்ளது. இதுவரை கொழும்பில் மாத்திரம் 1800 சட்டவிரோத கட்ட டங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக எமக்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

பல இடங்களில் 5 மாடிகளுக்கு அனுமதி பெற்று 10 மாடிகள் அமைக்கப்பட்டுள்ளன. அது தொடர பில் வழக்குத் தொடர்ந்தால் அவை நிறைவடைய 20 வருடங்கள் செல்லும்.

அவ்வாறான விடயங்களை ஆராய்ந்து ஆறு மாதங்களுக்குள் தீர்மானங்களை மேற்கொள்ள வுள்ளோம் என்றார். (செ-11)

## த.தே.கூட்டமைப்பிலு...

தொடர்பாக இரு பிரதானமான கொள்கை சார்ந்த விடயங்கள் அரசியலில் இருக்கின்றன. அதில் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு சமஷ்டி முறையிலான தீர்வு, இர ண்டாவது இனவழிப்புக்கு பொறுப் புக்கூறல் என்பன முக்கியமாக வுள்ளன.

இந்த இரு விடயங்களையும் விட்டுக்கொடுக்காமல் இருந்தால் மாத்திரமே கடந்த 65 வருடங் களுக்கு மேலாக நடைபெறும் அநீ திக்கு முற்றுப்புள்ளி இடமுடியும். எதிர்காலத்தில் முன்னேற்றகரமான பாதைக்கு எமது இனம் செல்லக் கூடியவகையில் இருக்கும்.

இரு விடயத்திலும் விட்டுக் கொடுத்தால் மீண்டும் மீண்டும் நடைபெற்ற அநியாயங்கள் எதிர் வரும் காலத்திலும் நடைபெறும். இந்த வகையில்தான் அரசியல் தீர்வு மற்றும் பொறுப்புக்கூறல் என்பது மிகமுக்கியமாக உள்ளது.

இந்த நிலையில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைமைகள், சமஷ்டி என்ற விடயத்தை வலியு றுத்தமாட்டோம் என தெரிவித் துள்ளதுடன் ஒற்றை ஆட்சியை ஏற்றுக்கொள்ள தயாரான நிலை யில் உள்ளது.

அத்துடன் பொறுப்புக்கூறல் தொடர்பாக அரசுக்கு காலக்கேடு கொடுக்க இணங்கியுள்ளமையும் தற்போது அம்பலமாகியுள்ளது.

தமிழ் மக்களை பொறுத்த வரையில் தற்போது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமை அரசி யல் மோசடி செய்து வருகின்றது என்பதுடன் மக்களுக்கு அப்பட்ட மான துரோகத்தை செய்து வரு கிறது என்பது மிகத் தெளிவாக நிரூபணமாகியுள்ளது.

இந்த நிலையில் தமிழ் மக்கள் பேரவையில் உள்ள தமிழ் தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிப்பவர் கள் ஒரு பகுதிக்கில் இருந்து கூட்ட மைப்பை விமர்சிக்கிறார்கள் மற்ற பக்கம் பேரவையில் இருப்பதாக காட்டிக்கொள்கிறார்கள்.

எனவே மோசமான தமிழ் தலைமையின் கீழ் இணைந்து கொண்டு தமிழ் மக்கள் பேரவை யில் தொடர்ந்து செயற்பட முடி யாது.

தொடர்ந்து அவ்வாறு செயற் பட்டால் மோசடி செய்யும் த.தே. கூட்டமைப்பு தலைமைக்கு மேலும வாய்ப்பை ஏற்படுத்தி கொடுப்பவர் களாகதான் இருப்பீர்கள்.

எனவே கூட்டமைப்பில் உள்ள கட்சிகள் தமது தலைமையை நிராகரித்து ஆணித்தரமான முடிவை எடுக்க வேண்டும். நாம் ஒற்றுமைக்கு மாறானவர்கள் அல்ல. ஆனால் ஒற்றுமையானது உண்மையாகவும் அர்த்தமுள்ள தாகவும் இருக்க வேண்டும்.

மக்கள் முழுமையாக தமிழ் மக்கள் பேரவையை நம்பி வந்து ள்ளார்கள். அந்த நம்பிக்கைக்கு துரோகம் செய்யக்கூடாது என கஜேந்திரகுமார் மேலும் தெரிவித் தார். (செ-9)

## கேப்பாப்பிலவு, வலி...

டவர்களாகவும் அவல வாழ்க்கை க்கு நிர்ப்பந்திக்கப்பட்டவர்களா கவும் உள்ளனர்.

இந்நிலையில் நல்லாட்சி என சொல்லிக் கொள்ளும் அரசாங்க மும், அதோடு ஒட்டிக்கொண்டு சுகபோகம் அனுபவித்துக் கொண் டிருக்கும் தமிழ் தலைமைகள் மக்களின் துன்பங்களையும் அவ லங்களையும் கண்டுகொள்வதாக இல்லை.

பாதிக்கப்பட்ட மக்கள் அரசியல் தலைவர்களினதும் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவுமின்றி அநாதைகளாக நின்று தமது உரிமைகளுக்காக தனித்து நின்று போராடிக்கொண்டிருக்க, அரசுக்கு சேவகம் செய்யும் சில தலைவர்கள் தமக்கு இடம்பிடிப்பதற்காக அவ்வப் போது மக்கள் தாமாக நடத்தும் போராட்டங்களில் கலந்துகொண்டு தங்களை மக்களின் பிரதிநிதிக ளாக காட்டிக்கொள்ள முற்படுகின் றனர்.

ஆனால், அவர்களின் போலி வேஷத்தை மக்கள் இணங்கண்டு கொண்டுவிட்டனர். இனிமேல் இவர்களின் "பூனைக்கும் தோழன் பாலுக்கும் காவல்" என்ற இரட்டை வேசத்தை மக்கள் ஏற்றுக்கொள் ளப் போவதில்லை.

தமிழ் தலைமைகள் ஒருமித்த குரலாக பாராளுமன்றத்தில் அழுத் தங்களை முறையாக கொடுத் திருந்தால், மக்களின் பிரச்சினை க்கு கௌரவமான தீர்வைப் பெற் றிருக்க முடியும்.

அப்படி ஒரு தீர்வு கிடைத்திருந் தால், கேப்பாப்பிலவு மக்கள் பனி யிலும், வெயிலிலும் வாடி நாட் கணக்கில் ஒரு போராட்டத்தினை நடத்த வேண்டி வந்திருக்காது. மக்கள் போராடிக்கொண்டிருக் கின்ற இந்த சூழ்நிலையிலும் கூட தலைவர்கள் அரசாங்கத்தினைப் பாதுகாக்கவும், அனுசரணையா ளர்களாக செயற்படுத்துவதிலும் போட்டி போடுகின்றனர்.

ஆனால், வாக்களித்த மக்க ளின் துன்பங்கள் அவர்கள் சிந்தும் கண்ணீர் இவர்களுக்கு ஒரு பொருட்டல்ல.

எனவே, நல்லாட்சி வேடமிட் டுள்ள அரசாங்கம் எம்மத்தியில் உள்ள கையாலாகாத் தலைவர் களும் கோரிக் காம்பாக செயற் படும் தலைவர்களும் இணக்க அரசியல் என்றிருப்போரும் உள்ள வரையும் பாதிக்கப்பட்ட மக்க ளுக்கு தீர்வு வழங்கப் போவ தில்லை.

மக்கள் போராட்டம் ஒன்றே தீர்வினைப் பெற்றுத்தரும்" எனவே போராடும் மக்களுக்கு பலம் சேர் க்க அனைத்து மக்களையும் ஒன் றிணையுமாறு வேண்டுகோள் விடுக்கிறோம் என அந்த அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-4)

## போராட்டத்தை குழப்ப...

முல்லைத்தீவு கேப்பாப்பிலவு பிலவுக்குடியிருப்பு மக்கள் தமது சொந்த காணியை மீண்டும் தம் மிடம் கையளிக்குமாறு கோரி கடந்த பதினேழு நாளாக போரா ட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

விமான படையினரால் ஆக்கிர மிக்கப்பட்டுள்ள மக்கள் காணியை விட்டு உடனடியாக வெளியேற வேண்டும் எனவும் மக்கள் கோரி க்கை விடுத்துள்ளனர்.

இந்நிலையில் தம்மையும் தமது போராட்டத்துக்கு ஆதரவு வழங்கி வருபவர்களை விமானப் படையினர் புகைப்படம் எடுத்து மறைமுக அச்சுறுத்தலை விடுத்து வருவதாக கேப்பாப்பிலவு மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்

அதனைவிட போராட்டத்தில் ஈடுபடும் சிலரை மது பாவனைக்கு அடிமையாக்கி அவர்களூடாக போராட்டத்தை குழப்ப சதித்திட்டம் தீட்டிவருவதாகவும் அவ்வாறான சம்பவங்கள் சில இடம்பெற்றதாக வும்,

இவ்வாறு எத்தடைகள் ஏற்படுத் தப்பட்டாலும் தாம் காணிக்குள் செல்லும்வரை போராட்டம் நிறுத் தப்படாது எனவும் உறுதியாக தெரி வித்துள்ளனர்.

முல்லைத்தீவு நந்திக்கடலுக்கு கிழக்காக அமைந்துள்ள பிலவுக் குடியிருப்பில் உள்ள, 84 குடும்பங் களுக்குச் சொந்தமான காணி களை விடுவிக்குமாறு வலியுறுத்தி இந்த போராட்டம் முன்னெடுக்கப் பட்டுள்ளது.

கடந்த 31ஆம் திகதி ஆரம்பிக் கப்பட்ட மக்களின் தொடர் போராட் டம் தீர்வின்றி இன்றும் 18ஆவது நாளாக முன்னெடுக்கப்படுகிறது.

இந்த நிலையில் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மக்களுக்கு ஆதரவு தெரிவித்து, அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பொது அமைப்புக்க ளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் என பலர் போராட்டங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் பல்வேறு விதங்களில் முன்னெடுத்துள்ள னர்.

அந்தவகையில் மேலும் பலர் தமது ஆதரவுகளை தொடர்ந்தும் வழங்கி வருகின்றமை குறிப்பிடத் தக்கது. (செ-281)



## 'தூய்மையான யாழ்ப்பாணம் நோக்கிய பயணம்'

சிவ வாரத்தை முன்னிட்டு "தூய்மையான யாழ்ப்பாணம் நோக் கிய பயணம்" எனும் தொனிப் பொருளில் நாளை சனிக்கிழமை மாபெரும் சிரமதான பயணம் ஒன்று நடைபெறவுள்ளது.

சிவ வாரத்தை முன்னிட்டு அகில இலங்கை சைவ மகா சபை யின் ஏற்பாட்டில் யாழ் மாநகர சபை மற்றும் யாழ் பிராந்திய சுகா தார சேவைகள் பணிமனையின் அனு சரணையில் ஆரம்பிக்கவுள்ள இந்த மாபெரும் சிரமதான பய ணம் காலை 6.30 மணிக்கு 4 பிரதான வீதிகளில் இருந்து ஆரம் பித்து பிப 12.30 மணியளவில் யாழ் போதனா வைத்தியசாலை முன்ற லில் நிறைவடையவுள்ளது.

அந்தவகையில் நான்கு பிர தான இடங்களான நாச்சிமார் கோவிலில் இருந்து கே.கே.எஸ் வீதியூடாகவும் கோம்பயன் மயா னத்தில் இருந்து மானிப்பாய் வீதி யூடாகவும் நல்லூர் ஆலயத்தில் இருந்து பருத்தித்துறை வீதியூடாக வும், யாழ்.பல்கலைக்கழகத்தில் இருந்து பலாலி வீதியூடாகவும் ஆரம்பித்து யாழ் போதனா வைத் தியசாலை முன்றலை வந்தடைய வுள்ளது.

இந்த மாபெரும் சிரமதான பய ணத்தின்போது வீதியின் இரு மருங கிலும் உள்ள பொலித்தீன்கள், பிளா ஸ்டிக் கழிவுப்பொருட்கள் என்பன அகற்றப்பட்டு அப்பகுதிகள் தூய்மை யாக்கப்படவுள்ளதுடன் அப்பகுதி களில் உள்ள கடைகள் வீடுகள், நிறு வனங்கள் என்பவற்றில் பொலித் தீன், பிளாஸ்டிக் பாவனை தொடர் பான விழிப்புணர்வு துண்டுப் பிர சுரம் வழங்கப்படவுள்ளது.

அத்துடன் யாழ். போதனா வைத்தியசாலை முன்றலில் நடை பெறவுள்ள ஒன்றுகூடலிற்கு யாழ் மாவட்ட அரச அதிபர் நா.வேத நாயகன், யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கே.நந்த குமார், மாநகர சபை ஆணையா ளர் பொ.வாகீசன், யாழ் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் எஸ்.சத்தியமூர்த்தி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

எனவே இந்த மாபெரும் சிரம தான பயணத்தில் பொதுமக்கள் அனைவரும் ஆதரவை வழங்கு மாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (செ-9)

## தமிழக முதல்வ...

தமிழக அமைச்சர்களாகவும் ஆளுநர் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். முதல்வராக எடப்பாடி பழனிச்சாமி பதவியேற்றதை தொடர்ந்து, மற்ற அமைச்சர்கள் அனைவரும் அணி அணியாக பதவியேற்று கொண்டனர். தமிழகத்தில் கடந்த 10 மாதங்களில் மூன்றாவது முறையாக புதிய அமைச்சரவை பதவியேற்பது சுட்டிக்காட்டத்தக்கது. 2016 சட்டமன்றத் தேர்தலில் அதிமுக வெற்றி பெற்றதையடுத்து முதல்வராக ஜெயலலிதா, கடந்த மே மாதம் 22-ல் பதவியேற்றார்.

பின்னர் அவர் உடல் நலக்குறைவால் உயிரிழந்ததையடுத்து கடந்த டிசம்பர் 5ஆம் திகதி நள்ளிரவில் ஓ.பன்னீர்ச்செல்வம் தலைமையிலான புதிய அமைச்சரவை பதவியேற்றது. தற்போது அதிமுக இரண்டாக பிளவுப பட்டுள்ள நிலையில், பரபரப்பான அரசியல் சூழலில் எடப்பாடி பழனிச்சாமி முதல்வராக பதவியேற்றுள்ளார்.

இதேவேளை முதல்வராக பதவியேற்றுள்ள எடப்பாடி பழனிச்சாமி வரும் 15 நாட்களுக்குள் பேரவையில் பெரும்பான்மையை நிரூபிக்க ஆளுநர் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

(மேலும் செய்திகள் உள்ளே)


வெதுப்பகம்
குத்தகைக்கு
வடமராட்சியில் உடன் இயங்கக்கூடிய நிலையில் சகல தளபாடங்களுடனும் குத்தகைக்கு உண்டு. (C-7577)
தொடர்புக்கு:
077 999 7814

கணினி திருத்தம்
உங்கள் வீடுகளுக்கே வந்து கணினிகள் திருத்தி தருகிறோம்! அழையுங்கள்.
GUNA BEST PC 0779086737
லப்டொப் கணினிகள்
திருத்தம் விற்றல் வாங்குதல்
LAPTOP COMPUTERS CCTV CAMERA
REPAIR SALE PURCHASE INSTALLATION
கணினி மதர்போட் சிசிரிவி திருத்தம் விற்றல் பொருத்துதல்
50/12 ஆஸ்பத்திரிவீதி யாழ்ப்பாணம். 522 மானிப்பாய் வீதி யாழ்ப்பாணம்
(அ-7571)

சாரதி தேவை
30 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்ட கார்ச்சாரதிகள்
Call Taxi Companyக்கு தேவை
நன்கு அனுபவமுள்ளவர்களை எதிர்பார்க்கின்றோம் (7980)
தொடர்புகளுக்கு:
077 599 8255, 077 494 9555

ALLIANCE FRANCAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக் கொள்ளுங்கள்
af
பிரெஞ்சு வகுப்புக்கள்
யாழில் 40 வருடங்களாக AF இன் பயணம்
பிரான்ஸ் FOREIGN MINISTRY & FRENCH EMBASSY யின் கீழ்
இயங்குகின்ற ஒரே சர்வதேச நிறுவனம் AF உலகம் முழுவதும் 1000 கிளைகள்.
(இலங்கையில் சர்வதேச பிரெஞ் CERTIFICATES ஐ AF மட்டுமே வழங்குகின்றது)


பிரெஞ்சு மொழிபெயர்ப்புக்கள்.
(யாழில் வேறு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் இல்லை)
International Diploma A 1 பரீட்சைக்கட்டணம்
AF இல் படிப்போருக்கு 4000/- ஏனையோருக்கு 10300/- யாழில் எங்கு படித்தாலும் இப்பரீட்சையை எமது AF இல் மட்டுமே எழுத முடியும்.
ஆரம்பம் சில தினங்களில், உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.
021 222 8093 61, கச்சேரி- நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
கச்சேரி பஸ் நிலையம் → புகையிரதக் கடவை → AF (வெள்ளை மாடிக் கட்டடம்)
(7971)

வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை
100% SATISFACTION GUARANTEED
070 330 5500
021 221 5656
உங்கள் உறவுகளுக்கு துரிதமாகவும் நம்பிக்கையாகவும் பொதிகள் மற்றும் கடிதங்களை உலகின் முன்னணி நிறுவனங்கள் ஊடாக அனுப்பிவைத்திட
அண்ணா அன் கோ
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி யாழ்ப்பாணம் (C-7565)
எம்முடன் இணைந்து இந் நிறுவனங்களின் முகவர்களாக விரும்புவோரும் தொடர்புகொள்ளலாம்


ஓ
சிவமயம்
சிவ யோகசுவாமிகள் அறநெறிப் பாடசாலை திறப்பு விழா
முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு, வேணாவில் கிராம சிறார்களின் நலன்கருதி, சிவ யோகசுவாமிகள் அறநெறிப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு, அதற்கான புதிய கட்டிடம்
18.02.2017 நாளை காலை 9.30 மணிக்கு
ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளின் தாயார்
திருமதி சிவலோசனி கனகரத்தினம்
(ஸ்ரீ சுப்பிரமுனியகோட்டம், கோப்பாய்)
அவர்களால் திறந்து வைக்கப்படும்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
சிவ யோகசுவாமிகள் அறநெறிப் பாடசாலை, வேணாவில், புதுக்குடியிருப்பு.
(7959)

விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்
● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS
V2 TRAVELS-0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
(அ-7323)

கிளி/தருமபுரம் மத்திய கல்லூரி
பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்
இடம் : கிளி/தருமபுரம் மத்திய கல்லூரி
காலம் : 19.02.2017 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : பிற்பகல் 2.30 மணி
அனைத்து பழைய மாணவர்களையும் வருகை தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.
நன்றி
பழைய மாணவர் சங்கம்
கிளி/தருமபுரம் மத்திய கல்லூரி.
(7963)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

aat SRI LANKA
K-AIMS BUSINESS SCHOOL
தொழில்சார் கணக்கியல் கற்கை நெறி ஒன்றை மிக குறைந்த செலவில் பூர்த்தி செய்திட இன்றே இணையுங்கள்
பாடசாலை மாணவர்களுக்கு விசேட கட்டண கழிவுகள்
புதிய பிரிவுகள்
18/02/2017 சனிக்கிழமை ஆரம்பம்
Level 1 - 11.00 am
Level 2 - 09.30 am
Level 3 - 02.00 pm
Free 3 Months English diploma
K-AIMS BUSINESS SCHOOL
T.P - 0768 268 205 / 0773 722 104
No 59, Point pedro road, Ariyakulam, Jaffna
(அ-7573)

மீண்டும் நாளை மூன்றாவது தடவையாக ஓர் அரிய சந்தர்ப்பம் வெளிநாட்டு வேலைவாய்ப்பு - மலேசியா


| JOB CATEGORY | QUT | SALARY (RM) |
|---|---|---|
| உற்பத்தி உதவியாளர் (பெண்) | 20 | 1200 + OT |
| உற்பத்தி உதவியாளர் (ஆண்) | 80 | 1200 + OT |

மலேசியாவிலுள்ள பிரபல்யமான ஆடைத் தொழிற்சாலை ஒன்றுக்கு உற்பத்தி உதவியாளர்களுக்கான விண்ணப்பம் கோரப்படுகின்றது.
நிபந்தனைகள்
- இலவச தங்குமிட வசதி 3 வருடங்கள்.
- வேலை நேரம் 08 மணித்தியாலயங்கள் மேலதிகமாக வேலை செய்யும் நேரத்துக்கு 1.6 வீதமும் சனிக்கிழமை நாட்களில் இரண்டு மடங்கு கொடுப்பனவும் வழங்கப்படும்.
- வாரத்தில் இரண்டு நாட்கள் ஓய்வு / விடுப்பு வழங்கப்படும்.
- முன்னனுபவம் தேவையில்லை.
- வயது 18 - 35
- அரசாங்க பயண அனுமதிக் கட்டணம் ரூபாய் 50,000
- வங்கிக்கடன் வசதி செய்து தரப்படும்.

பொருத்தமானவர்கள் தங்கள் சுயவிபரம், புகைப்படம், கடவுச்சீட்டு, அடையாள அட்டை ஆகியவற்றுடன் நேர்முகத் தேர்வுக்கு சமுகமளிக்கவும்
இடம் : சுபாஸ் விருந்தினர் இல்லம், விக்டோரியா வீதி, யாழ்ப்பாணம். (யாழ். ஆஸ்பத்திரி பின் வீதி)
காலம் : 18.02.2017 நாளை சனிக்கிழமை காலை 9மணி
முற்பதிவுகளுக்கு : யாழ்ப்பாணத்தில் - 077 972 9481, 076 718 3799
கொழும்பு - 011 524 4146
Capital Recruitment International (Pvt) Ltd
No.130 3/1, 3rd Floor, Grand Pass, Colombo 14
அரச அனுமதி இலக்கம் LL No.: 2248
(அ-7566)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.02.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.